R. Cheran

THAYAGAM

# தாயகம்

15 . 10 . 93

75¢

உண்மை:5
தேடல்:15

## மீண்டும் கிளாலிப்பயணம் ஆரம்பம்



அரசியலில் இருந்து விலகுகிறார் அனுரா

## கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதக்குண்டு

கச்சதீவில் இந்திய மீனவர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொலை

இந்தியா ஆட்சேபம்

இந்திய மீனவர் ஆர்ப்பாட்டம்

# EVERGREEN
## IMPORT & DISTRIBUTORS
**(416) 964-8601**
**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி விநியோகமும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு**

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன், மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.**

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

## மீண்டும் கிளாலிப் படகுப் போக்குவரத்து ஆரம்பம்

இராணுவம் தகர்த்து விட்டதாக கூறிய கிளாலித் துறைமுகத்திலிருந்து புலிகள் தங்கள் வழமையான படகுச் சேவையை ஆரம்பித்துள்ளனர். முதல் தடவையாக நடந்த சேவையில் சுமார் 3500 பேர் கிளாலிக்கடலைக் கடந்து யாழ்ப்பாணத்துக்கும் பெருநிலப்பரப்புக்கும் வந்தனர். சுமார் ஐம்பது படகுகள் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை போக்குவரத்தை நடத்தியிருந்தன. பயணிகள் ஏறும் போது விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று கடற்கரையோரம் பறந்து சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதும் யாரும் காயமுறவில்லை.

## கடற்படையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

தங்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குவதாகக் கூறி ஆட்சேபம் தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவரகம் முன்பாக இந்திய மீனவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். தங்கள் மீதான தாக்குதல்கள் தொடருமாயின் தென் கிழக்கு இந்திய துறைமுகங்கள் மீது தடைப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு இளம் மீனவர் முன்னணியின் தகவல்படி இதுவரையும் ஐந்து மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டிருக்கிறார்கள். இலங்கைப் படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை நிறுத்தாவிட்டால் தமிழக துறைமுகங்களை தடுக்கும் போராட்டத்தை தொடங்கப் போவதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

புலிகளுடன் தொடர்புள்ளதாகக் கூறியே இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைத் தாக்கி வருகின்றனர். இந்த விடயம் வன்செயலுக்கு வழிவகுக்கலாம் என்று ஜெயலலிதா நரசிம்மராவுக்கு தெரிவித்துள்ளார். பகிரங்க கடிதம் ஒன்றில் மீனவர்கள் மட்டுமன்றி தமிழக மக்கள் முழுவருமே நடவடிக்கையில் ஈடுபட வேண்டி வரும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். இது குறித்து கொழும்புடன் நரசிம்மராவ் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் மீனவர்கள் திருப்பித் தாக்க முற்பட்டால் அதனால் பல வேண்டத்தகாத விபரீதங்கள் நிகழலாம் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

## அரசியலிலிருந்து ஒதுங்குகிறார் அனுரா

தான் அரசியலிலிருந்து விலகுவதாக அனுரா பண்டாரநாயக்க அறிவித்துள்ளார். குடும்ப சண்டை காரணமாகவே இவர் பதவி விலகுகிறார்.

44 வயதான அனுரா 'சுதந்திரக்கட்சியின் முழுக்கட்டுப்பாட்டையும் எடுத்துள்ள சதிகாரர்களின் செயலால் தான் இந்த முடிவை எடுக்க வேண்டி நேரிட்டதாக' கூறியுள்ளார்.

இந்த அவமானத்தை தன்னால் இனியும் தாங்க முடியாது என்றும் தனக்கு எஞ்சியுள்ள மரியாதையான விடயம் விலகுவது தான் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த ராஜினாமா கடிதத்தை அவர் சிறிமாவிடம் ஒப்படைத்துள்ளார்.

தனது சகோதரி சந்திரிகா தலைமைப்பதவியை ஏற்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து அனுரா தெரிவித்திருந்த கருத்துக்களே இந்த நிகழ்வுக்கு மூல காரணமாய் அமைந்திருந்தது. 1952 இல் பண்டாரநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரக்கட்சியில் இருந்தும் அரசியலிலிருந்தும் தான் ஒதுங்குவதாக அனுரா தெரிவித்திருக்கிறார்.

தான் பதவியை விட்டு விலகி லண்டன் செல்லவிருப்பதாக தனக்குக் கூறியதாகவும் இந்த முடிவை மீள்பரிசீலனை செய்யும்படி அவரை தான் கோரியதாகவும் அனுரா தனது முடிவில் உறுதியாக இருப்பதாகவும் அனுராவின் நண்பரும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்திருக்கிறார்.

தான் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டு 89 நாட்களாகின்றது என்றும் ஏன் தான் இடைநிறுத்தப்பட்டார் என்பது பற்றித் தெரியாது என்றும் தன் மீதான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய அறிக்கை இன்னமும் தரப்படவில்லை என்றும் கட்சிக்கு தன் மீது எந்த குற்றமும் சுமத்தும் அளவுக்கு துணிச்சல் இல்லை என்றும் அனுரா கூறியுள்ளார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் தனது கடமைகளை செய்ய விடாது தடுக்கப்பட்டுள்ளதாகவும் தான் ஸ்தம்பித்துள்ளதாகவும் தன் மீது சுமத்தப்பட்ட விலங்குகள் அகற்றப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற விதிகளின்படி கட்சி இவரது ராஜினாமாவை ஏற்றுக் கொண்டால் இவரது பாராளுமன்ற ஆசனமும் பறிபோகும். இவர் அமெரிக்காவில் விரிவுரைகள் நிகழ்த்த செல்லலாம் என்று கட்சியில் சிலர் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பில் மனிதக் குண்டு

கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதக் குண்டு ஒன்று யாரையாவது கொலை செய்யப்பட பயன்படுத்தும் நோக்கம் கொண்டிருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர். பிளாஸ்டிக் வெடிகுண்டுகளும் உருக்குக் குண்டுகளும் கொண்ட இந்தக் குண்டு ராஜீவைக் கொன்ற குண்டு போன்றது. 3.5 கிலோ நிறையான வெடிமருந்துகளும் ஒரு கிலோ நிறையான உருக்குக் குண்டுகளும் மொதர கடற்கரையில் அடைக்கப்பட்ட பெட்டி ஒன்றில் காணப்பட்டது. அப்பகுதியில் பொலிசார் தேடுதலில் ஈடுபட்ட போதே இது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

பொலிசாரால் பிடிக்கப்படக் கூடும் என்ற அச்சத்தில் இது கடற்கரையில் வீசப்பட்டி ருக்கலாம் என்று பொலிசார் கருதுகின்றனர். இந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் சுமார் 25 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டெனிம் காற்சட்டை ஒன்றில் ஒரு அங்குலத் தடிப்பில் இந்த வெடிமருந்துகள் வைக்கப்பட்டு தைக்கப்பட்டிருந்தன. பொக்கட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கும் இரண்டு சுவிட்ச் மூலம் செயற்படக் கூடியதாக இது அமைக்கப்பட்டிருந்தது.

# புலி முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டனர்

கடந்த கிளாலி யுத்தத்தில் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். சிங்கரசா அருள்நாயகம் என்ற நாயகன், மேஜர் துஸ்யந்தன் எனப்படும் தர்மலிங்கம், சுதன்யா எனப்படும் நடராசா சுபாசினி, வடமராட்சி பொறுப்பாளரான செந்தூரன் பிரேம்நாத் எனப்படும் சிதம்பரம்பிள்ளை சிவரூபன், யாழிசை எனப்படும் மனோ திருலோகசிங்கம் செல்வராணி ஆகியோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்ட 91 புலிகளின் பெயர்களை படையினர் உறுதி செய்திருக்கிறார்கள். புலிகள் தங்களில் 126 பேர் கொல்லப்பட்டதாக தெரிவித்தனர்.

இராணுவத்தில் 111 பேர் கொல்லப்பட்டதுடன் ஏழு பேர் காணாமல் போயுள்ளனர்.

# ஏருவூரில் பொலிசார், பொதுமக்கள் மோதல்

ஏருவூரில் நடைபெற்ற ஒரு மோதல் காரணமாக ஏழு பொலிசாரும் உதவிப் பொலிஸ் அதிபரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். தேங்காய் கொண்டு சென்ற லொறி ஒன்றை மறித்த பொலிசார் அதிலிருந்த சிங்களப் பத்திரிகைகளைத் தரும்படி கேட்டனர். அதற்கு சாரதி மறுக்கவே பொலிசார் சாரதியையும் மற்றவர்களையும் தாக்கினர். இதையடுத்து அப்பகுதியில் உள்ளவர்கள் கற்களாலும் தடிகளாலும் பொலிசாரைத் தாக்கினர். பொலிசார் கூட்டத்தினரைத் தாக்கியதில் சிலர் காயமடைந்தனர். இரவு சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற பொலிசார் கடைகளை உடைத்ததுடன் வாகனங்களையும் சேதமாக்கினர். கடைகள் சில கொள்ளையிடப்பட்டன. வீடுகளும் உடைக்கப்பட்டன. இதனால் இராணுவத்தினர் அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டு பொலிசார் அடையாளம் காணப்பட்டு இடைநிறுத்தப பட்டிருக்கிறார்கள்.

# வரவுசெலவுத் திட்டத்தில் துண்டு விழுகிறது

இலங்கையின் வரவுசெலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான நிதியில் 6318 கோடி ரூபாவிற்கு துண்டு விழுந்திருக்கிறது. மொத்த செலவீனம் 13 370 கோடி என்றும் இதில் 6998 கோடி ரூபா வெளிநாட்டு, உள்நாட்டு கடன் மூலமும் நிரப்பப்படும் என்றும் மீதிப் பணம் வரிகள் மூலம் பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# ஐரோப்பாவில் உள்ள தமிழ் அகதிகள் அனுப்பப்பட மாட்டார்கள்

சமீபத்தில் இலங்கை வந்த ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவினர் தங்கள் நாடுகளிலிருந்து தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்று தெரிவித்திருக்கின்றனர். அந்த அகதிகள் நாடு திரும்புவதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை என்பதால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

கொழும்பில் பத்திரிகை யாளர்களுடன் பேசியபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டாலும் அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திருப்பிச் செல்லக் கூடிய நிலைமை இல்லை என்பதை ஜேர்மன் பிரதிநிதி ஒத்துக் கொண்டார்.

ஜேர்மனியில் முப்பதாயிரம் தமிழர்கள் இருப்பதாகவும் அதில் பன்னிரண்டாயிரம் பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டதாகவும் மற்றவர்கள் குறித்து விசாரணை நடப்பதாகவும் ஜேர்மன் பிரதிநிதி தெரிவித்தார்.

பயங்கரவாதத்துடன் தொடர்பு டையவர்களுக்கு தஞ்சம் வழங்கப்பட மாட்டாது எனவும் அதிகள் நாடு திரும்ப சரியான பாதுகாப்பு உறுதி வழங்கப்பட்டால் மட்டுமே அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் ஜேர்மன் பிரதிநிதி தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு பேச்சுவார்த்தையே தீர்வு சிறிமா கூறுகிறார்

வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டுமே அன்றி யுத்தத்தினால் அல்ல என்று சிறிமா தெரிவித்திருக்கிறார். தெகியத்தகண்டிய என்ற இடத்தில் பேசிய சிறிமாவோ 'வடக்கில் பொதுமக்கள் அகதிகளாகி விட்டார்கள், அங்குள்ள பொதுமக்கள் எங்களைப் போன்றவர்கள், அவர்கள் புலிகள் அல்ல, யாழ்ப்பாண மக்கள் எங்களுக்கு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து தந்தார்கள். அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால் தான் பிரச்சனை வளர்ந்தது. இது பேச்சுவார்த்தையால் மட்டுமே தீர்க்கப்பட முடியும். அந்த பிரச்சனையை யுத்தத்தால் தீர்க்க முடியாது. வடக்கு கிழக்கை இணைப்பதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறோம்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் அகதிகளாகி விட்டார்கள். ஆனால் யுத்தத்தை பயன்படுத்தி பலர் கோடீஸ்வரராகி விட்டார்கள். யுத்தம் முடிந்ததும் வியாபாரமும் முடியும். வடக்கு கிழக்கு யுத்தம் கூடுகிறதே தவிர குறையவில்லை. அதை முடிக்கவும் அரசு விரும்பவில்லை' என்று தெரிவித்திருக்கிறார்.

# கச்சதீவில் இந்திய மீனவர் சுட்டுக் கொலை

கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றி இலங்கை அரசும் இந்திய அரசும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன. இலங்கை வெளிநாட்டு செயலாளர் பேனட் திலகரத்தின இந்திய வெளிவிவகார அமைச்சர் டிக்சித்துடன் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

திலகரத்தினவும் இரண்டு கடற்படை அதிகாரிகளும் கடந்த வியாழன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த இந்தியா பயணமானார்கள். இவ்வாறான நிகழ்ச்சிகள் இனிமேல் நடைபெறாது தடுப்பதே இவர்களின் விஜயத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

இரு சம்பவங்களின் போது மூன்று இந்திய வள்ளங்கள் தாக்கப்பட்டு நான்கு மீனவர்கள் கொல்லப்பட்டும் நால்வர் காயமுற்றும் இருந்தனர். இவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இந்திய கடல் பிராந்தியத்துக்குள்ளேயே நடைபெற்றிருக்கிறது. காயமடைந்த மீனவர்கள் கொல்லப்பட்டவர்களின் உடல்களைக் கொண்டு வந்து ராமேஸ்வரம் பொலிசிடம் கையளித்தனர். காயமடைந்தவர்கள் ராமேஸ்வரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது இந்திய தூதுவர் நரேஷ்வர் தயாலைச் சந்தித்து இலங்கைக் கடற்படை பாக்குநீரிணையில் பெரும் அழுத்தங்களுக்கு மத்தியில் பணிபுரிவதாக குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவரகம் இது குறித்து விசாரிக்குமபடி கேட்டிருந்தது.

இந்தியாவில் உள்ள முக்கிய இலங்கைத் தூதுவரக அதிகாரி ஒருவரை அழைத்து இந்திய வெளிநாட்டமைச்சு இது குறித்து கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இது குறித்து விசாரிக்கும்படி ஏ.சி.எஸ்.ஹமீது விசாரணைக்குழு ஒன்றை அமைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

# காமினி பொன்சேகா- ஐ.தே.க மோதல்

உப சபாநாயகரான காமினி பொன்சேகாவுக்கும் ஐ.தே.கட்சி தலைமைப்பீடத்திற்கும் இடையில் பெரும் இழுபறி ஏற்பட்டுள்ளது. ஊழல்களை விசாரிக்க விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை ஒன்றிற்கு கட்சியின் கட்டுக்கோப்புக்கு இணங்க வாக்களிக்காமல் விட்டதால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் நோக்குடன் கட்சி விசாரணை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. அரசாங்க கட்சியினர் இவ்வாறான விசாரணைக்குழு அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த வேளை, காமினி பொன்சேகா அதற்கு ஆதரவு தெரிவித்திருந்தார். அமைச்சர்கள் பெஸ்டஸ் பெரேரா, பவுல் பெரேரா, ஜோன் அமரதுங்க ஆகியோர் தலைமையில் விசாரணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை செய்ய ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த விசாரணைக்குழுவுககு தான் தனது சட்டத்தரணியுடன் வர அனுமதிக்க வேண்டும் என்ற காமினியின் கோரிக்கைக்கு குழு இணங்க மறுத்து அவர் சாட்சியங்களை மட்டுமே கூட்டி வர முடியும் என்று தெரிவித்திருக்கிறது. ஆனால் தான் சாட்சியங்களை கூட்டி வரப் போவதில்லை என்றும் சகல விசாரணைகளும் ஒலிப்பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் காமினி கூறியிருக்கிறார்.

# பல்கலைக்கழகம் செல்ல தாய்மொழித் தேர்ச்சி

இனிமேல் பல்கலைக்கழக பிரவேசத்திற்கு தாய்மொழியில் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதுவரையும் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு நான்கு பாடங்கள் தேவைப்பட்டன. தற்போது இவற்றை மூன்றாகக் குறைத்து விட்டு நான்காவது பாடமாக தாய்மொழி கற்பிக்கப்படும்.

தாய்மொழி அறிவுக்கு ஐம்பது புள்ளிகளும் பொது அறிவுக்கு முப்பது புள்ளிகளும் இரண்டாவது மொழியாக மற்ற மொழியைக் கற்பவர்களுக்கு இருபது புள்ளிகளும் வழங்கப்படும்.

# தென்,வடமேல் மாகாணங்களுக்கு புதிய முதல்வர்கள்

தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றிற்கான முதலமைச்சர் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. ஐ.தே.கட்சி அதிக ஆசனங்களை இந்த மாகாணங்களில் பெற்ற போதும் சுதந்திரக் கட்சியின் பொதுமக்கள் கூட்டணியும் காமினியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டாக பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அரசாங்கம் ஐ.தே.கட்சியின் முதல்வர்களையே நியமித்திருந்தது. தற்போது காமினி ஐ.தே.கட்சியில் சேர்வதில் ஏற்பட்ட இழுபறி காரணமாக சுதந்திரக்கட்சி கூட்டணியை காமினி அணி ஆதரிக்க முடிவு செய்துள்ளது.

இந்த முதல்வர் நியமனம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. தற்போது நீதிமன்றம் இந்த நியமனங்களை ரத்துச் செய்திருக்கிறது. இதனால் தற்போது தென் மாகாணத்தில் பொதுமக்கள் கூட்டணியைச் சேர்ந்த அமரசிறி தொடங்கொடையும் தென்மேல் மாகாணத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஜி.எம். பிரேமச்சந்திரவும் முதல்வர்களாக சத்தியப்பிரமாணம் செய்திருக்கிறார்கள்.

தற்போது எதிர்க்கட்சிகள் கட்டுப்பாட்டில் மேல்மாகாணம் உட்பட மூன்று மாகாணங்கள் உள்ளன.

## ஆளுனர் ராஜினாமா

வடமேல் மாகாணத்தின் மாகாணசபைக்கு ஐ.தே.கட்சியின் முதலமைச்சரை நியமித்த ஆளுனர் மொன்டேகு ஜயவிக்கரம தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவர் சட்டத்துக்கு முரணான வகையில் முதல்வரை நியமித்தார் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை இவர் உடல் நலமின்மை காரணமாக தனது பதவியை ராஜினாமா செய்தார் என்று அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் இவரை ராஜினாமா செய்யும்படி வற்புறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஊர்வலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் ஐவர் பலி

தென் பகுதியில் நடைபெற்ற ஊர்வலம் ஒன்றின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஐவர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். புதிய மாகாண முதல்வர் பதவியேற்றதை அடுத்து காலியில் நடைபெற்ற ஊர்வலத்தின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இந்த ஊர்வலத்திற்கு பொலிசார் ஏற்கனவே தடை விதித்திருந்தனர். முதலில் பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். இதனால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வீச்சில் ஈடுபட்டதால் தாங்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்தனர். தென் மாகாணசபையின் புதிய முதல்வராக அமரசிறி தொடங்கொட தெரிவு செய்யப்பட்டதை அடுத்தே இந்த ஊர்வலம் நடைபெற்றிருந்தது.

ஆனால் சுமார் இருபதாயிரம் பேர் கலந்து கொண்ட கூட்டத்தில் தொடங்கொட உரையாற்றியபோது ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் அவர் மீது கல்லெறிந்ததாகவும் ஆத்திரமடைந்த மக்கள் முன்னணியினர் அவர்களைத் திருபபித் தாக்கியதாகவும் அப்போதே துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாகவும் சாட்சியங்கள் கூறுகின்றன.

## மண்சரிவில் இறந்தோரில் 15 உடல்கள் மீட்பு

மண்சரிவில் புதைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட மீட்புப் பணியாளர்கள் சுமார் பதினைந்து உடல்களை மீட்டுள்ளனர். சுமார் அறுபது பேர் வரை இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. சில உடல்கள் மீட்கப்படாமலே போகலாம் என்று கூறப்பட்டது.

இராணுவத்தினரும் தொண்டர்களும் புல்டோசர் உதவியுடன் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இறந்தவர்களில் பெண்களும் மழை காரணமாக பாடசாலை செல்லாமல் வீட்டில் நின்ற குழந்தைகளுமே இறந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

தானும் தனது மனைவியும் குழந்தையும் காலை உணவு அருந்திய போது மண் சரிந்ததாகவும் தான் சிறு துளை ஒன்றை அமைத்து வெளியே வந்ததாகவும் மனைவி, குழந்தைக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றும் ஜெயசேன என்பவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

சரதியேல் என்பவர் மனைவி, பேரப்பிள்ளைகளை இழந்துள்ளார். தான் கடைக்குச் சென்ற சமயம் மனைவி சமைத்துக் கொண்டிருந்ததாகவும் வீட்டுக்கு திரும்பிய சமயம் மலை சரிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கம் மேலும் 130 பேரை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப படுத்தியுள்ளது.

பத்து நாட்கள் தொடர்ந்து மழை பொழிந்ததால் மேலும் மண் சரியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்பு புதைந்ததாக செய்தி வெளிவந்த பஸ் ஒன்று உண்மையில் புதையவில்லை. மண் சரிவிலிருந்து தப்ப பஸ்திரும்பிய போது ஒரு பெண் கொல்லப்பட்டார். மற்ற

# இப்படியும் சேதிகள்-

**ஜனமித்திரன்**

வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட புனருத்தாரன, நலன்புரி அமைச்சின் கீழ் இயங்கும் அத்தியாவசிய சேவை ஆணையாளர் அலுவலகம் நிவாரணத்தை தட்டிச் சுத்தும் நிறுவனமாக மாறியுள்ளது.

இவ் அமைச்சின் செயலாளராக கடமையாற்றும் கிறிஸ்ட்டி சில்வா அவர்கள் ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்தி திட்டத்திலிருந்து(UNDP) இலங்கை நாணயத்தில் ரூபா 15,000க்குச் சமமான வேதனமும், அமைச்சின் செயலாளர் என்ற ரீதியில் ரூபா 14,000 சம்பளமாகவும், அத்தியாவசிய சேவைக் கடமைக்காக சம்பளத்தில் 25 வீதத்தை (ரூபா 3,625 ஐ) மேலதிக படியாகவும் வார இறுதி நாட்கள், விடுமுறை நாட்களுக்கென மேலும் ரூபா 3625 ஐ விசேட படியாகவும் பெற்ரேல் செலவாக ரூபா 8000 ஐயும் பெறுவதோடு மொத்தத்தில் மாதமொன்றுக்கு ரூபா 44,750ஐ இவர் பெற்றுக் கொள்கிறார்.

அமைச்சின் முன்னாள் செயலாளரான சரித்த ரத்வத்தை சேவையிலிருந்து ஒய்வு பெற்று ஜனசவிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளராகவும் அத்தியாவசிய சேவை ஆணையாளராகவும் செயலாற்றுகிறார். இவரது ஒய்வூதியம் ரூபா 12,000 ஆகும். ஜனசவிய நிதியத்தின் பணிப்பாளர் பதவிக்கான சம்பளம் அமெரிக்க டொலர் 1,000 (இலங்கை நாணயத்தில் ரூபா 48000 ) அத்தியாவசிய சேவைக்கான விசேட படி (25 வீதம்) ரூபா 3625 ஆகும். வார இறுதி நாட்கள் விடுமுறைநாட்களுக்கான படி ரூபா 3125 பெட்ரோல் செலவுக்கான படி ரூபா 18,200 மாத மொன்றுக்கு மொத்தமாக இவருக்கு கிடைக்கும் தொகை ரூபா 68,570 ஆகும்.

திட்டமிடல் பணிப்பாளர் T. லங்கா கேஷன் அவர்களின் சம்பளம் ரூபா 7,325 ஆகும். ஆசியா அபிவிருத்தி வங்கியிடமிருந்து ரூபா 6,000 படியாகவும் கிடைக்கிறது. விடுமுறை கால சேவைக்காக ரூபா 1821.50 ம் பெற்ரோல் படியாக ரூபா 1800 ம் இவருக்கு வழங்கப்படுகிறது. மொத்தமாக ரூபா 16,966.50ஐ மாதவருமானமாக பெறுகிறார்.

அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர் ஏ.எம். சந்திரபால அவர்களின் சம்பளம் ரூபா 8,075 ஆகும். அத்தியாவசிய சேவைப் படியாக ரூபா 1918.75ஐயும் D.R.C.C. படியாக மேலும் ரூபா 1918 ஐயும் வேதனமாக பெறுகிறார்.

இவ்வாறாக அத்தியாவசிய சேவை மேலதிக ஆணையாளர், நிருவாக அதிகாரிகள், கணக்காய்வாளர்கள் ஆகியோர் தமது பதவிக்குரிய சம்பளத்திற்கும் மேலாக அத்தியாவசிய சேவைக்காக 25 வீதம் வார இறுதி நாட்கள் விடுமுறை நாட்கள் சேவைப்படியாக 5 வீதம் என்னும் வகையில் பலவித விசேட படிகளையும் பெறுகின்றனர் இதனிடையே அத்தியாவசிய சேவைக்காக தற்போது வழங்கப் படும் 25 வீதம் படியை 50 வீதமாக உயர்த்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். (தகவல் ராவய அக்டோபர் 03, 1993)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் விசேட புலனாய்வுப் பிரிவின் தலைவராகவிருந்த முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு ஏ.சி. லோறன்ஸ் அவர்களுக்கு எதிராக மூவாயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

ஆனால் அரசியல் பெரும்புள்ளிகள் அனேகரது மோசடிகள், ஊழல்கள் தொடர்பான தகவல்கள் திரு லோறன்ஸ் வசம் இருப்பதால் திரு லோறன்ஸ்க்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளதாம்.

தகவல்( ராவய அக்டோபர் 03,1993)

* * *

கடந்த மாகாண சபை தேர்தலின் போது பிரதேசத்து ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக செயல்படவில்லை என்ற காரணத்தால் பொரலஸ்கமுவ மகாவித்தியாலய அதிபர் திரு.மேர்வின் குணசேகரவை கட்டாய ஒய்வில் அனுப்புவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந் நடவடிக்கைக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

தகவல் ராவய செப்டம்பர் 26.9.93

* * *

தற்போது தேசிய நீர்வள நீர் வழங்கல் சபையினாலேயே பாரிய கொழும்பு பிரதேசத்திற்கு நீர் வழங்கலும் நீர் வினியோகமும் செய்யப்பட்டு வருகிறது இதனை தனியார் துறை வர்த்தக நிறுவனமொன்றுக்கு பாரமளிப்பது தொடர்பாக அரசாங்க மேல்மட்டத்தில் கவனம் செலுத்தப்படுவதாக அறிய முடிகிறது.

(தகவல் ராவய செப்டம்பர் 26,1993)

1994ம் ஆண்டு பாதுகாப்பு செலவுகளுக்காக 3600 கோடிரூபாய் பணத்தை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது. இத் தொகை பாதுகாப்பு செலவுக்காக 1993 ம் ஆண்டு ஒதுக்கீடு செய்த தொகையை விட 1300 கோடி ரூபாய் அதிகமாகும்.

(தகவல் ராவய செப்டம்பர் 26,1993)

கிளாலிப் படகுப் போக்குவரத்து ஆரம்பித்ததை அடுத்து யாழ்ப்பாணம் சென்ற ராவய பத்திரிகையின் செய்தியாளர் குழு ஒன்றும் கொழும்பு திரும்பியதாக கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் சென்று தகவல் சேகரித்த இக்குழுவினர் பெற்று வந்த செய்திகள் அடுத்த தாயகம் இதழ்களில் வெளியாகும்.

சகல விதமான மீன் வகைகள், இறைச்சி வகைகள், மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள...

## Antony Brothers Peoples Market

**1472 Queen St West**
**Tel:516 3903**


**உடன் மான் இறைச்சி இவ்வாரம் கிடைக்கும்**

### இவ்வாரத்து விசேட விலைகள்

| | |
|---|---|
| அரிசி \| பார்பொயில் | 5.99 |
| பால் (Homo 2%) | 2.99 |
| Yogurt | 1.59 |
| EXL முட்டை | 1,69 |
| Vegetable Oil | 2.99 |
| Rich N' Ready | 1.99 |
| வெங்காயம் 10 LB | 1.99 |
| சகலவிதமான மீன் டின்கள் | 1.99 |
| பிஸ்கட் வகைகள் | .19 |
| Sanyo, Maxell (T120) Blank Cassettes (Incl Tax) | 2.99 |


சகல விதமான மீன் வகைகளும் மலிவு விலையில்

## WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL










### DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




### NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.

### VITAMOL by DR. ROBERT

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY ; FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




### CHATAK: Curry Excellence

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.

# பூகம்பத்தில் இறந்தவர் தொகை குறைவே

இந்திய பூகம்பத்தில் இறந்தவர்களின் தொகை தற்போது 9748 என்று கணக்கிடப்பட்டுள்ளது. முப்பதாயிரம் பேர் வரை இறந்திருக்கலாம் என்பது மிகைப்படுத்தப்பட்ட கணிப்பீடு என்றும் தெரிவிக்கப்படுகிறது. மகாராஷ்டிர முதல்வர் சரத் பவார் கூறும் போதே இந்த கணிப்பீடுகள் மிகைப்படுத்தப் பட்டவை என்று தெரிவித்தார்.

இராணுவ மீட்புப் படைகள் இதுவரையும் 9748 உடல்களை மீட்டிருக்கின்றன. பல இடங்களில் தப்பியோடியவர்கள் பல நாட்களாக வீடு திரும்பவில்லை. இதனால் இவர்கள் இறந்து விட்டார்கள் என்று நம்பப் பட்டிருந்தது. 86 கிராமங்களிலிருந்து மீட்புப் படைகள் வாபஸ் பெறப்பட்டிருக்கிறார்கள்.

413 வைத்தியர்களும் இரண்டாயிரம் தாதிகளும் அருகில் உள்ள வைத்தியசாலைகளிலும் அகதி முகாம்களிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

# வெளிநாட்டுப் பணம்

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அனுப்பும் பணத் தொகை தற்போது அதிகரித்துள்ளது. சென்ற வருடம் மட்டும் 2381 கோடி ருபா வெளிநாட்டில் வாழும் இலங்கை யர்களால் அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் 56.8 வீதம் மத்திய கிழக்கில் தொழில் பார்க்கும் இலங்கையர்களால் அனுப்பப்பட்டது.

# பாலையிலும் பயிர் வளர்ப்பார்..

## சி.சிவசேகரம்

இலங்கைத் தமிழ் எழுத்து தனக்கென்று ஒரு தனியான இடத்தை வலியுறுத்தவும் தமிழகத்தின் சஞ்சிகைகளினதும் சினிமாவினதும் நிழலினின்று விடுபடவும் முற்பட்டது. இதன் விளைவாக, ஒரு புதிய எழுத்தாளர் பரம்பரை உருவானது. ஆயினும், நாடகத் துறையின் விருத்தி, ஏனோ பின் தங்கியே இருந்தது.

சமுதாய உணர்வுள்ள நாடகங்களை வழங்கும் ஆர்வத்துடன் முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்துடன் உறவுடைய படைப்பாளிகள் செயற்பட்ட போதும், சிங்கள நாடக மேடையின் விருத்தியுடன் ஒப்பிடத்தக்க விருத்தியைத் தமிழ் நாடகமேடை பெறவில்லை. இதற்கான காரணங்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்கு உள்ளேயே நாம் தேடவேண்டியுள்ளது புறக் காரணங்களாக, அரச ஆதரவின் போதாமை போன்றவற்றைக் கூறிச், சிங்கள நாடகத் துறையின் எழுச்சிக்கான காரணம், ஒரு சமுதாய விழிப்புணர்வு என்பதை எவரும் மறைத்துவிட முடியாது. சிங்கள நாடக உலகின் மறுமலர்ச்சிக்கு எதிரிவீர ஸரத்சந்திர ஆற்றிய பணி முன்னோடியானதும் அளவிற் பெரியதுமாகும். சிங்கள மரபையும் மேலை நாடகத்துறையின் நவீனத்து வத்தையும் ஒருங்குபடுத்திய அவரது 'மனமே' 'ஸிங்ஹபாகு' போன்ற நாடகங்களைத் தொடர்ந்து சிங்கள நாடகத்துறை நவீனத்துக்கும் சமுதாய உணர்வுக்கும் நாடமேடையிலும் பாலமமைத்தது. ஸரத்சந்திரவின் பெரும் ஆற்றலை மட்டுமே கொண்டு சாத்தியமான ஒரு கருமமாகச் சிங்கள நாடக இயக்கத்தின் வளர்ச்சியைக் கேவலமாக மதிப்பிட்டு விடமுடியாது. தமிழ்ச் சமுதாயம் இத்தகையதொரு கலாச்சார மறுமலர்ச்சிக்கு ஆயத்தமாக இருந்ததா என்ற கேள்வி முக்கியமானது. ஸரத்சந்திரவின் வெற்றியையடுத்து அப்போது பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரை யாளராக இருந்த வித்தியானந்தன் ராவணேசன், கர்ணன் போர் என்ற நாடகங்களை மரபு சார்ந்த கூத்து முறைகட்டு நவீனத்துவம் தரும் முனைப்புடன் தயாரித்தார். ஆயினும் இவை இலங்கைத் தமிழ் நாடகத்திற் குறிப்பிடத்தக்க ஒரு உந்துதலை அளித்ததாக என்னுற் கருத முடியவில்லை. வித்தியானந்தனின் முயற்சி வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்குரியதும் என்பது ஒரு விஷயம், ஆயினும் தமிழ் நாடகத்துறைக்கு ஒரு புதிய உத்வேகத்தையும் ஒரு புதிய திசையையும் காட்டுவதற்கான ஆளுமையை அவரது தயாரிப்புக்களிற் காணமுடியாமைக்கு அன்றைய தமிழ்ச் சமுதாயச் சூழலும் ஒரு காரணம். தமிழரது அரசியற், சமுதாய உணர்வுகளின் தேக்க நிலையை முறியடிக்கக் கூடிய ஒரு அரசியற் தலைமை விருத்தியடையாத ஒரு சூழலில், நாடகம் போன்று வெகுஜன ஈடுபாட்டை நாடி நிற்கும் ஒரு கலைத் துறையில் நாம் அதிகம் எதிர் பார்த்திருக்க முடியாது தான். ஆயினும் சிங்கள நாடகத் துறையின் வளர்ச்சியின் பாதிப்புகளில், தமிழ் நாடகத்துறையின் நிலை பற்றிய அக்கறையும் தரமானதும் சமூகப் பிரக்ஞையுடையனவுமான நாடகங்களைத் தயாரிக்கும் முயற்சிகளும் உள்ளடங்குவன.

இதன் விளைவாகக் கனதியான நாடகங்களைத் தயாரிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இதிலும் இடதுசாரிகளது பங்களிப்பு முக்கிய மானது. ஆயினும் ஒரு உன்னதமான தமிழ் நாடக இயக்கத்தைக் கட்டியெழுப்பக் கூடியவாறு ஆற்றலும் சமுதாயப் பார்வையும் எழுத்துத் துறையிற் போல் ஒருங்கமையத் தவறிவிட்டன. 1960 களின் நடுப்பகுதியிற் சமூக உணர்வுடனும் தெளிவான இடதுசாரி முனைப்புடனும் குறிப்பிடத்தக்க நாடகங்கள் வந்தன. ஆயினும் இவை தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெறத் தவறின. இதற்கான அரசியற் காரணங்கள் முக்கியமானவை ஆயினும் நவீன நாடகம் பற்றிய புரிந்துணர்வின் போதாமை நம்மாற் புறக்கணிக்க இயலாத ஒரு விஷயம். முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் எழுச்சி

16ம் பக்கம் பார்க்க..

# முனியின் பதில்கள்



முக்காலும் அறியக்கூடிய முனிவரே இக்கால தமிழீழத்தில் நடக்கும் போரில் இறுதி வெற்றி யாருக்கு என ஆருடம் கூறுவீரா?
ப. காங்கேய சர்மா மொன்றியால்
சிங்களவரால் புலிகளை வெல்ல முடியாது. அதே சமயம் புலிகளால் தமிழரை வெல்ல முடியாது இறுதி வெற்றி தமிழருக்கே.

40 ஆண்டு சமஷ்டி கட்சி அமைத்து திரு எஸ்.ஜே.வி. கேட்ட சமஷ்டியைத்தானே இன்னும் கேட்கிறுர்கள்.சிங்கள அரசு கொடுக்குமா?
ப. காங்கேயசர்மா
கொடுக்காது. புத்தியிருக்கப்போ சக்தியில்லே. சக்தியிருக்கப்போ புத்தியில்லே!

குஷ்பு மீது தாங்கள் கொண்டுள்ள மோகம் இருவரும் சேர்ந்து கனடாவில் சினிமாவில் நடிக்கவா?
ப. காங்கேயசர்மா மொன்றியால்
அது சரி... எனக்கு என்ன வேஷம் ஹீரோவா ...அல்லது அப்பா வேஷம்தாஞ...?

கனடாவில் வசதியாக வாழ தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?
ப. காங்கேயசர்மா மொன்றியால்
பத்திரிகை, சஞ்சிகை மட்டும் ஆரம்பித்து விடாதீர்கள்.

தாயகம் இப்போதெல்லாம் ஏன் பிந்தி வருகின்றது?
மோகன், ஸ்காபரோ
'முந்தி' வந்த பத்திரிகைகளில் தாயகமும் ஒண்டு என்று யாரும் சொல்லி விடக்கூடாது என்பதுதான் காரணமோ?
அல்லது ஆசிரியர் யுத்த முனையில் இருந்து செய்தி எடுத்துக்கொண்டிருக்கின்ருரோ என்னவோ!

அழிவிஞல் ஒரு தீர்வை கொண்டுவர முடியும் எனக் கனவு காணும் இலங்கைத் தலைவர்கள் பற்றி....
சிறிதரன் ஒட்டாவா
நசுக்கப்பட்ட நம்பிக்கைகளிலிருந்து ஒடுக்கப்பட்ட வளர்ச்சியிலிருந்து திருடப்பட்ட முறுவலிலிருந்து சிதைவுகளிலிருந்து சித்திர வதைகளிலிருந்து இரத்தம் உறைந்த சுவர்களிலிருந்து வாழ்வினதும் மரணத்தினதும் நடுங்கங்களிலிருந்து புதிய வாழ்வொன்று கிளர்ந்தெழும்.

அமெரிக்கா உணவனுப்ப அதை ஏற்றுக்கொண்டு இப்போது அமெரிக்காவையே அடிக்கும் சோமாலியர்களைப்பற்றி....
ராஜன் ஸ்காபரோ
சோரு சுதந்திரமா சொல் மனமே.. சோமாலி மணமே...

சமீப காலமாக தாயகம் மதம் பற்றி எழுதி வருவது வரவேற்கத் தக்கதேயாயினும் அவற்றிஞல் ஏற்படும் எதிர் விளைவுகள் பாரதூர மானவையாக இருக்கக் கூடுமல்லவா? இவ்வகை கட்டுரைகளைத் தடுப்பதும் தவிர்ப்பதும் தாயகத்திற்கு நல்லதென்றே நான் கருதுகின்றேன். முனியாரே உங்கள் கருத்து என்ன?
ஜெயாணந்தன், ரொறன்ரோ
ஊரே கல்லெறிந்து ஒரு பெண்ணைக் காயப்படுத்திக் கொண்டிருந்த நேரத்தில் 'எவன் பாபம் செய்யாதவஞே அவன் இவன்மீது கல்லெறியட்டும்' என்று தேவதூதன் கூறிஞர். கல்லெறியட்டும். .. என்றதை வைத்து அவர் வன்முறையை தூண்டிவிட்டார் என சொல்ல முடியுமா? சூரனை வேலால் எறிந்துதான் முருகன் பிளந்தார் இதற்காக முருகனை கொலைஞன் என்று விட முடியுமா? இல்லையே! மதநெறிக்கு பொருந்தாத விடயங்கள் எந்த மதத்திலிருந்தாலும் அதை சுட்டிக்காட்டுவது தவிர்க்கப் படமுடியாது.

ஈழத்தில் அழிவுகள் சிங்கள அரசால் மேற்கொள்ளப்படும்போதுகூட இங்குள்ள பலர் புலிகள்மீது அனுதாபம் காட்டுவதாக தெரியவில்லையே! இதற்கு புலிகளின் கடந்தகால அணுகுமுறைகள்தானே காரணம்?
ஜெயானந்தன்
முற்று முழுதாக ஈழத்திலுள்ள புலிகளின்

கடந்த காலத்தை மட்டும் கூறிவிட முடியாது. மேலதிகமாக புலிகளின் கனடாக் குத்தகைக்காரர்களான உலகத் தமிழர் இயக்கத்தின் பல அணுகுமுறைகளும் இன்று கனடாவிலுள்ள தமிழ் மக்கள் பலர் புலிகளை வெறுக்கக் காரணமாகி விட்டது. இங்குள்ள பல உலகத்தமிழர்களின் தான்தோன்றித் தனமான நடவடிக்கைகள் (இவர்களில் பலர் தற்போது 'ஒய்வு' பெற்றுக் கொண்ட போதிலும்) புலிகளின் மதிப்பையே கனடாவில் குறைத்து விட்டது புலிக்கு புலிதான் பகை.

சிங்கள அரசுடன் புலிகள் மோதி மரணமடையும் இந்த நேரத்தில் புலிகளுக்கு எதிராக எழுதுவது முறையா?
கருணா, மிசிசாகா
தமிழ் மீதான புலிகளின் வன்முறைகள் அடக்குமுறைகள் என்பன எந்த நேரத்திலும் எதிர்த்து எழுதப்படவேண்டும். அதே சமயம் இன்றைய நிலையில் புலிகள் தமிழ்மக்களினதும் கூடவே தங்களதும் உயிராபத்துக்களை குறைத்துக் கொள்ளும் வகையில் போரிட்டு சிங்களவரை வெல்ல வேண்டும் என்றும் மனம் வேண்டிக் கொள்கிறது.

உலகளாவிய மொழியாக தமிழும் ஆங்கிலத்துடன் சரிசமனாக போட்டிபோடும் நிலை என்றாவது வருமா முனிவரே?
பரன் மொன்றியால்
என்றன் இனத்தை ஒன்று சேர்க்காமல் என் மொழி உலகாள மாட்டாது

மாத்தாயாவை தட்டி விட்டார்களா முனிவரே
விஜயகுமார் ஸ்காபரோ
மாத்தயாவுடன் பிரபாகரனுக்கான கசப்புகள் உண்மையாகவே இருந்தாலும்கூட ஒருநாள் மாத்தயாவே "எங்களிடையே பிணக்குகள் இல்லை இவையெல்லாம் பொய்ப் பிரச்சாரங்கள் ...." என்று சொல்லக் கூடிய வகையில் அமைந்திருப்பதுதான் புலிகள் இயக்கம் எனவே எதையும் இப்போது சொல்லிவிடமுடியாது.

சேரனின் கருத்துக்களை பிரசுரித்த மரை பத்திரிகை தற்போது சேரனை தாக்கி எழுதப்பட்ட கருத்துக்களை பிரசுரிக்கிறதே?
கணேஷ் மொன்றியால்
அதில் தவறேதும் இல்லை. மாறுபட்ட கருத்துக்களுக்கு இடம் கொடுப்பதுதான் ஒரு பத்திரிகைக்கு அழகு. (ஆனால் சேரனின் கருத்துக்கள் செந்தாமரையின் கருத்துக்களில்லை என்று பிரசுரித்தவர்கள் சேரனுக்கு எதிரான கருத்துக்களுக்குக் கீழே எந்தக் குறிப்பும் இடாது இருப்பதிலிருந்து ஒரு விடயம் தெளிவாக தொடுகிறது: பச்சோந்தித்தனம்)

இங்குள்ள புலி ஆதரவாளர்களுடன் அரசியல் பேசினால் அவர்கள் எவ்வளவு குழந்தைத்தனமாக அரசியல் பேசுகிறார்கள் என்பது தெரியவரும். புலி ஆதரவாளர்கள் இப்படியிருக்க காரணமென்ன?
நேசராசா, வினிபெக்
குழந்தைத்தனமாகவா? ..'தம்பி' 'பேபி' Kid டு' என்பர்கள்தானே அவர்களது தலைவர்கள்

தரப்படுத்தலால் தரணியெங்கும் பரவிய தமிழ்ச்சாதி தங்கியுள்ள இடங்களிலாவது தரமான வாழ்க்கையை தட்டிக்கொள்ளுமா?
டி.ஆர்.பிரியன்
ஏன் முடியாது... கல்வி வசதிகளை தமிழ்ச் சமூகம் பயன்படுத்திக்கொள்ளுமானால் தரமான வாழ்க்கையென்னஇ தலைமை தாங்கும்! ஆசியர்கள் கல்வியில் அதிக சிரத்தை காட்டுபவர்கள் என்ற பெயர் இங்குண்டு. இந்தியாவிலிருந்து கனடா வந்த இமிகிரண்டுகளின் மகனான அசாஷ் மகராஜ் என்ற இந்திய கனேடியன் இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழக Students Council இன் தலைவராக தெரியப்பட்டுள்ளார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இத்தலைமைப்பதவியை பிரிட்டிஷ் மக்களுக்கு மட்டுமே கொடுக்கும் இம்முறை முதன்முறையாக வெளிநாட்டவர் அதுவும் கனேடியன் அத்தலைமையை பெற்றிருக்கிறார். இப்படி எமது தமிழர்களும் ஆவார்களா?)

குஷ்வு பிரவுவை கல்யாணம் செய்ததாக வெளிவந்த தவறான செய்தியையே நீரும் உமது பதிலில் சொல்லி விட்டதால் உமது தலையில் குஷ்பு விழக் கடவது...
பிரியதர்ஷினி ரொறன்டோ
'ஆனை'க்கும் அடி சறுக்கும் என்பது இந்தப் பதில் விடயத்தில் சரியாகவிட்டது அட சீ... யுத்தமுனையிலிருந்து நேரடி ரிப்போட் தரும் சஞ்சயனையாவது நான் கேட்டுப் பார்த்திருக்கவேண்டும்... நீயெங்கே என் அன்பே...

மிகவும் ஆழமான கருத்துக்களை அசைத்து வரும் சிவதாசன் சிலவேளைகளில் பாலியல், மதம் போன்ற சிக்கலான பக்கங்களுக்கு சென்று எழுதுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை?
என் கேசவநாதன் நியூயோர்க்
எழுது.
எவர் முகமும் பாராமல்
உன் மனம் பார்த்து
உன் தாகம் தீர்க்க
நதியிலிருந்து நீரைக்
கைகளால் அள்ளுவது போல்
கண்டுபிடி
உன்மன மொழியை
மார்புக் கச்சையை
முற்றாக விலக்கி
காலக் குழந்தைகளுக்குப்
பாலூட்டு
என்ற பசுவய்யாவின் கவிதை வரிகளை பதிலாக தருகிறேன்.

ஒக்டோபர் 10 மிசிசாக்காவில் நடைபெற்ற கலைக்கதம்ப நிகழ்ச்சியில் நிர்மலா ஹரிபாஸ்கர் இவர்கள் திறமையாக பாடியபோதும் கூக்குரலிட்டு அவர்களைப் பாடவிடாமல் கத்திய எம் வீரர்கள் திருந்தவே மாட்டார்களா?
திருநாவுக்கரசு ரொறன்டோ
சென்ற வார தாயகத்தில் புதுக்கவிதை பகுதியில் பிரகிருதிகள் என அனந்தன் எழுதிய கவிதையை படியுங்கள் அது சரி..... கனடாவிலுள்ள பாடகியர்களுள் நான் ரசிக்கும் பாடகி நிர்மலா ... (முனி கொட்டாவி விடுகிறான் டோய்)

# கொலை அரசியலும் நியாயப்படுத்தல்களும்

### சரவணன்

**வாளெடுத்தவன் வாளாலழிவான், வால் பிடித்தவனும் விதிவிலக்கல்ல**

"If Only"- The two saddest words in any language என்ற ஜேம்ஸ் லீசரின் (யார் இவரென்பது எனக்குத் தெரியாது) கருத்துக்கு கொலையரசியலை எம் மத்தியில் இன்று நியாயப்படுத்துபவர்களை விட சிறந்த உதாரணங்கள் இருக்க முடியாது. ஈழத்துக் கொலையரசியலை (சிறுவர்களின் கொலைகள் பாமர ஏழைமக்களின் அவஸ்தைகள், அறிவுள்ளவர்கள், பயங்கரங்கள் மேல் கேள்வி எழுப்புபவர்கள் மீதான நெருக்குதல்கள் மேல் நடைபெறும்) நியாயப்படுத்துபவர்கள் அடிக்கடி பாவிக்கும் வார்த்தைகள் தான் மேலே கூறப்பட்டிருப்பவை. ஓரே ஒரு இயக்கம் மாத்திரமே (ஜனநாயக?) அரசியலை (போராட்டம்?) நடத்த வேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் ஈழத்தில் பிரகனப்படுத்தப்பட்டதும் வழக்கம் போலவே ஆதரவானது (எவன் வெல்லுவானோ அவன் பக்கம்) பல மட்டங்களில் (கொக்கோ கோலாவிலிருந்து ஆட்டிச்சு விருந்து வைக்கும் அளவுக்கு) இருந்ததை நாமறிவோம். மிருகத்தனமாக எங்கள் இளைஞர்களை எங்கள் இளைஞர்களே படுகொலை (வாகனங்களினுள்ளே இளைஞர்களை பூட்டி வைத்து அவற்றை குண்டு வைத்து தகர்ப்பதன் மூலம் சதைத்துண்டங்கள் மரக்கிளைகளில் தொங்குமளவுக்கு) சித்திரவதை (இளைஞர் சில விடுவிக்கப்பட்டபொழுது உடற்காயங்களில் புழுப் பிடித்திருந்தது) செய்யப்பட்டபொழுது அவற்றை கண்களால் கண்ட ஒரு மனித கூட்டம் கொலைஞர்களை ஊக்குவித்து குளிர்பானமும் விருந்தும் வழங்கிய வெக்கக்கேடான ஈனச்செயல் வரலாற்றில் வேறெங்கும் காணக் கிடைக்காதது. (இவர்களில் ரெலோ இயக்கத்தினரால் கடத்தப்பட்ட இராணுவ புகைவண்டித் தொடர் மீதான தாக்குதலை தொடர்ந்து "அடியெண்டா இதுதான் அடி ஒரு இயக்கத்தாலும் ஏலாது" என்று கதைத்துத் திரிந்தவர்களும் அடக்கம்)

இதை விட கேவலம் இவற்றை நியாயப்படுத்துபவர்கள் நாம் ஒன்றுபட்டு ஒரு இயக்கத்தில் போராடினால் தான் குழப்பங்கள் இல்லாமல் விரைவில் விடுதலை பெறுவோம் என்று வாதாடுவதுதான். இவர்கள் சொல்லும் ஒரு இயக்கத்தின் கீழென்பது ஆயுத வல்லமையுள்ள கொலைகளில் தேர்ச்சி பெற்ற ஒரு இயக்கத்தின் கீழ் என்பதும் ஒரு சரியான அரசியல் திட்டத்தின் அடிப்படையினதோ அல்லது கொள்கை செயற்பாட்டின் கீழோ இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழனின் ஒற்றுமையைப் பற்றி பேசியாரும் ஒரு சரியான பொது வேலைத்திட்டத்தை முன்வைத்ததாகவோ அதற்காக முயற்சித்ததாகவோ தெரியவில்லை கொலைச்சூழலில் அன்றெலித்த நியாயத்திற்கான, மனித நேயத்திற்கான குரல்வளைகள் நெரிக்கப்பட்ட பொழுது குறைந்த பட்சத்திலான ஆதரவையாவது அவர்களுக்கு கொடுத்திருந்தால் அவை பலமடைந்தும் ஏதேச்சதிகாரப் போக்கு பலகீனமடைந்தும் இருக்கும் என்பதோடு பல வேண்டத்தகாத மனித வரலாறு வெட்கித் தலைகுனியும் நிகழ்வுகளை தவிர்த்து போராட்டம் ஓரளவேனும் சரியானபாதைக்கு இட்டுச் செல்லப்பட்டிருக்கும் என்பது வெளிப்படை. இன்று நூலிழையில் தொங்கிக்கொண்டிருந்த மனிதநேயமும் அறுந்து வெகுகாலமாயிற்று. ஆனால் நியாயப்படுத்தல் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இதிலொன்றும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அன்னிய தேசங்களில் புகுந்து குழந்தைகளை பெண்களை வெட்டிச்சாய்ப்பதுவும், சூறையாடுவதும், நியாயத்துக்காய் போராடுபவர்களை வெட்டிப் புதைப்பதும் இவற்றைச் செய்யும் அரசர்களை வீரர்களாக பிச்சைக் காசுக்காக பாடிவைத்த புலவர்களையும் நியாயப்படுத்தலும் திரித்தலும் தமிழனின் வரலாற்றின் வெளியெங்கெணும் காணக்கிடக்கிறது. எனவே ஆண்டாண்டு காலமாய் தமிழனைப் பீடித்திருக்கும் கொடிய மனப்பான்மையின் எச்சங்கள் மிஞ்சியிருப்பது ஆச்சரியப்படக் கூடியதல்ல. ஆனால் இவை அழிவிற்கே

*கொலைக்கலாச்சாரத்தின் மீது விமர்சனத்தை வைக்கின்றவர்களிலும் ஆரோக்கியமான கருத்துக்களை உடையவர்களிலும் பொதுவாக போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்திருப்பவர்களே அதிகம். மாறாக ஆயுதக்கலாச்சாரத்தை தேசியவாத இனவெறியை நியாயப்படுத்துகின்றவர்கள் அல்ல. இவர்கள் கொலைகளை நியாயப்படுத்துவதன் மூலமே தாம் போராட்டத்துக்கு பங்களிப்புச்செய்வதாக எண்ணிக் கொள்பவர்கள் (மைதானங்களில் பார்வையாளர்களான இவர்கள் "அடிடா மச்சான் பவுண்றி ஸிக்சர்" என ஊளையிடுவதுடன் தோற்கின்ற சமயங்களில் பொல்லுகள் தடிகளின் உதவியோடு போட்டிகளை குழப்பி வீரர்களுக்கு உதவிபுரிபவர்கள்)*

இட்டுச் சென்றிருக்கிறதென்பதுக்கு உலகெங்கும் அகதியாக அடிமையாக சிதறிக்கிடக்கும் தமிழனே சாட்சி.

அடிக்கடி இவர்களால் பாவிக்கப்படும் மற்றய வார்த்தை "இருந்தாலும் என்ன இருந்தாலும் கொஞ்சப் பேரண்டாலும் கெட்டிக்காறர், இருந்தாலும் கூடக் காம்புகள் அடிச்சவங்கள், என்ன இருந்தாலும் கூடப் பொடியள் தியாகம் (செத்தது) செய்தது அவங்களிலதான் என்ன இருந்தாலும் கடசிவரையும் நிண்டு பிடிக்கிறது அவங்கள், எதுவாயிருந்தாலும் எங்களுக் கெண்டிருக்கிறது அவங்கள் (ஆம், இல்லை என்ற வார்த்தைகளுக்காக முகம் குடுக்க போன வார்த்தை இந்த "இருந்தாலும்") பேய்க்கெட்டிக்காறரில வந்து முடிந்திருப்பது. அநியாயங்கள் நியாயப்படுத்தப்படுவது சேணமிழுப் பதையே இங்கு காட்டி நிற்கிறது. இங்கு நகைப்புக்குரியது என்ன வென்றால் அறிவார்ந்த மனித நேயம் சார்ந்த கருத்துக்களை முன்வைப்பவர்களை மண்டையில் போடுவதை நியாயப் படுத்துவதும் "போராட்டத்தப்பற்றி அவங்களுக்கு என்ன தெரியும், சும்மா எழுதத்தான் தெரியும், இங்க எழுதிக்கிழிக்கிறவை அங்க போய்ப் போராடலாம்தானே" என்று வக்கரிக்கும் தன்மான உணர்வு மிக்க இந்த பிடரி மயிர் சிலிர்த்து நிற்கும் சிங்கங்கள்தான் ஊருக்கு போய் தாங்கள் நியாயமென வாதிடும் அடிபுடிகளில் கலந்துகொள்ள வேண்டியவர் களேயொழிய பயங்கரங்களின் மீது கேள்வி எழுப்புவர்கள் அல்லர். கொலைக்கலாச்சாரத்தின் மீது விமர்சனத்தை வைக்கின்றவர்களிலும் ஆரோக்கியமான கருத்துக்களை உடையவர்களிலும் பொதுவாக போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்திருப்பவர்களே அதிகம். மாறாக ஆயுதக்கலாச்சாரத்தை தேசியவாத இனவெறியை நியாயப்படுத்து கின்றவர்கள் அல்ல. இவர்கள் கொலைகளை நியாயப்படுத்துவதன் மூலமே தாம் போராட்டத்துக்கு பங்களிப்புச்செய்வதாக எண்ணிக் கொள்பவர்கள் (மைதானங்களில் பார்வையாளர்களான இவர்கள் "அடிடா மச்சான் பவுண்றி ஸிக்சர்" என ஊழையிடுவதுடன் தோற்கின்ற சமயங்களில் பொல்லுகள் தடிகளின் உதவியோடு போட்டிகளை குழப்பி வீரர்களுக்கு உதவிபுரிபவர்கள்)

இரண்டு விதமான மனவியாதிகளுக்கு எமது கொலைக் கலாச்சாரம் இட்டுச் சென்றுள்ளதாக நம்பலாம். ஒன்று மனவிகாரமாக ஈழத்திலும் வாழும் உலகெங்கிலுமான வன்முறைப் போக்கு. (சகிப்புத தன்மையற்ற போக்கு, மற்றைய இனத்தவர் மீதான விரோதம், ஊர்ச்சண்டைகள், மட்டை, கத்தி, பொல்லு, போத்தல், கற்கால ஆயுதங்கள் உட்பட நவீன ஆயுதங்களின் பாவனை மற்றும் விறைத்த மண்டைப் போக்கான நியாயப் படுத்தல்கள்) மற்றயது மன அழுத்தத்தினால் ஏற்படும் மனநோய்களும் தற்கொலைகளும். ஈழத்தில் முதியவர்கள் இளைஞர்கள் மத்தியில் மனநோய்க்கான அறிகுறிகள் என்றுமில்லாதவாறு காணப்படுவதாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. கொலைகள் சிலவற்றை நேரில் கண்டு மனம் பேதலித்திருந்த படித்த வாலிபன் ஒருவன் வீட்டின் அருகாமையில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப் பட்டதையடுத்து கல்லைக் கட்டிக்கொண்டு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டது ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்ளத் தக்கது. இவர் தன் தாயாரையும் வன்முறைக்கு பலிகொடுத்திருந்தார். மனநோய், மனவிகாரம் கொண்ட ஒரு பரபரப்பை தோற்றுவிக்கிறதென்பது சிந்திக்கதெரிந்த அனைவர்க்கும் கவலை தரும் விடயமாக இருக்கிறது. அதனால்தான் இன்று புலம் பெயர்ந்த இடங்களில் மனித நேயத்துக்கான குரல்களை கேட்கக்கூடியதாக இருக்கிறது. இக்குரல்கள் பலம் பெற்று ஒருங்கிணைந்து ஒரு சக்தியாக பரிணமித்தால் அன்றி தமிழினம் தலை நிமிர்ந்து வாழ்வதோ விடுதலை பெறுவதோ ஓர் பகற்கனவே (வாளெடுத்தவன் வாளாலழிவான், வால் பிடித்தவனும் விதிவிலக்கல்ல என்பது இங்கு நோற்கற்பாலது)


## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்



## எடு

யூனிவர்சிட்டி ஒன்றின் முன்னால் உள்ள டாம்பீகமான சிற்றுண்டி விடுதியின் வெளிப்பகுதிக் கதிரையிலமர்ந்து இரண்டு காதலர்கள் கேக் சாப்பிட்டுக் கொண்டுள்ளனர். இரண்டு தினங்களாக ஒரு துண்டு பாணுக்காக அலையும் ஒருவன் அவர்கள் முன் வந்து கையை நீட்டுகின்றான். தலையை ஆட்டி இல்லை எனச் சொல்லி விட்டு அவர்களோ கேக் சாப்பிடுகின்றனர். நம்பிக்கையை இழக்காமல் விடுதிக்குள் சென்ற அவன் முதலாளியிடம் கையை நீட்டுகின்றான். முதலாளியோ வாசலைக் காட்டிப் போ எனத் துரத்துகின்றார். மனச் சோர்வுடன் வெளியே வந்த வாங்கொன்றில் அமர்ந்து தின்னுபவர்களைக் கவலையுடன் பார்க்கின்றான். கேக் தின்று முடியும் தறுவாயில் பணிப்பெண் காதலர்கள் முன்னே வந்து பில்லை வைத்து விட்டுப் போகின்றாள். பில்லின் மீது 10 பிராங் குற்றிகளில் ஐந்தை வைத்து விட்டு அவர்கள் கட்டிப்பிடித்தபடி மாறுகின்றனர். பணிப்பெண்ணோ உள்ளே பிஸியில். பாணுக்கு அலைபவரோ டக்கென எழுந்து காதலர்கள் கேக் சாப்பிட்ட இடத்தை நெருங்கி, சுற்று முற்றும் பார்த்து விட்டு, மேசையில் கிடந்த காசைப் பொறுக்கிப் பொக்கெட்டுக்குள் போட்டுவிட்டு நைசாகத் தப்பிவிடுகின்றார். பிஸி முடிந்து வெளியே வந்த பணிப்பெண் மேசை காலியாகக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி யடைந்து 'ஐயோ! அறுவாங்கள் சாப்பிட்டிட்டு காசையும் வைக்காமல் மாறீட்டாங்களே!" எனத் தலையிலடித்தபடி உள்ளே போகின்றாள்.

# பாவம் உந்த நாயள்



ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
நன்றி:புன்னகை மலர்

ஊரில் காலையில் கண் விழிக்கும் போது அணில் கத்தும், புலுணி என்ற பறவை கத்தும். காகம் கத்தும். கடிதம் வரப் போகுது என்று அக்காவும் ஆரோ ஆக்கள் வரப்போகினம் என்று அம்மாவும் சொல்லிக் கொள்வார்கள். அல்லது தூரத்தில் தோட்டங்களில் வாட்டர் பம்ப் இறைக்கின்ற சத்தம் கேட்கும். அதையும் மீறி உறங்கினுல்.. பரதேசி எழும்படா என்று அம்மா முதல் அக்கா வரை அபிஷேகம் செய்வார்கள்.

ஆனுல் இங்கே.. நிலைமை வேறு. . நேர காலம் தெரியாமல் போன் அடித்து அவனவன் அறுப்பான். அல்லது கீழே ரோட்டில் போகின்ற வாகனங்களின் சத்தம் எரிச்சலைத் தரும். இதெல்லாம் சகஜம். போர்வையை இழுத்து மூடினுல் போகிறது. ஆனுல் என் றூம் மேட் மாயவனின் சத்தம் மட்டும் என்னுல் தாங்க முடியாத ஒன்று. அதுவும் காலையில் காதைப் பிளக்கும் ஏதாவதைக் கேட்டால் எப்படி இருக்கும்? போன் எடுத்தால் யாரையாவது திட்டுவது அல்லது புகழ்வது.. இதைத் தவிர இவன் வேறு எதையும் செய்ததை நான் காணவில்லை. யாராவது எனக்குத் தெரியாத ஒருவனை ‘அவன் அருமையான ஆள், உவனைப் போல ஆக்களைக் காணேலாது’ என்று புழுகித் தள்ளுவான். கொஞ்ச நாளில் அதே வாயால் ‘உவனும் ஒரு மனிசனே?’ என்று திட்டித் தீர்ப்பதையும் கேட்கலாம். இவன் எதிர்பார்த்த ஒன்றை அவன் செய்யாதிருக்கக் கூடும். அல்லது செய்த உதவிகள் ஒன்றை அவன் நிறுத்தியிருக்கக் கூடும். அல்லது இவனுக்கு கொடுத்த கடனை அவன் கேட்டிருக்கக் கூடும்.

இவன் எவரைப் பற்றி என்ன நினைக்கிறுன் என்பது இன்றைய மார்க்கட் நிலைவரம் மாதிரி அன்றன்று கேட்டு அறிந்து கொள்ள வேண்டியது தான். தான் நல்லவன் என்று சொன்ன அதே வாயால் நாக்கூசாமல் திட்டுகிறதையிட்டு யாரும் எதுவும் நினைப்பது பற்றி அவனுக்கு கவலையில்லை. அதைப் போல, தனக்கு பிடிக்காதவர்கள் பற்றி யார் எவர் என்றில்லாமல் போனில் அகப்படுகின்ற எல்லாருக்கும் ஒலிபரப்பு, செய்யாவிட்டாலும் அவனுக்கு பத்தியப்படாது. அதோடு அவன் திட்டுகின்ற ஒருவருக்கு வக்காலத்து வாங்க நீங்கள் புறப்பட்டீர்களானுல் தொலைந்தீர்கள். பிறகு உங்களையும்.. உவனும் ஒரு மனிசனே? என்று தொடங்கி விடுவான்.

இது மாதிரி இன்று காலையும் யாரையோ திட்டிக் கொண்டிருந்தான். ‘எளியதுகள், இங்க வந்து கனடியன் கவண்மென்ரிட்ட தின்னுதுகள். இதுகளின்ர சேட்டையளால எங்களுக்கு தலைநிமிர்ந்து நடக்கேலாமல் இருக்கு’. இவன் யாரைச் சொல்லுகிறுன்? நான் றெஸ்ரோறன்ட் வேலை, சாப்பாடு றெஸ்ரோறன்டிலை.. அதாலை நிச்சயமாக என்னை இல்லை.

வேலை இரண்டு மணிக்குத் தான். உடனே எழும்ப வேண்டும் என்ற அவசரமும் இல்லை. இரவு ஒரு மணிக்கு வந்து படுத்த அசதியும் கூடவே. கொஞ்சம் காதைக் கொடுத்துப் பார்த்தேன். ‘நாயள், ஸ்பொன்சர் பண்ணி வந்திட்டு வெல்பெயர் அடிக்குதுகள். நாங்கள் இங்க நேர்மையாய் போனுல் ஆயிரத்தெட்டு கேள்வி கேட்கிறுளவை.. உவளுக்கு என்ன? ஏதோ தன்ரை காசைத் தாற மாதிரி’ இப்போது வெல்பெயர்க்காரிக்கு நடக்கிறது திட்டு. இதே அவளைத் தான் ‘அருமையான மனிசி. போய் சொன்னன், உடன அனுப்புறன் காசு எண்டவள்’ என்று புழுகியிருந்தான்.

மற்ற றூம் மேட்களுக்கு இவன் ஒரு ஆபந்பாந்தவன். மாயவன் எண்டா எங்க போறதெண்டாலும் வரச் சொல்லிக் கேட்டால் வருவான், உந்தக் கழுதை நெடுக கோப்பை கழுவப் போக வேணும் எண்டு ஒண்டுக்கும் வாறேலை என்று மற்றவர்கள் சொல்வது எனக்கு கேட்பதுண்டு. ஒன்றில் நான் கதவைப் பூட்டி வெளியேறியதும் சொல்வார்கள். அல்லது கதவைத் திறக்கும் போது அந்தப் பேச்சை நிறுத்துவார்கள். இதைப் பற்றி எல்லாம் நான் அலட்டிக் கொள்வதில்லை. மாயவனுக்கோ வேலை இல்லை, வேலை வெட்டி இல்லாமல் இருப்பவனுக்கு நேரம் அனுவசியமாக கிடைக்கும். கடைத் தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு உடைப்பதில் வலுவீரன். தேவைப்பட்டால் என் காரை தூக்கிக் கொண்டு போய் மற்றவர்களுக்கு அபயமும் அளிப்பான். கார் கொடுத்த நான் திட்டு வாங்க.. மாயவன் காருக்கு பெற்ரேல் விடாமலே வெறுமையாய் கொண்டு வந்து வைப்பான் என்பதெல்லாம் அவன் நண்பர்களுக்குத் தெரியாது.

வெல்பெயர் எடுப்பதற்கு அப்படி என்ன நேர்மை வேண்டிக் கிடக்கிறது என்பது எனக்கு இன்னும் புரியவில்லை. காதைக் கொடுத்துக் கேட்டால் இவனுக்கு போன கிழமை வெல்பெயர் வந்திருக்க வேண்டும், வரவில்லை. வெல்பெயர் ஒஃபீசில் போய் நின்று அவளோடு தனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் பேசப் போக.. அவள் போய் வேலை தேடியதற்கு ஆதாரம் கேட்டிருக்கிறுள். அது தந்தால் தான் காசு என்றதால் வந்த வினை. இப்போது அவள் முதல் இங்கு வெல்பெயர் எடுக்கின்ற மற்ற தமிழர்கள் வரை இவன் திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறுன்.

‘மற்ற ஆக்களின்ரை பேப்பரில வேலை செய்து உழைக்கிறுங்கள். அதுக்குள்ள வெல்பெயர். உந்த எளியதுகளால எங்களுக்குப் பிரச்சனை’ இவனுக்கு மீண்டும் அவள் பணம்

அனுப்பும் வரை நாங்களும் இங்கு இருந்தபாடில்லே. மற்ற தமிழர்களின் மீதான வசையும் முடியாது. உந்த தொல்லேயிலிருந்து விடுபட நான் அந்தக் காசைக் கொடுத்தால் என்ன என்று கூடத் தோன்றும்.

எழுந்து வெளியே வந்தேன். வெளிக்கிட்டுக் கொண்டிருந்தான். 'எங்க ஆயத்தம்?' 'ஒருக்கா கண்ணதாஸ் இமிக்கிரேசனுக்கு வரச் சொன்னவன்' இவன் தனக்கு இமிக்கிரேஷன் வேலே எண்டால் வேற ஆரையும் கூட்டிக் கொண்டு போறவன். அதுக்குள்ள இவனே கூப்பிட்ட அந்த புண்ணியவான் யாரோ?

மெதுவாய் மசிந்தான். வாஷ்றூமின் உள்ளே பல் தீட்டிக் கொண்டிருக்க

'ஒருக்கா கார் வேணும்'

'இல்லே, நான் வெளிய போக வேணும்'

அவன் கதவை அடித்துச் சாத்திய வேகம் 'உவங்கள் எல்லாம் எப்ப காரைக் கண்டவங்கள்?' என்று சொன்னது. தலேவிதி!

★ ★ ★

வீட்டுக்குள் சத்தம் அதிகமாய் கேட்டது. கதவைத் திறந்தால் போத்தல் மணமும் ஹை வொலியூமில் பாட்டும் அறையை நிறைத்திருந்தன. இன்னொரு றூம் மேற்றுக்கு இன்று லாண்டட் பேப்பர் கொடுத்தார்களாம். இவர்கள் பார்ட்டி வைக்க என்றே பிறந்த கூட்டம். ஏன், எதற்கு என்றெல்லாம் கிடையாது. இதைச் சாட்டியே தண்ணியடிக்க அலேயும் கூட்டம்.

லாண்டட் கிடைத்தவன் ஊரில் திருவிழா உபயகாரர்கள் திருவிழா நாட்களில் வேட்டி கட்டிக் கொண்டு இடுப்பில் சால்வையைக் கட்டிக் கொண்டு நிற்பது மாதிரி, புதிய சேட் ஒன்றை மாட்டிக் கொண்டு அடிக்கடி போத்தலுக்கு காசை இழுத்துக் கொண்டிருந்தான். அவனவன் இது தான் தருணம் என்று ஒவ்வொரு பியர் போத்தலுக்குள் நீந்தி விளேயாட.... மாயவன் தான் அங்கும் guest speaker.

இந்த நாயள் இங்கை நிக்கேக்கை மட்டும் ஊருக்குப் போனுல் ஆமி சுடும், புலி சுடும் எண்டு சொல்லுறது, லாண்டட் கிடைச்சவுடன சடங்கு முடிக்கப் போயிடுவினம். உதுகளாலே தானே எங்களுக்கு பேப்பர் தராமல் இழுக்கிருன்..

செத்த வீடுகளில் கிழவிகள் இறந்தவருக்காக அழாமல் தங்கள் பிள்ளேகள், கணவன்மாருக்காக அழுவது மாதிரி.. மாயவன் திட்டத் தொடங்கினுன். எனக்கு ஒரு மாதிரி இருந்தது. இப்படி தான் சொல்வதால் உபயகாரன் ஏதும் நினேக்க மாட்டானு என்ற கவலே கிடையாது. அவனது காசில் குடித்துக் கொண்டே அவனுக்கு நடக்கிறது திட்டு. லாண்டட் கிடைச்சவன் இதையெல்லாம் விளங்கி முகம் சுழிக்கும் நிலேயில் இல்லே. அவனும் விஸ்கி கிளாசை ஒரு கையிலும் மற்றக் கையால் சுவரையும் பிடித்தபடி தலேயைத் தொங்கப் போட்டுக் கொண்டு 'மச்சான், இதைக் கேளடா' என்று நீண்ட நேரமாக திருப்பித் திருப்பி எதையோ சொல்ல முயன்று கொண்டிருந்தான்.

இப்போது கனடிய அரசாங்கம் முதல் அகதிகள் வரை திட்டு நடக்கிறது. களவாய் தலேமாத்தி வாருங்கள் என்ருன். இவன் கூட அப்படி வந்தவன் தான். 'உங்க பார், உதுகளே.. போய் கலியாணம் கட்டிப் போட்டு ஸ்பொன்சர் பண்ணுமல் களவாய் கூட்டிக் கொண்டு வந்து வெல்பெயர் அடிக்குதுகள்'

இவனது இந்தக் கதைகள் இவனே ஒரு கொள்கைப் பிடிப்புள்ளவன் என்ற பிரமையை பலருக்கு ஏற்படுத்தியதால் அடிக்கடி இவனுக்கு போன் அடித்து சில வெண்காயங்கள் இவனிடம் போய் ஆலோசனேயும் கேட்பதுண்டு.

அடிக்கடி வீட்டிலிருந்து கடிதம் வரவும் மாயவனின் திட்டுதல் கூடியது. என்னவென்று விசாரித்தால் யாரோ ஒரு பெண்ணே இவனுக்கு கலியாணம் பேசி படம் அனுப்பியிருக்கிருர்கள். அந்தப் பெண்ணேடு இவனுக்கு மானசீகக் காதல் போலும். அந்தப் பிரிவு இவனே வாட்டுகின்ற நேரங்களில் கனடியன் இமிக்கிரேஷன் முதல் பிரதமர் வரை நடக்கும் திட்டு.

★ ★ ★

நீண்ட நாட்களின் பின் வேலே விட்டு வரும் போது மாயவன் யாருடனே போனில் பேசிக் கொண்டிருந்தான். அன்று யாரையும் அவன் திட்டவில்லே. ஆச்சரியமாய் போய் விட்டது. பிறகு தான் அறிந்தேன். இவனது திட்டுக்கள் தாங்காமலோ என்னவோ கனடிய அரசாங்கம் ஒரு நாள் பொறுமையிழந்து மாயவனுக்கு லாண்டட் பேப்பரைக் கொடுத்து விட்டது. 'உவங்கள் நாசமாய் போகப் போருங்கள்' என்ற இவனது சாபம் பலித்து இந்த முறை தேர்தலில் மண் கவ்வ வேண்டி வருமோ என்ற பயத்தில் அரசாங்கம் இதைச் செய்திருக்க வேண்டும். அல்லது லிபரல் கட்சி இவனே தங்கள் பிரசாரப் பீரங்கியாகப் பயன்படுத்தக் கூடும் என்ற பயமாகவும் இருக்கலாம். இவன் அரசாங்கத்தைப் பற்றி எதையும் சொன்னுல் வாக்காளர்கள் என்ன ஆதாரமாக கேட்கப் போகிருர்கள்?

யாருக்கோ போன் அடித்தான் மாயவன்.

'மச்சான், எனக்கு ஒரு பேப்பரும் பாஸ்போட்டும் எடுத்துத் தாறியோ?'

'...'

'நாலாயிரம் கூடிப் போச்சு'

'.....'

'அப்ப கேட்டுச் சொல்லு. இன்னும் ரெண்டு மாதத்தில போறன். அங்க அப்பா, அம்மாவைப் பாத்து ஏழெட்டு வருசமாச்சு. கலியாணமும் பேசியிருக்கினம். போய் முடிச்சிட்டன் எண்டால் மனிசியைக் கூட்டிக் கொண்டு வாறதுக்குத் தான் பேப்பர் கேட்டனுன். ஸ்பொன்சர் பண்ணினுல் வெல்பெயர் எடுக்கேலாது'

★ ★ ★

எனக்குத் தலே சுற்றியது. அட... போன கிழமை தான் ஊருக்கு அனுப்பினுல் தனக்கு பிரச்சனே என்ற இதே மாயவன் இந்த சிறீலங்கா பாஸ்போட்டைப் பார்த்து எயர்போட்களில் அவர்கள் அலுப்புக் கொடுக்கும் போதும் 'உந்த நாயளேத்' திட்டுவான். அங்கே எயர்போட்டில் பொலிஸ்காரனும் இமிக்கிரேஷன்காரனும் காசு பறிக்கும் போதும் 'உந்த நாயளேத்' திட்டுவான். அங்கே கொழும்பில் பொலிஸ்காரன் பிடித்துக் கொண்டு போகும் போதும், மீண்டும் எயர்போட்டில் கனடியன் எம்பாஸிக்கும் போகும்படி சொல்லும் போதும், கனடியன் எம்பாஸியில் அலைப்படும் போதும், மனேவியை களவாய் கொண்டு வரும் போதும், பிடிபடும் போதும் உந்த நாயளேத் திட்டுவான். பிறகு இங்கே வெல்பெயர் அடிக்கும் போதும்...

பாவம் 'உந்த நாயள்!'

**இருத்தலியல் விசாரணைகள்!**

**எஸ் கௌந்தி**

# இரா.றஜீன்குமார்: ஓர் காத்திரமான இருத்தல் வாசிப்பு

*(இருத்தலியலும் இலக்கியமும் என்ற பொதுத்தலைப்பின் கீழ் புகலிடத்தின் இருத்தலியல் படைப்பாளிகள் மீது எழுதுதல், எனது விசாரணைகளுக்கு அவசியமானதாகப்படுகின்றது. இந்த வாரம் இரா. றஜீன்குமாரின் கவிதைகள் கவனத்துக்கு எடுக்கப்படுகின்றன)*

புகலிடப்படைப்பாளிகளில் பலர் இருத்தல் எனும் கைவிளக்கை ஏந்தியுள்ளனர், இது நல்ல சகுனமே என கடந்த வருடம் பாரிஸில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் க. கலாமோகன் குறிப்பிட்டதில் உண்மையுண்டெனலாம். ஆனால், இந்தக் கை விளக்கை ஏந்தியுள்ளவர்கள் யார் என்பதை எமது விமர்சக வித்தகர்கள் வெளியே சொல்வதில்லை. இருத்தலின் நெருக்கடிகளையும், இருத்தலற்ற இருத்தலுக்குள் தமது அடையாளச் சிதைவையும் மீறி நடத்தப்படும் வாழ்வுக்கான தேடல்களையும் தந்ருபமாகப் படைப்பாக்குவோர் உதிரிகளாகவே உள்ளனர். லிஸ்ட் இலக்கியம் வளர்ப்போர்க்கு இந்த உதிரிகள் தெரியாது போதலை கவலையீனம் என எடுக்கும் போக்கு என்னுடையதல்ல. இலக்கிய மேலாதிக்கத்தின் பிடிக்குள் உதிரிகள் சாம்பாராகிவிடக்கூடாது என்பதற்காகவே அவைகள் மீது நான் அந்த அக்கறை கொண்டுள்ளேன்.

* * *

புகலிடத்திலே புதிதாக எழுதத் தொடங்கியுள்ள பலர் எமது சீனியர்களைக் காட்டிலும் திறமாகவே எழுதுகின்றனர். எனவே எமது சீனியர்கள் இவர்களிற்குக் கற்பிப்பதைக் காட்டிலும் இவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுதல் வரவேற்கத்தக்கது. சிலர் தமது அறிவித்துவ வறுமைகளை மறைக்க, அறிவாளிகள் வேஷம் புனைவதையிட்டு வேதனைப்படுகின்றேன். இந்த வேஷம் களையப்படுதலும் எமது இலக்கிய வேள்வியின் ஓர் அங்கமாகிப் போதல் அவசியம்... அதுவும் மிக மிக அவசியம்.

* * *

1991 ஆம் ஆண்டு ஜேர்மனியில் வெளியிடப்பட்ட "இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துப் புறநானூறு" எனும் மிகவும் காத்திரமான கவிதைத் தொகுப்பின் பின்னட்டையில் கவிஞர் மீதான குறிப்புகள் பின்வருமாறு அமைகின்றன:

பிறப்பு 01.02.1961 சுதுமலை இலங்கை

முகவரி:R.Rajeen kumar
Skalitzen st 142,
1000 BERLIN 36

மனைவி: மேனகாதேவி

மகன்: அருண்

1981இல் ஜேர்மனிக்கு வந்து, மீண்டு தமிழ் ஈழப்போராட்டத்தில் இணைவு. 1985 இல் மீண்டும் ஜேர்மனி பேர்லினில்

நாடக நடிகர்

இலங்கையில் விவாத அரங்குகள்

ஜேர்மனியில் கவியரங்குகள், கவிதா நிகழ்வுகள்.

* * *

"நான் சில காலம் துவக்குகளோடு வாழ்ந்திருக்கின்றேன்"

எனத் தனது தொகுப்பின் முன்னுரையில் கவிஞர் குறித்திருப்பது கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டியதே.

துவக்குகளைத் தூக்கிவிட்டு, மரணபீதியில் அவைகளைக் கீழே போட்டு வெளிநாடுகள் வந்தோரில் பலர்! போட்ட துவக்கை ஏன் கையோடு எடுத்துக் கொண்டு வராது விட்டோமே என்ற கவலையில் துவக்கில்லா மாவீரர்களாக ... இது ஒரு ரகம். இன்னொரு ரகம் எதுவெனில், அது வாழ்வில் துவக்கையே கண்டதில்லை, ஆனால் துவக்குக் கலாசாரத்துக்காக கவிதை எழுதும், கட்டுரை எழுதும், விமர்சனம் எழுதும், .... இதுகளுக்கு மத்தியில், துவக்கோடு தான் வாழ்ந்திருப்பதாக பகிரங்கமாக சொல்லும் ரஜீன் குமாரின் கவிதைகள் துவக்குக் கலாசாரத்துக்கு வேட்டு வைக்கும் காத்திரமான கவிதைகளாகத் தம்மை இனம் காட்டுகின்றன. கவிஞர் துவக்குத் தூக்கினர் என்பதைக் காட்டிலும், இவர் எவ்வாறு இந்தத் துவக்குக் கலாசாரத்திலிருந்து மாறினர் என்பதிலிருந்தே இவரை நான் ஓர் இருத்தலியல் படைப்பாளியாக இனங் காண்கின்றேன். இவரது மேடை அமர்களுக்கு நான் அந்நியமானவனல்லன். கவிதை வாசிக்கும் இவரது ஆற்றல் பிரமிப்பினையூட்டுவது. தூங்கிக் கொண்டிருப்போரையும் விழிக்கப் பண்ணி விடும். தமிழில் இவரைப் போல கவிதை வாசிப்பவர்களை விரல் விட்டுத்தான் எண்ண வேண்டும்.

* * *

வாழ்வின் அநித்தியம் இவர் கவிதைகளில் தத்துவம் கலந்த கிண்டலுடன் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இருத்தலின் சீரழிவை வெளிப்படுத்தும் வேளைகளில் இவரிடம் ஓர் ஆவேசம் உண்டு. இது ஆனந்த பிரசாத்தின் ஆவேசத்தைக் காட்டிலும் சற்று ஆற்றுப் படுத்தப்பட்டதே. (கவிஞர்களினது ஆவேசங்கள் எப்படியுமிருக்கலாம். அதற்காக பாரதிதாஸனின் "கொலைவாளினை எடடா" பாணியில் இருத்தல், இருத்தலிற்கு குந்தகம் விளைவிப்பதாகும்) சீரழிவின் விமர்சகனாக அமையும் இவர் ஓர் சீரழிவின்மையைக் கனவு காண்பவராக உள்ளார் என்பதை வாழத் துடிக்கும் இவரது எத்தனங்கள் தடைப்படுதல் பற்றிய சித்திரிப்பில் சிறப்பாக அவதானிக்க முடிகின்றது... பாரிஸ் இலக்கியச் சந்திப்பில் இவர் வாசித்த "நாள் ஒன்று கழிகையில்..." தாயகத்திலே தான் பிரசுரமானது. அதிலிருந்து சில வரிகள்:

**"எதிர் இருக்கைப் பெண்ணழகில்
மூழ்கி
மூச்சுத் திணறிய நிமிடத்தில்
பெண் போய்....
தரிப்பிடமும் போய்...."**

*34ம் பக்கம் பார்க்க..*

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**

Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்


Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil




# GOOD BYE BALDNESS

முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி



ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

பரீட்சித்துப்பாருங்கள்
**TRY FIRST**

பலர் இச்சிகிச்சை மூலம்
பயனடைந்துள்ளார்கள்

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922–0478

## பாலையிலும் பயிர் வளர்ப்பார்..

இடதுசாரி அரசியற் தலைமையின் முக்கிய பகுதியின் பாராளுமன்றவாத, வலதுசாரி அரசியல் முனைப்பால் ஓரளவு மழுங்குண்டது. யாழ்ப்பாணத்திற் சாதி ஒடுக்கலுக்கு எதிரான எழுச்சியும் மலையகத்தில் ஏற்பட்ட அரசியற் விழிப்புமு முற்போக்கு இலக்கியத்திற்குப் புதிய உந்துதலை அளித்தன. நாடகத்துறையில் இதன் பாதிப்புக்கள் குறிப்பிடத் தக்கனவாயினும் ஒரு தரமான தமிழ் நாடக இயக்கத்துக்குத் தமிழ்ச் சமுதாயம் போதியளவு ஆயத்தமாக இருந்ததாகத் தெரியவில்லை.

தென்னிந்தியக் குப்பைச் சஞ்சிகைகளின் இறக்குமதிக் கட்டுப்பாடு இலங்கையிற் தரமான ஏடுகளது எழுச்சிக்கு உதவியது. ஆயினும் தமிழ்த் திரைப்படங்களின் செல்வாக்கு (அவற்றின் இறக்குமதி படிப்படியாகக் குறைக்கப்பட்ட பின்பும்) தொடர்ந்தும் இருந்தது. தமிழ் மக்கள் மத்தியில் நாடகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவும் தரமான நாடகங்களைத் தேடிப் போகும் ஒரு ரசிகர் வட்டத்தை உருவாக்கி விரிவுபடுத்தவும் இயலாத வரை தமிழ் நாடகம் தேங்கியே இருக்கும் என்பதையே அந்த நிலை உணர்த்தியது. பொழுதுபோக்கு நாடகங்கள் என்ற வகையில் வானொலி நாடகங்களும் சினிமாத்தனமான மேடை நிகழ்ச்சிகளும் இருந்தன. பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் நாடகங்களைத் தயாரித்தளித்தனர். ஆயினும் சிங்கள நாடகத் துறை உள்ளடக்கம், தரம், சமுதாய உணர்வு, புதிய நாடக முறைகள் என்றெல்லாம் தன்னை வளர்க்க முற்பட்டபோது, விதிவிலக்கான சில தமிழ் தமிழில் உருப்படியான அதிகம் நடக்கவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1970களின் முற்பகுதியில் ஆபாசமான இரட்டை அர்த்த வசனங்களை மேடையிற் பேசுவது தான் நாடகம் என்ற மனோபாவம் வளர்ந்த போது அதைத் தடுக்காதது மட்டுமன்றி அதை ஊக்குவித்த விரிவுரையாளர்களும் இருந்தார்கள். தரமான நாடகங்களைத் தயாரிக்கும் முயற்சிகளைக் குழப்பவும் இவர்களிற் சிலர் முற்பட்டனர். எவ்வாறாயினும் சிங்கள நாடக இயக்கத்தின் வளர்ச்சி நல்ல தமிழ் நாடகத்திற்கான தேவையைப் பல தமிழ் இளைஞர்கட்கு உணர்த்தியது.

நவீன நாடகம் பற்றிய பரிச்சயமின்மை தமிழ்ச் சமுதாயத்தின் பொதுவான பிரச்சனையாக இருந்ததால் நல்ல நவீன நாடகச் சுவடிகள் கிடைப்பது அரிதாக இருந்தது. அதைவிட நல்ல நாடகாசிரியர்கள் என்று குறிப்பிடக்கூடிய விதமான ஒரு எழுத்தாளர் பரம்பரை உருவாகவில்லை. மஹாகவியும் முருகையனும் பல நாடகங்கள் எழுதினார்கள். இன்னும் பலர் உரை நடை நாடகங்களை எழுதினார்கள். ஆயினும் இவையெல்லாம் நவீன நாடகம் பற்றிய ஒரு பார்வையைக் கொண்டனவாகவோ ஒரு நாடக இயக்கமாகவோ அமையவில்லை. சிங்கள மேடை அயலிலிருந்து விஷயங்களைப் பெற்றுத் தனதாக்கிக் கொண்டது போற் தமிழ் மேடை செய்யக் கூடுமோ என்ற பிரச்சனை திறந்த மனதுடன் பரிசீலிக்கப்படவில்லை.

நவீன தமிழ் நாடக வளர்ச்சிக்குச் சமுதாயச்சார்புடைய நாடகங்களை அறிந்து பணியாற்றிய இடதுசாரி நாடகத் துறையினர் 1970களின் பிற்பகுதியிற் கண்ட தேக்க நிலையளவுக்கு வருந்தத் தக்க ஒரு விஷயம், மொழி பெயர்ப்பு நாடகங்கள் பற்றி விமர்சகர்கள் சிலரால் முன் வைக்கப்பட்ட கடுமையான எதிர்பாகும். அவைக்காற்றுக் கலைக் கழகம் பாலேந்திராவின் நெறியாள்கையின் கீழ்த் தயாரித்தளித்த நாடகங்கள் பெருமளவில் மொழிபெயர்ப்புக்களாகவே இருந்தன. அவைக்காற்றுக் கலைக்கழகம் தெளிவான ஒரு அரசியல் சார்பு கொண்ட நிறுவனமல்ல. அதன் தெரிவுகள், நல்ல நாடகங்களையும் புதிய நாடக முறைகளையும் தமிழருக்கு அறிமுகம் செய்யும் தேவையைச் சார்ந்தே அமைந்தன எனலாம். ஆயினும், அந்தத் தெரிவுகள் சமுதாய உணர்வற்றவையென்றோ பிற்போக்கான முனைப்புடையன என்றோ சொல்வது தவறானது. அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் படைப்புகள் பற்றி முன்வைக்கப்பட்ட சில விமர்சனங்களில் ஆற்றுமை தென்பட்ட அளவுக்கு நிதானமான ஆய்வு தென்படவில்லை இதன் ஒரு ஆபத்தான அம்சம் ஏதெனில், மொழிபெயர்ப்புக்களும் தழுவல்களும் அவசியமற்றவை, அவற்றின் மூலம் தமிழ் நாடகம் வளர்ச்சி பெற முடியாது என்ற வாதமாகும். தமிழ் நாடக வளர்ச்சி தழுவல்களை மட்டுமே சார்ந்து வளர முடியாது என்பது உண்மை. ஆனல், நல்ல நாடகச் சுவடிகள் இல்லாமை, சர்வதேச நாடகத்துறைகளைத் தமிழருக்கு அறிமுகம் செய்யும் தேவை, நாடகம் பற்றிய புரிந்துணர்வை பரவலாக்கல் என்ற கண்ணோட்டங்களில், மொழி பெயர்ப்பு அவசியமான ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. மொழிபெயர்ப்புக்களை விடத் தழுவல்கள் கூடிய பயனளித்த நிலைகளும் இருந்துள்ளன.

பாலேந்திராவும் அவரது வாழ்க்கையிலும் நாடகமேடையிலும் உறுதுணையாக இருந்து வரும் ஆனந்தராணியும் 1980 களின் முற்பகுதியில் இலங்கையை விட்டு வெளியேறி இங்கிலாந்து வந்தனர். இடதுசாரி முனைப்புள்ள நாடகங்களில் அதிசிறப்பான சிலவற்றைத் தயாரித்தளித்த தாஸீஸியஸ் 1970களிலேயே அயல்நாடு சென்று 1980களில் இங்கிலாந்து வந்தார். இலங்கையின் இழப்புக்கள் லண்டன் தமிழ்ச் சமூகத்தின் உடனடியான லாபமாகியிருக்க வேண்டும். ஆயினும் அவர்களது பங்களிப்பை உள்வாங்கத் தயாரான நிலையில் லண்டன் வாழ் தமிழ்ச் சமுதாயம் இருக்கவில்லை. பத்து வருடங்கட்கும் மேலான கடும் உழைப்பின் மூலம் யாழ் மாவட்டத்திலும் கொழும்பிலும், பேராதனையிலும் தனக்கென்றொரு தரமான, விரிவான ரசிகர் கூட்டத்தைக் கட்டியெழுப்பிய அவைக்காற்றுக் கலைக்கழகம் முதலிருந்தே தொடங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவைக்காற்றுக் கலைக்கழகத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட நிர்மலாவின் லண்டன் வருகை பாலேந்திராவுக்குத் தென்பூட்டியது. மீண்டும் அதிக முனைப்புடன் அவைக்காற்றுக் கலைக் கழகம் செயற்படத் தொடங்கியது.

தொடரும்

# பிணதேவதையின் கை ஓங்குகிறது?

சிவப்பிரகாசம்

ஓ பிண தேவதையே!
உனக்கு
பெருவிருந்து தினமும்
பூரித்துப் போய் விட்டாய்
"அசுரர்"களுடன் சேர்ந்து
அபலைகளை தின்றும்
அடங்கலையோ இன்னும்?

இயற்கையுடன் இன்று
ஒப்பந்தம் வைத்து
பூகம்பப் பூமியில்
புகை பிடிக்கின்றாய்
நீ சாகசக்காரி
"அது
பூகம்பம் அல்ல
...வைத்த குண்டு"
என்று
புலனாய்வுத் துறைக்கு
புகார் சொன்னாலும்
சொல்வாய்
அதை
அப்படியே நம்பும்
அறிவாளிகள் அவர்கள்?
நாங்கள் அல்ல!

இலட்சியத்துக்காக
இத்தனை மரணங்கள்
இத்தனை இழப்புகள்
பாசத்தை சுரந்த
பாவையர் பாசறையில்
பள்ளியைத் துறந்த
பாலகர் போர்களத்தில்

ஏ பிணதேவதையே
இவர்களின்
இறவா உடல்களில்
உன் எச்சில்கள்
என்றோ ஒருநாள்
உனக்கே விஷமாகும்

கருணையற்ற
பிணந்தின்னிப் பிசாசே!
அதிகாரத்தில் விளைந்த
அந்த
"அசுரர்"களின்
மொத்திய தேகம்
உன்
கண்களுக்கு ஏன்
தெரிவதில்லை?
தியாகப் பிஞ்சுகளின்
செங்குருதியில்
தினந்தினம்
குளிப்பதில்
அப்படி என்ன
அலாதிப்பிரியம்

பிண தேவதையே
அந்த
தியாக தீயிலே
ஒருநாள்
நீ
வெந்து போகப்போவது
உறுதி !

# நாங்கள்

அமைதி இழந்து பல நாளாச்சு
தூக்கம் இழந்து பல வருஷமாச்சு
துக்கத்தோடு வாழ பழகியாச்சு
பத்து வயது என் தம்பி
லெப்டினன்ட் ஆனான்.....
பதினாறு வயசு தங்கை
கெப்டன் ஆனாள்....
எனக்கு ஒரு
பட்டமும் கிடைக்கவில்லை
ஏனென்றால் நான் ஏ.கே.
இன்னும் தூக்கவில்லை

நிவேதிகா

புதுக்க விதை



# மந்திகள்

நினைக்க நினைக்க
ஆத்திரம் ஆத்திரமாய் வருகிறது

காந்தி அடிகளையும்
அவரது "மூன்று பொம்மைகளையும்"
பாடம் சொன்ன
பள்ளி வாத்தியாரையும்

நினைக்க நினைக்க
ஆத்திரம் ஆத்திரமாய் வருகிறது

தீயவை என்று
மூடிவைத்த கண்கள்
மூடியபடி

கேள்விப்படுவதையும்
தீயன என்று
பொத்திய காதுகள்
பொத்தியபடி

பேசினால இதுகளை எண்ணி
தீதுதான் பேசவரும் என்று
சாத்திய வாயோ
சாத்தியபடி

இந்த அவஸ்தைகளுக்கு
காரணமான காரணம்
காந்தி அடிகளே

ஏதாவது
எழுதலாம் என்றால்
கைகளோ
தானாய் மூடிக்கொள்ளாத
காதுகட்கு
சேவகம் செய்தபடி

எனக்கு
வருகிற ஆத்திரத்துக்கு
தூஷணத்தால் திட்டத்தான்
வருகிறது
(மனதுக்குள்)

அருண்

# ரஷ்யா ஆபத்தை நோக்கி....

**1991 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் டாங்கி ஒன்றின் மீது ஏறி நின்றுகொண்டு பொறிஸ் யெல்ஸ்ரின் ரஷ்யப் பாராளுமன்றத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தை முனைப்படுத்தினார். 1993 ஆண்டு அக்டோபர் மாதத்திலோ யெல்ஸ்ரினின் உத்தரவின் கீழ் டாங்குகள் பாராளுமன்றத்தின் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளன.**

கடந்த சில நாட்களாக உலக அரங்கில் அதிர்வு அலைகளை ஏற்படுத்தி வந்த ரஷ்யப் பிரச்சனைக்கு ஜனாதிபதி பொறிஸ் யெல்ஸ்ரின் ஒரு தற்காலிகமான இராணுவத்தீர்வினை கண்டுள்ளார். பாராளுமன்ற எதிர்ப்பாளர்களினால் ஆட்டம் கண்ட தமது பதவியைக் காப்பாற்ற யெல்ஸ்ரின் பாராளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டதும் இராணுவத்தினதும், துப்பாக்கிகளதும் உதவியை நாடியதும் மேற்குலகம் தட்டிக் கொடுக்கும் ரஷ்ய ஜனநாயகத்தின் கறுப்புப் பக்கங்கள்.

அதுபோலவே ரஷ்யாவின் பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதிகள், யெல்ஸ்ரினின் சர்வாதிகாரத்தை எதிர்த்தவர்கள், பாராளுமன்ற அமைப்பு முறையை பாதுகாக்க முயன்றவர்கள், ஜனநாயகத்தின் பிரதிநிதிகள் என்றெல்லாம் கருதப்பட்ட அலெக்ஸாண்டர் றூற்ஸ்கோய், ருய்லன் கஷ்புலற்றோவ் போன்றவர்கள் தமது போராட்டத்தை குண்டர்களிடம் கையளித்ததும், வன்முறையை நோக்கி நகர்த்தியதும் இன்று சிறைக் கைதிகளாக மாறியிருப்பதும் கூட ஜனநாயகத்தின் கசப்பான அம்சங்கள்தான்.

இம்முறை ரஷ்யப் பிரச்சனைகளில் ஜனநாயகத்தின் கசப்பான அம்சங்கள் மாத்திரமல்ல, வேடிக்கையான அம்சங்களும் உள்ளன. 1991 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் டாங்கி ஒன்றின் மீது ஏறி நின்றுகொண்டு பொறிஸ் யெல்ஸ்ரின் ரஷ்யப் பாராளுமன்றத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தை முனைப்படுத்தினார். 1993 ஆண்டு அக்டோபர் மாதத்திலோ யெல்ஸ்ரினின் உத்தரவின் கீழ் டாங்குகள் பாராளுமன்றத்தின் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளன.

ரஷ்யப் பாராளுமன்றத்துக்கும் யெல்ஸ்ரினுக்குமிடையிலான முரண்பாடுகள் நீண்டநாட்களாகவே தொடர்ந்து வளர்ந்து வந்தன. இருதரப்பு இழுபறிக்குள்ளும் சிக்கிக் கொண்ட ரஷ்யா அரசியல் பொருளாதார சீரழிவுகளை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டுவந்தது. ஆனால் இம்முறை இருதரப்பு முரண்பாடுகளும் வன்முறை மோதலாக வெடித்து.

பல உயிர்களைப் பலி கொண்டதுடன் இந்த நூற்றாண்டில் மொஸ்கோவில் நடந்த மிகமோசமான வன்செயல்கள் என்ற வர்ணனையையும் பெற்றுள்ளது.

இம்முறை பிரச்சனைகள் இப்படித்தான் ஆரம்பித்தன. யெல்ஸ்ரினின் ஆதரவாளர் என்று கருதப்படுபவரும் முன்பு பிரதமராக இருந்து பாராளுமன்ற எதிர்ப்பாளர்களின் எதிர்ப்பினால் பதவி விலக்கப்பட்டவருமான யெகொர் கைடாரை செப்ரெம்பர் 16ம் திகதி துணைப் பிரதமராக யெல்ஸ்ரின் நியமித்தார். இது இரு தரப்பு விரோதத்தையும் அதிகரித்தது. செப்ரெம்பர் 18ம் திகதி குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே யெல்ஸ்ரின் ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம் என்ற வகையில் செய்திகள் வந்தன. இதனை ஒரு அபாய எச்சரிக்கையாக கருதிய ரஷ்ய மக்கள் உறுப்பினர் கொங்கிரஸ் செப்ரெம்பர் 20ம் திகதி கூடியது. இங்கு விவாதிக்கப்பட்ட முக்கிய விடயம் யெல்ஸ்ரினிடம் குவிந்திருக்கும் அதீத அதிகாரங்களை குறைப்பது என்பதே. செப்ரெம்பர் 21 ம் திகதி யெல்ஸ்ரின் பாராளுமன்றத்தைக் கலைப்பதாகவும் டிசம்பர் 11,12ம் திகதிகளில் நடைபெறும் என்றும் அறிவித்தார். ஆனால் அவருக்குப் போட்டியாக பாராளுமன்றம் யெல்ஸ்ரின் ஜனாதிபதிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகவும் புதிய ஜனாதிபதியாக அலெக்ஸாண்டர் றூற்ஸ்கோயை நியமிப்பதாகவும் அறிவித்தது. இப்போது ரஷ்யாவுக்கு இரண்டு ஜனாதிபதிகள் அரசியல் சாசன நீதிமன்றத்தின் தலைவராகிய வலெரி சோர்க்கின் யெல்ஸ்ரினின் நடவடிக்கைகள் அரசியல் சட்டத்துக்கு விரோதமானவை என அறிவித்தார் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை ஆக்கிரமித்தனர். செப்ரெம்பர் 28ம் திகதி துருப்புக்கள் பாராளுமன்றத்தை சுற்றி வளைத்தன, செப்ரெம்பர் 29ம் திகதி யெல்ஸ்ரின் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தைவிட்டு வெளியேறுமாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டார். ரஷ்யாவின் 89 பிரதேச சபைகளில் 62 இனது தலைவர்கள் யெல்ஸ்ரினிடம் பாராளுமன்ற சுற்றிவளைப்பை நீக்குமாறு கோரினர். ஆனால் யெல்ஸ்ரினோ பாராளுமன்ற சுற்றி வளைப்பை மேலும் இறுக்கினார். பாராளுமன்றக் குழுவினரோ யெல்ஸ்ரினுடன் எந்த உடன்பாட்டுக்கும் வர மறுத்தனர்.

பாராளுமன்றத்துக்கான மின்சார, நீர், உணவு விநியோகங்கள் துண்டிக்கப்பட்டன. அக்டோபர் 3ம் திகதி யெல்ஸ்ரின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மொஸ்கோ மேயரது அலுவலகத்தைக் கைப்பற்றியதுடன் பிரதம

## சுழலும் உலகம்



**தி. உமாகாந்தன்**

தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தையும் தாக்கினர் இச்சம்பவத்தில் 62 பேர் கொல்லப்பட்டனர். யெல்ஸ்ரின் மொஸ்கோவில் அவசரகால நிலையை பிரகடனம் செய்தார் கிரெம்ளினைப் பாதுகாக்க மொஸ்கோ மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என கைடர் கோரிக்கை விடுத்தார்.

அக்டோபர் 4ம் திகதி இராணுவம் பாராளுமன்றத்தைத் தகர்த்தது 50 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ருஸ்ற்கோய் கஷ்புலற்ரேவ் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். மொஸ்கோ விலுள்ள உள்ளூராட்சிச் சபைகள் யெல்ஸ்ரினுல் கலைக்கப்பட்டு இரு பிரதேச அரசுகளின் ஆளுனர்களும் பதவி நீக்கப்பட்டனர். இறுக்கமான பத்திரிகைத் தணிக்கையும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

ரஷ்யாவின் மீது தனது அதிகாரங்களை மிக அழுத்தமாகப் பதிக்க முயலும் யெல்ஸ்ரின் தன்னை மூர்க்கமாக எதிர்த்து நின்ற பாராளுமன்றம் வீழ்ச்சியடைந்த பின்னர் பல அரசியல் கட்சிகளையும், பத்திரிகைகளையும் தடை செய்துள்ளார். தேசிய இரட்சண்ய முன்னணி, ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி, உழைப்பாளர்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் மற்றும் பிராவ்தா உட்பட மற்றும் பல சஞ்சிகைகளையும் தடைசெய்துள்ளார். இன்னும் சில பத்திரிகை அலுவலகங்களையும் மூடிவிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளன. மொஸ்கோவில் இரவு ஊரடங்குச் சட்டமும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இந்த கட்சிகளும் பத்திரிகைகளும் சமீபத்திய கிளர்ச்சிகளுக்கு ஆதரளித்தன அதனுலேயே அவை தடைசெய்யப்பட்டன என நீதியமைச்சு தடையை நியாயப்படுத்துகிறது.

பராளுமன்றத்தின் மீது தாக்குதல், பாராளுமன்ற உறுப்பினர்கள் கைது மற்றும் பத்திரிகைகள், கட்சிகள் மீதான தடை இவை அனைத்துக்கும் பிறகு தொலைக்காட்சியில் தோன்றிய யெல்ஸ்ரின் அனைத்துப் பிரச்சனைகளுக்கான பொறுப்புக்களை றுற்ஸ்கோய், கஷ்புலற்ரேவ் ஆகியோரது தோள்கள் மீதே சுமத்தினுர் "நாங்கள் ஒரு யுத்தத்துக்காக எங்களை தயார்படுத்தி இருக்கவில்லை" எனக் கூறிய யெல்ஸ்ரின் "நாங்கள் தலைநகரில் அமைதியையே ஏற்படுத்த முனைந்தோம் ஆனுல் இந்த நகரின் மீது வன்முறையை பிரயோகித்தவர்களாலேயே இங்கு இரத்தம் சிதறியது, குற்றச்செயல்கள் நிகழ்ந்தன" என்ருர் அது மாத்திரமல்ல "இவை ஏற்கனவே திட்டமிடப்பட்டவை இவை கம்யூனிஸ்டுகளாலும், பாஸிஸ்ற் தலைவர்களாலும், முன்னுள் சட்ட வகுப்பாளர்களாலுமே நிகழ்த்தப் பட்டவை. அதனுலேயே இவர்களுக்கு மன்னிப்பு கிடையாது. ஏனென்ருல் இவர்களது போர் அமைதியான மக்களுக்கு எதிராக எழுப்பப்பட்டது" என யெல்ஸ்ரின் கூறுகிருர்.

ஆனுல் இப்போது கைது செய்யப்பட்டிருக்கும் கஷ்புலற்ரேலின் கருத்தோ இதற்கு எதிர்மறையானது. "தொலைக்காட்சி நிலையத்தின் மீது எந்த தாக்குதலுக்கும் நாங்கள் உத்தரவிடவில்லை. இவை பற்றிய விபரங்களை எமது பாராளுமன்றக் கூட்டத்தின் பிறகு கேள்விப்பட்டோம் இது ஒரு திட்டமிடப்பட்ட ஆத்திரமூட்டல் எமக்கிருக்கும் ஆதரவை மழுங்கடிப்பதற்காகவே இவை மேற்கொள்ளப்பட்டன" என்கிருர் எதிர்ப்பாளர்கள் அவர்களது ஆதரவாளர்கள் போன்ருேர் கைது செய்யப்பட்டு விட்டார்கள். தற்காலிகமாக மொஸ்கோவில துப்பாக்கி வேட்டுக்கள் ஒய்ந்துள்ளன. கம்யூனிசத்தின் தளர்வோடு சோவியத்தில் புதுமலர்ச்சி ஏற்படும் என முன்னர் மேற்குலகம் அறைந்து சொன்னது. ஆனுல் நடந்ததோ எதிரானது. சோவியத் யூனியன் மாத்திரம் சிதறவில்லை. இன்று முன்னுள் சோவியத் யூனியன் முழுவதிலும் இரத்தச்சிதறல் எங்கும் உள்நாட்டு யுத்தமும் பிரிவினைக்கான யுத்தங்களும், அதிகாரத்தைக் கைப்பற்றும் யுத்தங்களும் பொருளாதாரச் சீரழிவும், பசியும், பட்டினியும்தான்.

இதிலே வெட்கக் கேடான விடயம் என்னவென்ருல் பாராளுமன்றத்தைத் தகர்த்து துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்து இரத்தச் சிதறல்களின் மூலம் யெல்ஸ்ரின் "ஜனநாயகத்தை பாதுகாத்திருப்பதை" மேற்குலகம் தட்டிக்கொடுத்து ஆர்ப்பரித்து பாராட்டியிருப்பதுதான். யெல்ஸ்ரினுக்கு தனது பூரண ஆதரவைத் தெரிவித்த அமெரிக்க ஜனுதிபதி பில் கிளின்ரன் "எதிர்தரப்பாளர்களே பிரச்சனையைத் தொடங்கினுர்கள். சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கு யெல்ஸ்ரினுக்கு இதைத்தவிர வேறு வழியில்லை" எனத் தெரிவித்ததுடன் "அமெரிக்கா யெல்ஸ்ரினை ஆதரிக்கிறது ஏனெனில் அவர் ரஷ்யாவில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனுதிபதி" என்கிருர்.

சீனுவைத் தவிர்ந்த இதர பெரும்நாடுகள் யெல்ஸ்ரினுக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளன. "ரஷ்யாவில் ஏற்பட்ட சமீபத்திய இரத்தச் சிதறல்கள் குறித்து நாம் பெரிதும் வருந்துகிருேம்" எனக் குறிப்பிட்ட சீன வெளிவிவகார அமைச்சு "அயலிலுள்ள ஒரு நட்பு நாடு என்றவகையில் ரஷ்யாவில் பிரச்சனைகள் முடிவுக்கு கொண்டுவரப்படுவதையும் சரியான ஒரு தீர்வு எடுக்கப்படவேண்டும் என்பதையும் உறுதி, ஐக்கியம், பொருளாதார மாற்றம் ஆகியவை ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை நாம் விரும்புகிருேம்" என்றும் கூறியுள்ளது.

டிசம்பர் மாதம் தேர்தல் நடத்தப்போவதாக யெல்ஸ்ரின் அறிவித்துள்ளபோதும் போலந்து தேர்தலில் கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்த வெற்றி யெல்ஸ்ரினின் எண்ணத்தை மாற்றலாம். இம் முறை பிரச்சனையைத் தீர்க்க இராணுவம் யெல்ஸ்ரினுக்கு உதவி செய்தபோதிலும் இராணுவத்தின் மீது அதிக நம்பிக்கையை வைப்பது யெல்ஸ்ரின் எதிர்கொள்ளப்போகும் அடுத்த ஆபத்தாக இருக்கலாம். தனக்கு எதிரான அனைத்து அமைப்புக்களையும் தடைசெய்வது அல்லது கலைப்பது என்ற யெல்ஸ்ரினின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் எதிர்ப்பாளர்களின் பலத்தையே அதிகரிக்கும். ரஷ்யாவின் உண்மையான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுமல் காலம் கடத்தும் ஒவ்வொரு நிமிடமே யெல்ஸ்ரினுக்கு மட்டுமல்ல ரஷ்யாவுக்குமே ஆபத்தானதாகும். வெளிநாட்டுத் தலைவர்களின் ஆதரவு என்ற மண் குதிரையில் பொறிஸ் யெல்ஸ்ரின் அதிக துாரம் பயணிக்கமுடியாது.

# கனடியப் பொதுத்தேர்தல்: ஒரு நோக்கு

## வே.விவேகானந்தன்

கனடாவின் முப்பத்தைந்தாவது பொதுத்தேர்தல் இம் மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளது. அன்றய தினம் கனடிய வாக்காளர்கள் பொது மக்கள் சபையின் 295 ஆசனங்களுக்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யவுள்ளனர். 1867ம் கனடிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது 181 ஆசனங்களைக் கொண்ட பொது மக்கள் சபைக்கு கன்சவேட்டில், லிபரல் ஆகிய கட்சிகள் நேரடியாகப் போட்டியிட்டு 101 ஆசனங்களைக் கைப்பற்றிய கன்சவேட்டிவ் கட்சி, ஆட்சியை அமைத்துக் கொண்டது. அதன் தலைவர் சேர் ஜோன் எ. மக்டொனல்ட் நாட்டின் முதலாவது பிரதமரானர்.

யுத்தமின்றி ரத்தமின்றி உருவாகிய கனடாவில் ஜனநாயக பாரம்பரியங்களின் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. ஆரம்பத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் மக்கள் கருத்தை சரியான முறையில் பிரதிபலித்ததாக சொல்வதற்கில்லை. காரணம் அப்போது 21 வயதுக்கு மேற்பட்ட சொத்துரிமையுடைய ஆண்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்தனர். எனினும் காலப் போக்கில் மக்களின் கருத்துக்களை பெருமளவு சரியான முறையில் பிரதிபலிக்கக் கூடியதாயும், மக்கள் தமது வாக்களிக்கும் உரிமையை சுதந்திரமாக பயன்படுத்தக் கூடியதாயும், தேர்தல் சட்டவிதி முறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக 1874ம் ஆண்டு ரகசிய வாக்களிப்பு முறை முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. இது மக்களின் வாக்களிக்கும் சுதந்திரத்தை உறுதி செய்தது. 1918 ம் ஆண்டு 21 வயதுக்கு மேற்பட்ட சொத்துரிமை உடைய பெண்களுக்கும் இராணுவசேவையில் பணிபுரியும் பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. 1919 ம் ஆண்டு பொது மக்கள் சபைக்கு வேட்பாளராகப் பெண்கள் போட்டியிடும் உரிமை வழங்கப்பட்டது. இதையடுத்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொது மக்கள் சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் AGNES MACPHAIL. 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தேர்தல் சட்டத் திருத்தத்தின் பிரகாரம் சொத்துரிமை பற்றிய தகைமையும் நீக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு கனடாவின் ஆதிக் குடிகளான NATIVE CANADIANS வாக்குரிமை பெற்றனர். இதன் மூலம் அவர்களுக்கு காட்டப்பட்ட பாராபட்சம் நீக்கப்பட்டது.

பொதுத் தேர்தலின் போது மக்கள் தீர்ப்பினைச் சரியான முறையில் பிரதிபலிக்கச் செய்யும் வகையில் தேர்தல் தொகுதி (RIDINGS OR CONSTITUENCIES) எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக சுதந்திர ஆணைக் குழு ஒன்றினை 1963 ம் ஆண்டு அரசாங்கம் நியமித்தது. இந்த ஆணைக்குழு அரசியல் தலையீடுகளின்றி பாரபட்சமற்ற முறையில், தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை வரையறை செய்து வந்தது எனினும் ஆரம்பத்தில் தொகுதிகளிடையே சமத்துவம் காணப்படவில்லை. குறிப்பாக 1979ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது யோர்க் ஸ்காபரோ தொகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை 80 000 ஆக காணப்பட்ட அதேவேளை வன்கூவர் மத்தி தேர்தல் தொகுதி 45,000 வாக்காளர்களைக் கொண்டதாக விளங்கியது. மேலும் கிராம நகரங்களுக்கிடையேயும் சமமான பிரதிநிதித்துவம் காணப் படவில்லை. குறிப்பாக ரொறன்டோ மொன்றியல், வன்கூவர் வின்னிபெக் போன்ற நகரங்கள் தாம் கொண்டிருக்கும் சனத் தொகையுடன் ஒப்பிடும் போது குறைந்தளவு பிரதிநிதிகளையே பொது மக்கள் சபைக்கு அனுப்பி வந்தன. தற்போது இக் குறைபாடு பெருமளவு குறைக்கப்பட்டு ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் ஏறத்தாழ சமமான குடித்தொகையைக் கொண்டதாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

1970 ம் ஆண்டு, தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் பதிவு செய்யப்படவேண்டும் என்ற விதி கொண்டுவரப்பட்டது. 1974ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேர்தல் சட்ட விதி கட்சிகாரரும் வேட்பாளர்களும் பொதுத் தேர்தலுக்காக செலவிடும் பணத் தொகையைக் கட்டுப்படுத்தியது. அதேவேளை செலவு செய்யப்பட்ட பணத்தை பொதுத் திறைசேரி நிதியிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளும் வசதியையும் ஏற்படுத்தியது.

இறுதியாக இவ்வருடம் மே மாதம் 6 ம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்ட விதிகளின் பிரகாரம் வெளிநாடுகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்படாமல் தொடர்ந்து வசிக்கும் கனடிய பிரசாவுரிமை உடையவர்களும் வாக்களிக்க உரிமையுடையவராவர் இவ்வாறு வெளிநாடுகளில் வசிக்கும் கனடிய பிராசாவுரிமை உடையவர்களைத் தேர்தலில் பங்கு கொள்ளச் செய்வதற்காக ELECTIONS CANADA பொது மக்களின் உதவியை நாடியுள்ளது.

கனடிய அரசியல் யாப்பின் பிரகாரம் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு ஆகக் குறைந்தது 47 நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் இதற்கிணங்க அக்டோபர் மாதம் 25ம் திகதி பொதுத் தேர்தலை நடத்தத் தீர்மானித்த பிரதமர் செப்டம்பர் மாதம் 8ம் திகதி பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி மாட்சிமை தங்கிய மகாதேசாதிபதிக்கு சிபார்சு செய்ததை அடுத்து மகாதேசாதிபதியால் கலைக்கப்பட்டது. அரசியல் யாப்பினை மீறுது, தனக்கு சாதகமான சூழ்நிலையில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் சுதந்திரம் ஆளும் கட்சிக்கு இறுதியாக உள்ள ஒரே ஒரு சலுகையாகும். எனினும் இம்முறை தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பதில் இன்னுமொரு காரணி செல்வாக்கு செலுத்தியுள்ளது. கடந்த வருடம் இதே மாதம் நடைபெற்ற

சர்வசன வாக்கெடுப்பிற்காகத் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் இம் மாதம் 25 ந் திகதியுடன் காலாவதியாகிறது. அதன் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதாயின் புதிய வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்காக கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இதற்கு ஏறத்தாழ 15 மில்லியன் டொலர் செலவாகும். இதனை மீதப்படுத்தியுள்ளார் பிரதமர் கிம் கம்பல். கடந்த வருடம் அக்டோபர் மாதத்தின் பின் 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களும் பிராசவுரிமை பெற்றவர்களும் தேர்தல் காரியாலயத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம் 25ந் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்க முடியும்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான பதினுன்கு கட்சிகள் தம்மை உத்தியோக பூர்வமாகப் பதிவு செய்துள்ளன. 1988 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் எண்ணிக்கையுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இம் முறை கட்சிகளின் எண்ணிக்கை இரண்டால் அதிகரித்துள்ளது. ஆகக் குறைந்தது 50 வேட்பாளர்களையாவது போட்டிக்கு நிறுத்தும் கட்சியே தன்னை உத்தியோக பூர்வமாகப் பதிவு செய்து கொள்ள முடியும். இந்த வகையில் கடந்த பொதுத் தேர்தல்களில் போட்டியிட்ட COMMUNIST PARTY, SOCIAL CREDIT PARTY, RHINOCEROS PARTY என்பன இம்முறை தம்மை பதிவு செய்வதற்கான தகுதியை இழந்துவிட்டன. கட்சிகளுடன் சுயேச்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். எனினும் கனடிய அரசியலில் அவர்களின் நிலை மிக மங்கியதொன்ருகவே உள்ளது.

தேர்தலில் பல கட்சிகள் போட்டியிட்ட போதிலும் PROGRESSIVE CONSER YATIVE PARTY, LIBERAL PARTY, NEW DBMOCRATIC PARTY ஆகிய மூன்று கட்சிகளும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தன. எனினும் இம் முறை பொதுத் தேர்தலில் Reform party, Bloc Quebecois, National Party ஆகிய கட்சிகளும் பெரும் சவாலாக அமைந்துள்ளன.

இவ்வாறு ஆறுகட்சிகள் கடும் போட்டியில் குதித்துள்ளமையால் தனி ஒரு கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி, பலம் வாய்ந்த அரசாங்கம் அமைவது அசாத்தியமே, என்ற கருத்து பரவலாக நிலவுகிறது. எனினும் தேர்தல் முடிவு எவ்வாறு அமையும்? என்பது பற்றி எதுவுமே கூறமுடியாத நிலையே காணப்படுகிறது. கடைசியாக நடைபெற்ற 12 பொதுத்தேர்தல்களில் கனடியவாக்காளர்கள் சிறுபான்மை அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளனர். இப் பொதுத் தேர்தலிலும் அத்தகைய ஒரு அரசாங்கம் தெரிவு, செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கனடிய பொதுத்தேர்தல் முடிவுகள் பொதுவாக தெளிவற்ற தன்மை கொண்டதாகவே காணப்படுகிறது. குறிப்பாக 1984ல் பிறையன் மல்ரோனி தலைமையில் போட்டியிட்ட கன்சவேட்டிவ் கட்சி 211 ஆசனங்களைக் கைப்பற்றி 3/4 பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை அமைத்தது. கியூபெக் உட்பட அனைத்து மாகாணங்களிலும் கூடுதலான ஆசனங்களில் வெற்றி பெற்றது. கனடிய பொதுத் தேர்தல்களின் வரலாற்றில் தனி ஒரு கட்சி அதிகூடிய ஸ்தானங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தது இதுவே முதற் தடவையாகும். எனினும் அக்கட்சி மொத்தத்தில் 50% வாக்குகளையே பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் இரு வருடங்களின் பின்னர், கருத்துக் கணிப்பீடு நடத்தப்பட்டபோது 24% ஆதரவே இருப்பதாக புள்ளி விபரம் காட்டியது. இது லிபரல், புதிய ஜனநாயக கட்சி என்பன பெற்றிருந்த ஆதரவை விடக் குறைவாகும். 1988 ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது மீண்டும் மல்ரோனி தலைமையிலான கன்வேட்டிவ் கட்சி அமெரிக்காவுடனை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை முக்கிய கொள்கையாக வைத்து தேர்தலில் போட்டியிட்டது. அமெரிக்காவுடனை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கடும் விமர்சனத்துக்குள்ளாகியது. எனினும் இறுதியாக பொதுத்தேர்தலில் அக் கட்சி 170 ஸ்தானங்களைக் கைப்பற்றி தனிப்பெரும்பான்மை பலம் வாய்ந்த அரசாங்கத்தை அமைத்துக் கொண்டது.

தொடரும்




# குடும்ப உறவுகளும் சிக்கல்களும் சில திருத்தங்கள்

**அருண்**

இல்வாழ்வில் பொதுவாய்க் காணப்படும் சில குறைநிறைகள் கடந்த 12ம் 13ம் இதழ்களில் அலசப்பட்டிருந்தது. இது தொடர்பாக சில விளக்கங்கள் தர அவசியம் நேர்ந்துள்ளது. முதலில் இது ஏன் எழுதப்பட்டது என்பது பற்றி....

இதை தாயகத்தில் ஏன் எழுத வேண்டும் என்னும் அளவுக்கு இது அருவருப்பான விஷயமே அல்ல. குடும்பங்களில் சாதாரணமாய் காணப்படுவதே எழுதப்பட்டிருந்தது. இங்கு கூறப்பட்டவை ஒரு குடும்பத்தை தானும் மேம்படுத்த உதவி புரியட்டும் என்பதே நோக்கம். அத்துடன் பொதுவாக அரசியல் செய்திகளே தாயகத்தை நிரப்பும். தனிமனிதனுக்கு இவ் அரசியல் அறிவைவிட குடும்ப உறவு மீதான அக்கறையே அவசியமானது என்பது என் எண்ணம். இதனல் குடும்ப உறவுக்கு பயன்தரும் விடயங்கள் தாயகத்தில் இடம்பெற வேண்டும் என்பது என் ஆவலும் கூட. குடும்ப உறவு சம்பந்தமான எனது இக்கட்டுரை இதுபோன்ற ஆக்கங்களுக்கு தூண்டுதலாய் அமையமாட்டாதா எனும் ஆதங்கமும் கூட இக் கட்டுரையின் நோக்கம்.

அந்தரங்கமானவை அம்பலத்துக்கு வரவழைக்கப்பட வேண்டிய அவசியம் என்ன என ஒரிரு குரல்கள் அங்கலாய்த்தன. குடும்ப விவகாரங்கள் அந்தரங்கமானதாய் இருக்கலாம். இங்கு ஆலோசனைகள் தேவைப்படும்போது இவ் ஆலோசனைகள் பகிரங்கம் ஆகின, பலரைச் சேரவேண்டும் என்பதற்காக. எல்லாம் அந்தரங்கமானவை என்று அவற்றைப் பூட்டி வைத்துக்கொண்டு அதனுள் புழுங்கித் தவிப்பது நடைமுறையாகிவிட்டது. காற்றுப் போய் வரவாவது உதவலாம் என்ருல். ... இது இன்ன இன்ன மாதிரித்தான் என சில முடிவுகளுடன் முடங்கி இருப்போருக்கு இக்கட்டுரை அசீரணமாய் அமைந்திருக்கலாம்.

குழந்தை பெற்றுக்கொள்வது மட்டும் குடித்தனம் என்ற முடிவுடன் இருப்போரும் குடும்பம் என்ருல் பிரச்சனைகள் இருக்குந்தான் என்போரும் கட்டிலுடன் மட்டும் நில்லாமல் வாழ்வின் மீதிப் பகுதியையும் கவனிப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதே நான் சொல்ல வந்தது. கட்டுரை கடுமையான சொற்களைக் கொண்டுள்ளது என்னும் அபிப்பிராயமும் உள்ளது. சுருங்கச் சொல்ல எண்ணியதால் இது ஏற்பட்டிருக்கலாம், பலரைச் சென்றடைய இது தடையாய் இருக்கலாம். இக்கட்டுரையில் பிரச்சனைகள் கூறப்பட்டது உண்மையாய் இருக்கலாம். தம்பதி எல்லோருக்கும் பிரச்சனையா? இப்படி ஒரு கேள்வி. பிரச்சனைகளே இல்லாதவர்களும் உள்ளனர். இத்தகைய இலட்சியத் தம்பதிகள் மிகமிகக் குறைவே. இவ்விடத்தில் இன்னுமொன்று. பிரச்சனையே இல்லாதவரும் பிரச்சனையென சோடித்த நிகழ்வும் உண்டு. உதாரணம் ஒரு சம்பவம். "எனக்கு அவராலே சரியான கரைச்சலாய் இருக்குது. இனித் தற்கொலை தான் முடிவு." என ஒரு பெண் தன் சகோதரியிடம் அழுதழுது முறையிட்டாள். சமரசம் செய்த மைத்துனரை அணுகிய சகோதரர்களுக்கு பிரச்சனைக்கான துப்பு எதுவும் கிடைக்கவில்லை. உண்மையில் பிரச்சனையே இல்லை. ஆழமாக ஊடுருவிப் பார்த்ததில் காதலித்து மணமுடிக்கும் போது பெறத் தவறிய சீதனத்தை பெறுவதற்காக அக்கா நாடகம் போடுகிருர் என்பது துலங்கியது. இதையெல்லாம் எப்படித் திருத்துவது? பிரச்சனையென ஒருவர் கூறிக்கொள்ளும் போது பிரச்சனை தானென நாமும் முடிவெடுக்காமல் பிரச்சனையேதானு என முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்னுமொரு குற்றச்சாட்டு. சில இடங்களில் வசனங்கள் விளக்கமில்லாததும் குழப்பமானதாயும் அமைந்தது பற்றி. உண்மையில் எழுத்துப்பதிவு, அச்சமைப்பு எல்லாவற்றையும் ஏய்த்துவிட்டு தவறு வந்து அமர்ந்து கொண்டது. வருந்துகிருேம்.

அச்சுத் தவறுகள் இப்படித் திருத்தப்பட வேண்டும்........

1. சில குடும்பங்களில் தேனீக்கள் வாழ்முறை. அஃதாவது பெண் அக்குடும்பங்களில் முதன்மை வகிப்பார். இந் நிலைமை சமுதாய மதிப்பீட்டில் குறைவானதாய் கருதப்படுகிறது. ஆணையும் பெண்ணையும் பேதமற நினைத்தால் இதில் குறைவாய் மதிப்பிட என்ன இருக்கிறது.

2. யாருக்கும் கணவனே மனைவியோ இது இது இப்படி இருக்கவேண்டும் என்று "ஒடர்" கொடுத்து பெற்றுக் கொள்ளக்கூடியதல்ல. வரைந்து வைத்தே அச்சாய் வருவதில்லை. முன்னே பின்னே பேதங்கள் நேரலாம். இவற்றை நிவர்த்திக்கும் மருந்து மனமே.

3. (கணவன்) மனைவியின் ஆசைகளை முடிந்தவரை நிறைவேற்றவேண்டும். அதற்காக மனைவி தன் அநாவசிய ஆசைகளையும் கணவன் நிறைவேற்றவேண்டும் என எதிர்பார்க்கவேண்டும் என்பதல்ல. இக்கட்டுரைப் பற்றி அபிப்பிராயம் சொன்னவர்களுக்கு நன்றி.


வெளிவந்து விட்டது...

**புன்னகை மலர்**

தமிழ் வியாபார நிலையங்களில் கிடைக்கும்



வீடொன்றில் அறை வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: 920 9081

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள் வாடகைக்குப் பெற...

# A.R.K MARKET

## 31-35 ST.DENNIS DR
## (DON MILLS/EGLINTON)

★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள், இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்
★ Frozen seafood

**CD, Audio**
மலிவு விற்பனையில்

பழைய, புதிய தமிழ் வீடியோ படங்கள் வாடகைக்கும் விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# ஏ.ஆர்.கே மார்க்கட்
## (416) 421 3429

# குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கல்கியின் 'காற்றினிலே வரும் கீதத்தையும்' அம்மா பாடக் கேட்க இனிமையாகயிருக்கும். அம்மா விரும்பிப் பாடும் இன்னுமொரு பாடல் பாரதியின் 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாடல்.

அப்பா அந்தக் காலத்து ஆள். அவரிற்கு தியாகராஜ பாகதவர், பி.யூ. சின்னப்பா, எம். கே.ராதா, ரஞ்சனென்றால் பிடிக்கும். எம்.ஜி.ஆர் என்று சொல்ல மாட்டார். எம்.ஜி ராமசந்தர் என்றுதான் கூறுவார். எம். ஜி. ராமச்சந்திரன் இன்றைய படங்களை அவரிற்குப் பிடிக்காது. ஆனால் அன்றைய படங்களான மர்ம யோகியையும் குலேபகாவலியையும் அவரிற்குப் பிடிக்கும். டி.ஆர். ராஜகுமாரியின் கச்சதேவயானி, எம்.எஸ்.சுப்புலட்சுமியின் மீரா, ஜெமினியின் மிஸ்ஸியம்மா இவற்றை பற்றி இருவரும் அடிக்கடி பேசிக் கொள்வார்கள். இலங்கை வானொலி காலை நேரங்களில் நெஞ்சில் நிறைந்தவை என்றொரு நிகழ்ச்சியை ஒலிபரப்புவார்கள். அதில் பாகதவரின், கிட்டப்பாவின், சின்னப்பாவின், சுப்புலட்சுமியின் பாடல்களை ஒலிபரப்புவார்கள், இந்த நிகழ்ச்சிப் பாடல்களை அப்பா விரும்பிக் கேட்பார். இதனால் எனக்கும் அப்பாடல்களைக் கேட்டுக் கேட்டு நினைவில் அவை நன்கு பதிந்து போய்விட்டன.

பாகதவரின் 'கிருஷ்ணா முகுந்தா முராரே' ராதே உனக்குக் கோபம் ஆகாதடி 'சிவபெருமான் கிருபை வேண்டும்' எம்.எஸ்சின் 'காற்றினிலே வரும் கீதம்' 'கிரிதர கோபாலா... இவையெல்லாம் எனக்கும் பிடித்த பாடல்களாகிப் போயின. திரைப்படப் பாடலாசிரியர்களில் அப்பாவிற்குப் பிடித்த முக்கியமான பாடலாசிரியர் பாபநாசம் சிவன், எழுத்தைப் பொறுத்தவரையில் கல்கியின் எழுத்தென்றால் அப்பா, அம்மா இருவருக்குமே பிடிக்கும். அந்தக்காலத்தில் விகடனின் நடுப்பகுதியில் வரும் 'தியாக பூமி'யைக் காத்திருந்து வாசித்ததை நினைவு கூருவார்கள். சிவகாமியின் சபதத்தை பொன்னியின் செல்வனைப்பற்றி அடிக்கடி கதைத்துக் கொள்ளுவார்கள்.

பொன்னியின் செல்வன் நான் வாசித்த முதலாவது சரித்திர நாவல் இதுதான். இன்று கல்கியை விமர்சிக்கும் விமர்சக வித்தகளெல்லாம் கல்கியின் எழுத்தை வெறும் குப்பையாக ஒதுக்கித் தள்ளிவிடுகின்றார்கள். இன்றைய நிலையில் எத்தனையோ நூல்களை விடயங்களை அறியக் கூடிய அளவிற்கு நவீன தொழில் நுட்பம் வளர்ந்துவிட்டது. இன்றைய நிலையில் இருந்து கொண்டு கல்கியின் அன்றைய எழுத்துக்களை விமர்சனம் செய்வது வேடிக்கையாகயிருக்கின்றது அன்றைய சூழலில் அன்றைய காலகட்டத்தில் கல்கியின் எழுத்துக்கள் கல்கியின் வெற்றியே தங்கியுள்ளது. என் அப்பா அம்மா விரும்பி வாசித்த கல்கியின் பொன்னியின் செல்வனை நானும் ஒரு காலத்தில் விரும்பி வாசித்தேன். அதில் வரும் ஒடக்காரப் பெண் பூங்குழலியும் வல்லவரையன் வந்தியத் தேவனும், ஆழ்வார்க்கடியானும் நந்தினியும் குந்தவைப் பிராட்டியாரும்... இன்னமும் இவர்களை என்னால் ஞாபகப்படுத்த முடிகிற தென்றால்... கல்கியின் வெற்றியே இங்குதான்தங்கியுள்ளது. நாவல்களைப் படிக்க அதிகத் தமிழர்களைத் தூண்டியதில் நிச்சயம் கல்கிக்கு நிறையப் பங்கிருக்கின்றது. ஒரு குழந்தை எடுத்த எடுப்பிலேயே எழுந்து நடந்து வருவதில்லை. உருண்டு, புரண்டு, தவழ்ந்து எழுந்து பின்பு தான் நடக்கத் தொடங்குகின்றது. வளர்ச்சி அத்துடன் நின்று விடுவதில்லையே.. அதுபோல் தான் கல்கி போன்ற எழுத்தாளர்களின் பங்களிப்பும் வளர்ந்த குழந்தை தவழும் குழந்தையை வளர்ந்த நிலையில் வைத்து விமர்சிக்கமுடியாது. தவழுதல் வளர்வதற்கு எவ்வளவு முக்கியமோ அதுபோல தான் கல்கிபோன்ற எழுத்தாளர்களின் எழுத்துக்களும் மமிழ் எழுத்துலகின் வளர்ச்சியின் ஒரு கட்டத்திற்குரிய தேவையே அவர்களின் எழுத்துக்கள் பூர்த்தி செய்தன. இலங்கைத் தமிழர்களின் போராட்ட வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் அமிர்தலிங்கத்தின் பங்களிப்பும் தேவையாகத்தானிருந்தது. அதுபோல்தான் இதுவும்.

பாரதியின் பாடல்களைப் பொறுத்த வரையில் 'புதிய கோணங்கி' 'பாப்பாப்பாட்டு' 'மழைப்பாட்டு' இவையெல்லாம் அந்த வயதில் எனக்குப் பிடித்த பாடல்கள் ஏன்? இந்த வயதில் கூடத்தான்.

'திக்குக்கள் எட்டும் சிதறி தக்கத்
தீம் தரிகிட தீம் தரிகிட தீம்
தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து வெள்ளம்
பாயுது பாயுது பாயுது

என்ற பாடல் மழைக்காட்சியை அப்படியே கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்தி விடும் சக்திவாய்ந்தது. பாரதியின் எழுத்துக்கள் எல்லா வயதினரிற்கும் எல்லாக் காலங்களிலும் இன்பத்தைத் தரும் சக்தி வாய்ந்தவை. இதில் தான் கல்கி போன்றவர்களின் எழுத்துக்களிற்கும் பாரதி போன்றவர்களின் எழுத்துக்களிற்கும் உள்ள வித்தியாசமே இருக்கின்றது. பாரதியின் எழுத்து அறிவு வளர வளரப் புதுப்புது அர்த்தங்களைத் தந்து மேலும் மேலும் உயர்ந்து போய்க்

கொண்டேயிருக்கின்றது. பாரதியின் சிறப்பே இதுதான்.

பாரதி! இவன் என்மேல் ஏற்படுத்திவிட்ட பாதிப்பு... மிகவும் பலமானது தான். வேறெந்த தமிழ் எழுத்துலக சிற்பியையும் விட என்னை அதிகமாக ஆட்கொண்டவன் இவன்தான். வாழ்ந்த வாழ்க்கையிலோ வறுமை படர்ந்த சூழல். போதாக்குறைக்குக் கண்ணம்மா கண்ணம்மா என்று கொஞ்ச ஒரு செல்லம்மா ...அன்னியப் படைகளின் தேடுதல் வேட்டை... தலை மறைவு வாழ்க்கை . இந்நிலையில் நீ சாதித்தது மிகமிக அதிகம் தான். உன் குறுகிய கால வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் உன் சாதனைகள்... மிகவும் அதிகம் தான். உன்னாலெப்படி முடிந்தது? எப்படி முடிந்தது? உண்மையிலேயே நீ ஒரு விந்தையான மனிதன் தான். வாழ்வின் வெற்றிக்காக வெற்றி பற்றி இங்கு எத்தனை பேர் எழுதி குவிக்கின்றார்கள். ஆனால் உன் வாழ்க்கையே ஒரு புத்தகம் தான். நொந்து, சலித்து துவண்டிருக்கும் நெஞ்சுகளிற்கு உன் ஒவ்வொரு செய்கையும், எழுத்தும் உரமூட்டும் மருந்துகள் தான். பழமை அரசோச்சிக் கொண்டிருந்த ஒரு சூழல், நீ வாழ்ந்த சூழல். உன் ஒவ்வொரு செய்கையும் எழுத்தும் உனக்கு எவ்வளவு எதிர்பார்ப்பைக் கொண்டு வந்து தந்திருக்கும். உணர முடிகின்றது. நீ வாழ்ந்து முடிந்து ஆண்டுகள் பல ஓடிவிட்டன. இன்றும் நம் சமூகத்தைத் தீண்டாமை, பெண்ணடிமைத்தனம் இவையெல்லாம் பலமாகப் பிடித்துத் தானிருக்கின்றன. முற்றாக ஓடவிடவில்லையே... உன் காலகட்டத்திலோ இவையெல்லாம் மிகமிகப் பலமாக நம் சமூகத்தைப் பற்றியிருந்தன. இந்நிலையில் தான் பிராமணனான நீ உன் மார்பைச் சுற்றியிருந்த பூணூலை அறுத்தெறிந்தாய் விடுதலைக்காக மக்கள் விடுதலைக்காகக் குரல் கொடுத்தாய், வறுமை, தலைமறைவு வாழ்க்கை, சமுதாய எதிர்ப்பு இவற்றிற்கிடையில் உன்னால் இன்பமாக வாழ முடிந்தது. சிட்டுக்குருவியுடன் சல்லாபிக்க முடிந்தது. கம்பீரமான மீசையை முறுக்கியபடி நெஞ்சு நிமிர்த்தியபடி ஏறு நடை போட முடிந்தது. அஞ்சிக் கிடந்தவரிடையே நெஞ்சுத் துணிவை ஏற்ற, வளர்க்க முடிந்தது. இந்தியனைப் பாடினாய் தமிழனைப் பாடினாய் மனிதனைப் பாடினாய். உன் இறுதிக் காலத்தில், யானையால் மிதியுண்டு உடல்வாதையுற்று உன் உடல் ஒய்ந்து கிடந்த போது இவர்களெல்லாம் உனக்கு எவ்விதம் நன்றிக் கடனைத் தீர்த்தார்கள்? எட்டே எட்டுப் பேர்கள் மட்டும் உன் இறுதிச் சடங்கிற்கனுப்பி எவ்விதம் பெருமைப் பட்டுப் போனார்கள்?

உன் வாழ்க்கையிலிருந்து நாங்கள் அறிந்தது.. நிறைய நிறைய, 'ஊரோடு ஒத்து வாழ்' அதற்காக எல்லா விடயங்களிலும் ஒத்து வாழ வேண்டுமென்பதில்லை. சில சமயங்களில் சரியான கருத்திற்காய், சரியான விடயத்திற்காய் ஊரென்ன உலகமே எதிர்த்து நின்றாலும் அடிபணிந்து விடாதே. உன்னை ஊர் உலகம் மதிக்க வேண்டுமென்பதற்காக நாணலைப் போல், பச்சோந்தியைப்போல வளைந்து, குழைந்து உழன்று கிடக்காதே. உன் கருத்து மட்டும் சரியாகயிருந்துவிட்டால் உன் வாழ்நாளில் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் கூட உனக்குப் பின்னாலாவது நிச்சயம் உரிய தருணத்தில் மக்களைப் பற்றிக் கொள்ளத்தான் போகின்றது? இதைத்தான் உன் வாழ்க்கை கூறுகிறது. உன் எழுத்தும் இதனைத்தான் கூறுகின்றது.

"ராகவா....."

சிந்தனை கலைகிறது. அழைத்தது யாராகயிருக்கும்.... எதிரே.. கேற்றருகில் நிற்பது யார்?... இந்த இரவில்.. நகுலேஸ்வரன் தான். புகையிரத தொடரொன்று இரைந்தபடி சென்று மறைகின்றது. கேற்றைத் திறந்து உள்ளே அழைத்து வருகின்றேன். இந்த நேரத்தில் எதற்காக இவன்... அப்படியென்ன தலை போகின்ற அவசரம்.. நன்கு ஒருமுறை அவனது முகத்தை உற்றுப்பார்க்கின்றேன். சோர்வின் கோடுகள் படர்ந்து கிடக்கின்றன.

"என்னடா மச்சான் என்ன விசயம்...இந்த நேரத்தில் ...என்னடா விசயம்...."

அவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அழுது விடுவான் போலிருக்கின்றது. ஏதோ சொல்வதற்கு முயல்கின்றான் போலிருக்கின்றது. ஏதோ சொல்வதற்கு முயல்கின்றான் வார்த்தைகள் தான் ஒழுங்காக வரமுடியாமல் திணறுகின்றன.

"என்ரை மனுஷி.. என்ர குஞ்சு..."

இவனது குடும்பத்திற்கு ஏதோ நடந்து விட்டிருக்கின்றது.

"நகுலேஸ்... அழாதை மச்சான். . என்னடா விசயம்.. வீட்டிலையிருந்து ஏதாவது லெட்டர் ஏதாவது வந்ததே.."

ஒருவாறு தன்னைத் தேற்றியவன் கூறிய செய்தி... ஊரில் நடக்கும் குருஷேத்திரப் போரில் இடையில் அகப்பட்டு இறந்து விட்ட அப்பாவிகளில் இவனது மனைவியும் ஒருத்தி ....எல்லாம் முடிந்த பிறகுதான் இவனிற்கே தெரியவந்திருக்கின்றது. ஆறுதல் கூறித் தேற்றக் கூடிய விசயமா... குழந்தைகளின் நிலை.... இவனைப் போல் எத்தனை குடும்பங்கள்? எத்தனை அப்பாவி உயிர்கள் பலியாகி விட்டன? சொல்லி ஆறுதல் அப்பாவி உயிர்கள் பலியாகி விட்டன? சொல்லி ஆறுதல் பெறக்கூட முடியாதபடி, சோகத்தைத் தாங்கித் தாங்கி உள்ளே வெந்து வெந்து. .. சீரழிந்து கிடக்கும் வாழ்க்கைகள்.. தொலைவிலிருந்து நட்சத்திரக் கன்னியர்கள் கேலியாகக் கண்களைச் சிமிட்டுகின்றார்கள். உண்மைதான் எங்கள் நிலை கேலிக்குரியதாகத்தான் போய் விட்டது. சுடர்க் கன்னியரே! உங்கள் கண் சிமிட்டலைப் போன்றது தான் எங்களது காலகட்டமும். இதற்குள் இருந்து கொண்டுதான் இத்தனை குத்து வெட்டுக்கள்...புரண்டு, தவழ்ந்து, வளர்ந்த மண்ணில் சொந்தம் கொண்டாட எம்மால் முடியவில்லை. புகுந்த மண்ணில் ஒட்டி உறவாடிய எம்மால் முடியவில்லை. ஒருவிதத்தில் நாங்கள் மா பாவிகள் எந்த மண்ணில் நிற்கின்றோமோ அந்த மண்ணில் ஆத்மார்த்தமாக எம்மைப் பிணைத்து, கனவு கண்டு வாழ முடியாதபடி சபிக்கப் பட்டவர்களாகி விட்டோம். சபித்தது யார்? ஏன் எங்களிற்கிந்த நிலை? மனம் திறந்து வார்த்தைகளை வெளியே சொல்லத்தான் எம்மண்ணில் முடியவில்லையென்றால் ... மனம் விட்டு அழக்கூட முடியவில்லை இம் மண்ணில்.

தொடரும்

# "அரை குறை அடிமைகள்"

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

இவன் எதிர்பார்த்துக் கொண்டு வந்ததுபோல் ஆங்கிலேயருக்கு எண்ணெய் கொடுக்கும் அராப்காரனில்லை இந்த புது நோயாளி.

விழிகளுக்குள் இரண்டு தீபங்களைப் பொருத்தி வைத்து நேரடியாகப் பார்த்து நிலை தடுமாற வைக்கும் கூரிய பார்வையையுடைய இவன்...

ஒரு அமெரிக்க இந்தியன்

"ஹலோ டொக்டர்" படுத்திருந்த நோயாளியின் முகத்திலும் வார்த்தைகளிலும் சந்தோஷம்.

வெள்ளைக்காரன் தன்னையோ தன்னுடைய உடைந்த எலும்பையோ தொடக்கூடாது என்று சொன்னவன் இவன்தானா? இந்த நோயாளிக்கு எலும்பு முறிவால் நிறைய இரத்தம் போயிருக்கும் என்று சந்தேகிப்பதாக டொக்டர் ஸீரிவன் ஷூட் சொன்னான்.

அப்படியான ஒரு அறிகுறியுமில்லாமல் இவன் முகம் எவ்வளவு பிரகாசமாயிருக்கிறது?

தன் ஆச்சரியங்களைக் காட்டிக் கொள்ளாமல் டொக்டருக்கு ஹலோ சொல்லிக் கொள்கிறான். "எனக்குத் தெரியும் உலகத்தில் எந்த மூலையிலும் ஒரு இந்திய டொக்டர் இருப்பார் என்று" படுத்திருந்த நோயாளி சந்தோசத்துடன் சொல்கிறான்.

டொக்டர் சண்முகலிங்கம் நோயாளியின் உடைந்த காலைப் பார்க்கிறான். தன்னை ஒரு இந்திய டொக்டர் என்று நினைக்கிறான் இந்த அமெரிக்கன் இந்தியன். தான் இலங்கைத்தமிழன் என்று சொல்வதா? இந்தியத் தமிழனாய்த் தான் இருந்தால் இலங்கையில் இவ்வளவு துாரம் கஷ்டப்பட வேண்டுமா?

"வெள்ளைக்கார டொக்டரை வேண்டாம் என்று சொன்னாயாம் உண்மையா" இவன் நோயாளியைக் கேட்கிறான்.

நோயாளியின் முகத்தில் ஒரு புன் சிரிப்பு.

"நீயும் ஒரு இந்தியன் தானே நீ மட்டும் இந்த வெள்ளைக்காரரை நம்புவாயா" நோயாளி கேட்கிறான்.

"நான் இந்தியனில்லை இலங்கையன்! இலங்கைத் தமிழன்" டொக்டர் சண்முகலிங்கம் சொன்னான்.

நோயாளியின் முகத்தில் சொல்ல முடியாத ஆச்சரியம். லண்டன் ஆஸ்பத்திரியில் டொக்டராக இருப்பது ஆச்சரியமா?

லண்டனில் மட்டுமென்ன உலகத்தில் எந்த மூலையிலும்தானே இலங்கைத் தமிழன் டொக்டராகவோ எஞ்சினியராகவோ ஆசிரியனாகவோ இருக்கிறான். அதில் என்ன ஆச்சரியம்? இலங்கையில் வாழ முடியாமல் அனாதைகள் மாதிரி உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் ஓடிக் கொண்டிருக்கிறோம் என்பது இவனுக்குத் தெரிந்தால் ஆச்சரியப் படமாட்டான்.

"ஏன் அப்படி ஆச்சரியத்துடன் வாயைப் பிளக்கிறீர்கள்" பாதிகோபமும் பாதி கேள்வியுமாய் கேட்கிறான் டொக்டர் சண்முகலிங்கம்.

"நான் வாசித்துக் கொண்டிருப்பது இலங்கைத் தமிழரைப் பற்றித்தான் என்று உனக்குச் சொன்னால் ஆச்சரியப்படமாட்டீர்களே" நோயாளி தான் வாசித்துக் கொண்டிருந்த மகஸீனைக் காட்டுகிறான்." New Stateman" நியூ ஸ்ரேட்ஸ்மனில் தமிழரின் நிலைபற்றி (இலங்கையில்) ஒரு கட்டுரை வந்திருப்பது தெரியும். லண்டனில் எந்தப் பத்திரிகையைத் தொட்டாலும் ஏதோ ஒரு மூலையில் இலங்கைத் தமிழர் பற்றியும் அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பற்றியும் செய்திகள் வந்தபடியே இருக்கின்றன.

"உலகத்தில் நடக்கும் அநியாயங்களுக்கெல்லாம் மூலகாரணம் பிரித்தானிய ஏகாதிபத்தியம்தான் என்பது மறுக்க முடியாதது தானே" நோயாளியின் கேள்விக்கு மறு மொழி சொல்லாமல் உடைந்து போயிருக்கும் அவன் கால்களைப் பரிசோதனை செய்கிறான்.

சிக்கலான உடைவுதான், எவ்வளவு சேதம் என்று பார்க்க எக்ஸ்ரே எடுக்க வேண்டும். தனக்குள் நினைத்துக் கொள்கிறான்.

சிக்கலான உடைவு! எங்கள் தமிழர் எத்தனை சிக்கலான உடைவுகளைக் கண்டிருப்பார்கள்? ராமநாதனையும் ராமநாதனுடன் சேர்ந்த மற்றத் தமிழ் அரசியல் கைதிகளையும் எப்படி சித்திரவதை செய்து கொலை செய்திருப்பார்கள்.

"உங்கள் இந்தியாவைத் தேடவெளிக்கிட்டுத்தானே இந்த வெள்ளைக்காரர்கள் உலகத்தையே கூறு போட்டுக் கொண்டார்கள். இப்போது ஆகாயத்தையும் கூறு போடுகிறார்கள்" நோயாளி தன் கால் வேதனை மறக்க அலட்டுகிறானா அல்லது உண்மையாக இன்னுமொரு "இந்தியனைக் கண்ட சந்தோசத்தில் கதைக்கிறானா?

"இப்படி உடைந்து போயிருக்கும் காலை ஒரு வெள்ளைக்கார டொக்டர்களும் தொடக் கூடாது என்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன் நான் வராமலிருந்தால் என்ன செய்திருப்பாய்"

சண்முகலிங்கம் தன் தமக்கையைப் பார்க்கப் போகமுடியாமல் பண்ணிய நோயாளியைக் கடுமையாகக் கேட்கிறான்.

""சொறி டொக்டர் உங்கள் அத்தியாவசியமான திட்டம் எதையும் குழப்பிவிட்டேனா" கேட்ட நோயாளியை நிமிர்ந்து பார்க்கிறான் சண்முகலிங்கம்,



எவ்வளவு திடமான உறுதியான பார்வை இந்த அமெரிக்க இந்தியனுக்கு? இவர்களின் இனமும் ஒரு காலத்தில் வெள்ளையர்களால் கொடூரமாக கொலை செய்து கிட்டத்தட்ட அழிக்கப்பட்டதாகப் படித்திருக்கிறான் சண்முகலிங்கம்.

"அத்தியாவசிய திட்டம் ஒன்றுமில்லை. அவசரமாக என் தமக்கையைப் பார்க்க வேண்டும். இலங்கைத் தமிழரை பற்றித்தான் வாசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னாய். இலங்கையில் எங்களுக்கு என்ன நடக்கிறது என்றும் வாசித்திருப்பாய். குடும்பத்தில எல்லாரையும் இழந்து விட்டு எல்லாவற்றையும் இழந்து விட்டு என் தமக்கை வந்திருக்கிறாள். பார்க்கப் போக வெளிக்கிட்டபோது உன்னுடைய பிடிவாதம் குறுக்கிட்டது"

சண்முகலிங்கம் அலுத்துக் கொள்கிறான்.

இவ்வளவு நேரமும் ஓயாமல் பேசிக் கொண்டிருந்த அமெரிக்க இந்தியனின் முகத்தில் பரிதாபம்

"இலங்கைத் தமிழர்களுக்கு என்ன நடக்கிறது என்ன நடந்தது, ஏன் நடந்தது என்றுதான் வாசித்துக் கொண்டிருக்கிறேன். திட்டமிட்டு ஒரு இனத்தை அழிக்கப் பார்க்கிறார்கள். ஜேர்மனியில் ஹிட்லர் யூதர்களைப் படுகொலை செய்ததுபோல் இலங்கையில் தமிழர்களை அழிக்க பௌத்த அரசாங்கம் திட்டம் போடுவதாகத் தமிழ் மக்கள் பயப்படுவதையும் வாசித்தேன். இருபதாம் நூற்றாண்டிலும் இப்படி அநாகரிகமான மனித வேட்டைகளை" அமெரிக்க இந்தியனுக்கு பெருமூச்சு வருவது சண்முகலிங்கத்துக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களைத் தவிர மற்றவர்களுக்கு பத்திரிகைச் செய்தி வெறும் 'நியூஸ்' ஆக மட்டும்தான் இருக்கும் என்றுதான் சண்முகலிங்கம் நினைத்தான்.

ஆனால் இன்று எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பால் பிறந்து வளர்ந்த அமெரிக்க இந்தியன் உலகத்தில் கஷ்டப்படும் இலங்கைத் தமிழருக்காகப் பரிதாப படுவது நம்ப முடியாதிருந்தது.

ஆங்கிலேயே' நாட்டிலேயே ஆங்கில டொக்டர்கள் தன்னை தொடக்கூடாது என்று சொன்னவன் வெறும் திமிர் பிடித்தவனாக இருக்கலாம் என்றுதான் சண்முகலிங்கம் யோசித்தான். இப்போது பார்த்தால் ஏன் இந்த அமெரிக்க இந்தியன் வெள்ளையர்களை வெறுக்கிறான் என்று தெரிகிறது. அமெரிக்க ஆதிக் குடிகளான செவ்விந்தியரை அழித்தொழிந்த ஆதிக்க வாதிகளல்லவா இந்த வெள்ளையர்கள் அந்தக் கோபம் இன்னும் இதே அமெரிக்க செவ்விந்தியனுக்கு இருக்கிறதா?

"ஏன் இங்கிலீஸ் டொக்டர் உன்னைப் பார்க்க நீ அனுமதிக்கவில்லை" என்று சண்முகலிங்கம் கேட்டால் அவன் சொன்ன மறு மொழி!

"அமெரிக்காவின் ஆதிக்குடிகளான எங்களை அரை குறை அடிமைகளாக ஆக்கி வைத்திருக்கும் வெள்ளையர்களை நான் மதிக்கவா? நம்பி என் உடம்பையோ எலும்பையோ கொடுப்பேனா? எங்கள் இனத்தையே கிட்டத் தட்ட அழித்தொழித்த ஏகாதிபத்தியவாதிகள் இன்று என்னைப் போல ஒரு சாதாரண இந்தியனின் உடைந்து எலும்பில் அக்கறை காட்டுவார்கள் என நம்பவா" இந்தியன் கேட்ட கேள்விகளுக்கு மறுமொழி சொல்லாமல் எக்ஸ்ரே எடுப்பதற்கு விண்ணப்ப பத்திரம் நிரப்புகின்ற சண்முகலிங்கம்.

**அரை குறை அடிமைகள்!**

அமெரிக்காவில் செவ்விந்தியர்கள் மட்டுமா அரை குறை அடிமைகள்? பாலஸ்தீனத்தில் பாலஸ்தீனத்தார் நாடற்ற அரை குறையடிமைகள்! லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஆதிக் குடிகளான பல தரப்பட்ட செவ்விந்தியர்களும் அரை குறையடிமைகள்.

இலங்கை மலையகத்தைக் காடகற்றி நாடாக்கித் தோட்டமிட்டு தொழில் செய்து நாட்டின் வருமானத்திற்கே முதுகெலும்பான தமிழன் நாடாற்ற அரை குறையடிமை!

இன்னும் கொஞ்ச காலத்தில் ஆயிரக்கணக்கான வருடங்களாய் இலங்கையின் பிரசைகளான தமிழர்கள்! இப்போது மட்டும் இலங்கைத் தமிழருக்கு என்ன உரிமை கிடக்கிறது?

இலங்கையில் தமிழனாய்ப் பிறந்ததற்குப் பலன் அடி, உதை கொலை கொள்ளை கற்பழிப்பு உயிரோடு எரித்தல் என்பனதான் அரசாங்கத்தின் உதவி!

அக்கா அழுது கொண்டு சொன்னாள் "தம்பி இனி நாங்கள் இலங்கையில சிங்களவரோட ஒற்றுமையாக இருக்க ஏலாது. எங்களுக்கொரு தனிப்பிரதேசம், தனி அரசாங்கம் தேவை பாதுகாப்பாகத் தமிழர் சீவிக்கிறதுக்கு"

தமிழனுக்கு ஒரு தனிப் பிரதேசம்! சகோதரர்களுக்கும் சண்டை வந்தால் வீட்டைக் கொத்திப் பிரிக்கலாமா?

"ஆனால் தொந்தரவு செய்யும் சகோதரன் துரோகியாயிருந்தால் உறவுக்காக அடிமைப்படாமல் பிரிந்து" அப்படித்தான் ராமநாதன் சொன்னான்.

"எங்கள் வாழ்க்கைப் போராட்டத்தின் அடிப்படையுரிமை மனித உரிமையே சிங்கள அரசாங்கத்திடம் பறிகொடுத்து விட்டோம். அதை மீட்க, நாங்கள் எங்கள் உரிமையுடன் வாழ சிங்களவரிடமிருந்து பிரிந்துபோவதுதான் ஒரே ஒருவழி என்றால் நாங்கள் அதை முன் வைத்துப் போராட வேண்டும்".

ராமநாதன் பிற்போக்குவதியல்ல! தமிழ் வெறி பிடித்தவனல்ல! இலங்கையில் உள்ள ஒவ்வொரு இனமக்களுக்கும் இலங்கையில் சகல உரிமைகளும் இருக்க வேண்டும் என்று மனதார நம்புவன். நம்பியவன் ஆனால் சிங்கள அரசாங்கம் திட்டமிட்டுத்தமிழ் மொழியை, தமிழ்க் கலாச்சாரத்தை அழிக்கத் தொடங்கியது. தமிழ்ப் பிரதேசங்களையே சிங்களவர்கள் குடியேற்றி நிரப்புகிறது.

இப்போது சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களைக் கொலை செய்து... வார்த்தைகளால் படிக்க முடியாதளவு சித்திரவதை செய்து... அக்கா சொன்னாள், அவள் குடும்பத்துக்கு நடந்த கோர முடிவை. வீட்டைக் கொள்ளையடித்து, மருமகளைக் கற்பழித்து வாலிபப் பையன்களையும் மைத்துனர்களையும் கண்ட துண்டமாக வெட்டிக் குவித்தபின் அக்காவைச் சொன்னார்களாம் வீட்டுக்கு நெருப்பு வைக்கச் சொல்லி! அக்கா நெருப்பு வைத்தாளாம். பற்றியெரியும் நெருப்பில் அக்காவின் கைக்குழந்தையைப் பறித்து எறியும்போது அக்கா கதறிய கதறலில் இரங்கிய பக்கத்து வீட்டு சிங்கள ஆனால் கத்தோலிக்க பாதிரியார் காடையர்களுடன் கெஞ்சி குழந்தையைக் காப்பாற்ற அக்கா குழந்தையும் கையுமாய் உடம்பில் ஒரு துணியுமின்றி இருளில் ஒடித்தப்பினார்களாம்... என்ன கொடுமை. ... சண்முகலிங்கத்துக்கு நினைவு குமுறி நீர் துளிர்க்கிறது கண்களில்.

தமிழர்கள் அரைகுறை யடிமைகளாயில்லாமல் தங்கள் விடுதலைக்குப் போராடி வெற்றி பெற "ஒற்றுமையுடன்" உதைப்பார்களா? கேள்விக்குறி மனதில் படர டொக்டர் சண்முகம் சத்திரசிகிச்சை அறைக்குள் போகிறான்.

# மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி

## வீணை மைந்தன்

யாழ்ப்பாணத் தாயகத்தின் தமிழ்த் தாத்தா என்று எம்மவரால் இன்றும் போற்றப்படுபவர் அமரர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள். அதனுல்தான் போலும் நவாலியூர் பிறந்த தமிழ்ப்புலவர்களின் நாவில் நல்ல தமிழ் விளையாடுகிறது.

'மையோ மரகதமோ மழைமுகிலோ ஐயோ! ..இவன் வடிவு....! என்று கம்பர் பெருமான் காவியத்தலைவன் இராமச்சந்திரனின் அழகைப் பாடுகையில் வர்ணிக்க வார்த்தைகள் இல்லாதது போல் 'ஐயோ' என்று ஆச்சரியத்துடன் மெய் மறந்து இன்புற்றிருப்பது போன்று நவாலியூர் புலவர் சு.சொக்கநாதனின் குறவஞ்சிப் பாடல் வரிகள் என்னைச் சொக்க வைத்துவிட்டன.

தமிழ் அமுதமா இல்லை அமுதம் தமிழானதா என்று சில சமயம் தமிழ் மொழியின் இனிமையையும் செழுமையையும் எண்ணி வியப்பதுண்டு, இன்பமடைவதுண்டு. இறுமாப்படைவதுண்டு. அவ்விதம் படிப்பவரை மீண்டும் மீண்டும் படிக்கவும் பாடவும் பாடி கிரகிக்கவும் கொள்ளத் தக்க விதத்தில் புலவர் அவர்கள் அழகு தமிழை இலகுவாகக் கையாண்டிருப்பது இந்நூல்கள் தனிச் சிறப்பாகும்.

கடவுளரைக் காதலிப்பது என்பது தமிழ் இலக்கியத்திற்குப் புதிது அல்ல. பக்தி இலக்கியத்தின் ஒரு பரிணாமமே இறைவன் இறைவியிடத்துப் பக்தன் அல்லது பக்தை காதல் கொள்வது. பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் மேல் காதல் கொண்ட பக்தையின் பக்தி இலக்கியம் தான் சூடிக் கொடுத்த நாச்சியார் (ஸ்ரீ ஆண்டாள்) வரலாறு.

பக்த மீராவும் அவ்விதமே!

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் அடியார்களின் கர்மவினையறுப்பதற்கு இறைவன் இறைவியிடத்து ஏற்படும் காதலும் ஒரு நுழைவாயிலே. அது போன்றே ஈழத் ஒரு நாட்டின் மாத்தளையூர் மாதரசி, மாணிக்க மலையரசி முத்துமாரி முகத்தழகில் மெய்மறந்து நின்றவன் தான் இருமலச் செட்டியெனும் இந்நூலின் காதல் மகன். தேவி முத்துமாரி தேர் மீதமர்ந்து திரு உலா வந்த வேளை நிலவைப் பழித்த நீள் விழியாள் திரு முகத்தைப் பார்த்துக் காதல் கொண்ட சாமான்யனின் சராசரி மனித உணர்வு இந்தக் கவிதை நூலை யாப்பதற்குக் களமாயிற்று.

மானுடக் காதல் நிறைவேறுவதிலேயே பல நடைகளும், சோதனைகளும் உள்ள இக்காலத்தில் 'இறைவியின்' மேல் காதல் கொண்ட மானுடன் நிலை என்னவாயிருக்கும். இறைவன் அல்லது இறைவியை அடைவது எப்படி? மும்மலங்களில் மூழ்கிக் கிடக்கும் மானிடன் பற்றற்றானைப் பற்றுவது எப்படி?

மானுடக் காதல் வேறு, தெய்வத்தின் மேல் கொள்ளும் காதல் வேறு! இரு வகைக்கும் உள்ள வேறுபாட்டை 'குறவஞ்சி' இறைவியை அடையும் வழி எவ்விதம் என இருமலச் செட்டிக் குரைப்பதன் மூலம் உலகியலாருக்குத் தெளிவு படுத்தப்படுகிறது.

பக்திச் சுவை மிகுந்திருக்கும் பழந்தமிழ் இலக்கியங்கள் இன்னும் ஏற்றமுடன் இருப்பதற்கு தெய்வபக்தியே காரணம்.

இன்றைய காலகட்டத்தில் ஈழமக்கள் வாழ்வியல் தடம்புரண்டு போகாமல் போவதற்கு இறைவழிபாடுகளே எக்காலத்திற்கும் பொருந்தும்.

இந்நூலைப் படிப்பவர் இவ்வுண்மையை ஆழமாகப் புரிந்துணர வேண்டும்.

பாமர மக்களிடையே வாழையடி வாழையாகப் பாடிவரக் கூடிய வகையில் பாடப்பெறும் பாடல்கள் பள்ளு, சிந்து, குறவஞ்சி போன்ற பாடல்களாகும். அந்த வகையில் எதிர்காலத்திலும் பாடக்கூடிய வகையில் பழந்தமிழ் இலக்கியம் பாங்கின்படியும் இலகுவாகவும் விருத்தம், கண்ணி அகவல் சிந்து, கும்மி, கலிப்பா வெண்பா, என்று பல் சுவையுடனும் ஒசை நயங்களுடனும் மரபு வழிக் கவிதையின் மாட்சியை இந்நூலில் புலவர் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்

புதுமைத் தமிழும், பழங்கவிதைப் பாங்கும் ஒருங்கிணைந்து எக்காலத்தவர்களாலும் படித்து இரசிக்கக் கூடிய குறவஞ்சிப் பாடல்கள் குற்றால அருவிபோல ஜில்லென்று இருக்கிறது.

இளங்கோவையும் கம்பனையும் கூடச் சில இடங்களில் அழைத்து அறிமுகம் செய்வது போல் கவிதை யாப்பு முறைகள் மிக ஆழமாகக் கையாளப்பட்டுள்ளது இந் நூலின் தனிச்சிறப்பாகும்.

வறண்ட பாலை நிலம் போல் தற்காலப் புலம் பெயர்ந்த தமிழ் கவிதை உலகம் வறட்சியான வார்த்தைகளால் நிரப்பப்பட்டுவரும் வேளை இது!

பாலையில் நீருற்று போல் தமிழ் அமுதைப் பருகச் சொல்லிப் பாடியுள்ள புலவர் சொக்கநாதன் குறவஞ்சிப் பாடல்கள் புலம்பெயர்ந்தோர் வறட்சியில் ஓர் வத்ருத இலக்கியச் சுனையாகும்.

குளிர் நிலவன் அழகையும் தென்றலின் தழுவலையும் பூக்களின் நறுமணத்தையும் அனுபவிப்பது போன்ற சுகத்தை இந் நூலைப் படிக்கும் தோறும் உணர்வதுதான் இப் பக்தி இலக்கியத்தின் பெருமையாகும்.

**ஈழம் ஒரு தொடர்கதை**
**2ம் பாகம்**
**அடுத்த வார முதல்**
**ஆரம்பமாகிறது**

# வீடியோ வினியோகத்தினருக்கு ஓர் பணிவான வேண்டுகோள்

கீழ் காணும் கடை உரிமையாளர்களாகிய நாம் புதிய திரைப்பட வீடியோ கசட் ஒன்றுக்கு $15 விகிதம் மட்டுமே கொடுத்து பெறுவதாக தீர்மானித்துள்ளோம். நாங்கள் கசட்டுகளை வாடகைக்கு கொடுத்து பெறுவதிலுள்ள சிரமங்களை மனதிற் கொண்டே இத்தீர்மானத்தை எடுத்து உள்ளோம். எங்கள் வேண்டுகோளை மனதிற்கொண்டு ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம். எல்லா கடை உரிமையாளர்களும் எமது கோரிக்கைக்கு ஆதரவு கொடுத்து உதவுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

| | |
|---|---|
| BALA BROTHERS | 532–6809 |
| KUMARANS | 533–3512 |
| SIVA BROTHERS | 537–4818 |
| FASHION HOUSE | 588–3884 |
| ASKAI | 538–7400 |
| ANTONY BROTHERS | 516–3903 |
| VINAYAKAR STORE | 534–5526 |
| A K INTERNATIONAL | 536–2220 |

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

## வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னூன்டோ
## சரத் த சில்வா, ரஞ்சித் குமார

### தமிழாக்கம்; செ. லோகநாதன்

இவ்வாறு ஜேவிபி யினர் தமது தேசபக்த மாணவர் இயக்கம் மூலமாக அனைத்து பல்கலைக்கழகங்களையும் தமது பிடிக்குள் கொண்டு வருவதில் வெற்றி கண்டனர். பல்கலைக்கழகங்கள் ஜேவிபியின் பலம் பொருந்திய முகாம்களாக மாறின. என்றைக்கும் ஜேவிபி அரசியலின் தீர்க்கமானதும் மிகக் கூடுதலான அளவு வேலைகளைச் செய்ததுமான முக்கிய சக்தியாக பல்கலைக் கழக மாணவர்களே திகழ்ந்தனர். பல்கலைக் கழக மாணவர் மத்தியில் தமது சக்தியை உருவாக்கியது ஜேவிபியின் துரித வளர்ச்சிக்கும் பலத்துக்கும் காரணியாக அமைந்தது.

### ஜேவிபி மீண்டும் ஆயுதப்பாதையில

1983 ஜூலை வன்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்னும் பொய்க் குற்றச்சாட்டின் பேரில் ஜேவிபி உட்பட மூன்று கட்சிகள் மீது தடை விதித்த அரசாங்கம் பின்னர் ஜேவிபி தவிர்ந்த ஏனைய இரு கட்சிகள் மீதான தடையை மட்டும் நீக்கியதோடு ஜேவிபி வன்முறைச் செயல்களில் ஈடுபட வுள்ளது என மேலும் பொய்க் குற்றம் சுமத்தி ஜேவிபி மீதான தடையை தொடர்ந்தும் நீடித்தது. ஜனாதிபதி ஜெயவர்தனவுக்கு 1983ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08ம் திகதி விஜேவீர எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டவாறு அக்காலகட்டத்திலும் ஜேவிபி ஆயுதப்பாதையை முற்றாக தவிர்த்தே செயல்பட்டது. கட்சி மீது தடை விதிக்கப்பட்டு ஒருவருடத்திற்கும் மேற்பட்ட காலத்திற்கு வன்முறைச் செயல்களில் ஜேவிபி கவனம் செலுத்தவில்லை. தடையை நீக்கச் செய்து பாராளுமன்ற ஜனநாயக ஓட்டத்தில் பயணம் செய்யவே ஜேவிபி முயற்சித்தது.

ஆனாலும் ஜேவிபி அக்கால கட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் அவ்வாறு வன்முறைச் செயல்களில் ஈடுபடும் எண்ணம் கூட ஜேவிபி யிடம் இருக்கவில்லை என்பதையும் நன்றாக தெரிந்திருந்தும் அரசாங்கம் ஜேவிபி மீதான தடையை நீடித்ததன் நோக்கம் ஜே.வி.பியை ஓரளவு தூரத்துக்காவது வன்முறை அரசியலுக்கு தள்ளவும் பின்னர் அதைப் பயன்படுத்தி தனது அடக்கு முறை ஆட்சியை நியாயப் படுத்துவதற்கான பின்னணியை உருவாக்கவுமேயாகும்.

தடையை நீக்குமாறு அரசாங்கத்திடம் ஜேவிபி மீண்டும் மீண்டும் விடுத்த வேண்டுகோள்களும், ஏனைய அரசியல் கட்சிகளும் குழுக்களும் ஜேவிபி மீதான தடையை நீக்கக் கோரி செய்த வேலைகளும் பயனளிக்க மாட்டாது என்பது தெரியும்போது ஜேவிபி மீண்டும் ஆயுதப் போராட்டப் பாதையை நோக்கித் தள்ளப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஒரு புறம் தடை நீக்கப்படாததும் மறுபுறம் தேர்தல்களின்போது ஜனநாயகத்திற்கு மாறாக ஊழல், மோசடி, பலாத்காரம் பாவிக்கப்படுவதும் ஆகிய இரண்டு காரணங்களால் இனிமேல் அடியெடுத்து வைக்கவேண்டிய ஒரே ஒரு பாதை பலத்துக்கு பலத்தை பாவிப்பதே என்னும் முடிவுக்கு வர ஜேவிபிக்கு நேரிட்டது.

இதன் பிரகாரமே ஜேவிபி தலைமை 1984ல் பாதுகாப்பான ஸ்தானங்களை ஏற்படுத்தவும் ஆயுதம் பாவித்து பணம் தேடவும் தீர்மானித்தது. இத் தீர்மானத்திற்கு அமையவே ராகம சோமே என்றழைக்கப்படும் சமரப்புலிகே சோமசிறி என்பவரின் தலைமையின் கீழ் பணம் தேடுவதற்கான ஆயுதக் குழுவொன்று ஸ்தாபிக்கப பட்டது. இக் குழுவில் திலக் முனசிங்க, H.B ஹேரத், பியசேன ராமனாயக, லலித் விஜேரத்ன ஆகியோர் அங்கம் வகித்தனர். பின்னர் இக் குழுவின் தலைமைப் பொறுப்பு கப்ரால் என்றழைக்கப்படும் சமன் பியசிறி பெர்னூன்டோவிடம் ஒப்படைக்கப் பட்டது. இப் பிரதான குழுவின் கீழ் பிரதேசக் குழுக்களும் ஏற்படுத்தப் பட்டன. இக் குழுக்கள் பிரதேசங்களில் பணம் பறிக்கும் வேலைகளில் ஈடுபட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட பிரதேசக் குழுக்கள் பலவற்றின் தலைவர்கள், அங்கத்தவர்கள் பணம், பைசிக்கள் ஆகியவற்றை பறிக்கச் சென்று உயிரை இழந்த சந்தர்ப்பங்களும் உண்டு. கம்பஹா பிரதேசத்தின் குழுத் தலைவரான சுனில் அபேரத்ன 1985 ல் மோட்டார் சைக்கிள் ஒன்றை பறிக்கச் சென்ற சமயம் ஏற்பட்ட சம்பவங்களின் போது கடும் காயங்களுக்குள்ளாகி பொலீசாரிடமும் அகப்பட்டு பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்தார். அதே வருடம் மாத்தறைக் குழுவின் தலைவர் தல்பாவில தர்மே என்பவர் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளத்தை கொள்ளையடிக்க சென்ற சமயம் அம்பாந்தோட்டை பொலீசாரிடம் அகப்பட்டு கொல்லப்பட்டார். அநுராதபுர பிரதேசத்தின் மாணவர் பிரிவைச் சார்ந்த சரத் மல்லி எனப்படும் சரத் விஜேசிங்க கொள்ளை சம்பவமொன்றில் ஈடுபடும் போது இராணுவம் துப்பாக்கி பிரயோகம் செய்ததால் கொல்லப்பட்டார். 1985 ல் இடம்பெற்ற கலகமுவ வங்கிக் கொள்ளையே அக்காலகட்டத்தில் இடம் பெற்ற பெரும் கொள்ளைச் சம்பவமாகும். இக் கொள்ளைச் சம்பவத்தால் ஜேவிபியின் தலைவர்களில் ஒருவரான இந்திரே என்றழைக்கப்படும் அநுராதபுரத்தைச் சார்ந்த பால கைது செய்யப்பட்டார்.

பணம் தேடுவதற்காக செய்யப்பட்ட இவ்வாறான வேலைகளின் ஊடாக ஆயுதப் பிரிவின் வேலைகளுக்கும் அத்திவாரம் இடப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலும் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன. செல்லக் கதிர்காமம், ஹம்பேகமுவ, அம்பாறை, சியாம்பலாண்டுவ, சிவனொளிபாத பிரதேசம், சிங்கராஜா வனத்தை

அண்மித்த பிரதேசம் ஹனிதும ஆகிய இடங்களில் அமைந்துள்ள காடுகளிலும் கிராமிய மட்டங்களிலும் பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டன. சகல முழுநேர ஊழியர்களும் ஆயுத பயிற்சி பெறவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. 1987 முதல் அரைப் பகுதி வரையும் உருவகச் சித்திரக் குறிப்புகளைக் கொண்டே ஆயுத பாவனை பற்றி விளங்கப் படுத்தப்பட்டது. 85—86 காலத்தில் குழல் துப்பாக்கிகளும், குழல் நீளத்தால் குறைக்கப்பட்ட துப்பாக்கிகளுமே ஆயுதங்களாக இருந்தன. முகாம்களில் குண்டுகள் தயாரிப்பது பற்றி பயிற்சி அளிக்கப்பட்டதோடு ஆயுதக் களஞ்சியங்களை ஏற்படுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்டது. மாஜி பொலீஸ் சிப்பாயான ஈஸ்வரகே ஆரியசேன என்பவரை ஆரம்பத்தில் பயிற்சி அளித்தார். இவர் 1971 ஏப்பிரல் கிளர்ச்சி தொடர்பாகவும் சிறையிலிருந்தவர். பிற்காலத்தில் இராணுவ சேவையிலிருந்து விலகி தப்பியோடி வந்தவர்களும் பயிற்சி வழங்கினர்.

இக் காலத்தில் வடக்கில் யுத்தம் மும்முரமாக நடைபெற்ற காரணத்தால் மிகக் கூடுதலான அளவில் இராணு வத்திற்கு ஆட்கள் திரட்டப்பட்டனர். இவ் அவகாசத்தை மிகவும் உச்சமட்டத்தில் பிரயோசனப்படுத்திய ஜேவிபி யினர் தமது அங்கத்தவர்களை பாதுகாப்புப் படைக்குள் அனுப்பு வதையும் துரிதப்படுத்தினர். அவ்வாறு இராணுவத்துள் அனுப்பப் பட்டவர்களில் சிலர் பயிற்சியின் பின்னர் சிலவேளைகளில் ஆயுதங்க ளுடனும் இராணுவத்திலிருந்து தப்பி ஓடிவந்து ஜேவிபி யின் ஆயுதப் பிரிவை போஷித்தனர்.

ஆயுதப் பிரிவின் அங்கத்தவர்களுக்கு ஆரம்பகாலத்தில் பாரமளிக்கப்பட்ட பிரதான வேலைகளில் ஒன்று தகவல் சேகரிப்பதாகும். ஏனைய அனைத்து அரசியல் கட்சியிலும் உள்ள தீவிர இயங்குனர்கள், அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்பு படையினர் இல்லங்கள், அவர்களது பழக்க வழக்கங்கள், பொலீஸ் நிலையங்கள் போன்ற பலவிதமான தகவல்களை திரட்டும் பொறுப்பு இவர்கள் மீது சுமத்தப்பட்டது. பின்னர் அரசியல் இயக்கத்தின் ஓர் அங்கமாக தனியான யுத்த பிரிவொன்று நிறுவப்பட்டு சமன் பியசிறி பெர்ணுன்டோவுக்கு அதன் பொறுப்பும் அளிக்கப்பட்டது.

ஆயுதப் பிரிவின் வேலைகள் படிப்படியாக துரிதமடைந்தன. இவ்வாறு துரிதமடையும்போது ஜேவிபியின் உயர் மட்டத்தைச் சார்ந்தோரின் உரையாடலொன்று 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் கொஸ்லந்த பிரதேசத்தில் நடை பெற்றது. மாவட்டச் செயலாளர்கள், கட்சியின் மேல்மட்டத்தில் பொறுப்பு வாய்நத தீவிரமான ஊழியர்கள் 40க்கும் மேற்பட்டோர் இவ் உரையாடலில் கலந்து கொண்டனர். விஜேவீரவும் கலந்து கொண்ட இவ் உரையாடலில் ஜனநாயக ரீதியாக முன்னுக்குச் செல்ல முடியாது எனவும் வேறொரு மாற்றுப் பாதை அவசியம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. செய்யவேண்டிய போராட்டம் எவ்வித சுபாவத்தைக் கொண்டதாக இருக்கவேண்டும் எனவும் உரையாடப்பட்டதோடு "தேசபக்த போராட்டத்தை" முன்னெடுக்க வேண்டிய காலம் வந்த விட்டது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## தேசபக்த போராட்ட கட்டத்தில் ஜேவிபி

1985 ம் ஆண்டு டிசம்பர் மாதம் கொஸ்லந்த உரையாடல் நடைபெறும் போது விஜேவீரவால் எழுதப்பட்ட "தமிழ் ஈழப் போராட்டத்திற்கு தீர்வு என்ன?" என்னும் நூல் வெளிவந்துவிட்டது. ஆதிகால வரலாறு தொடக்கம் "பகுப்பாய்வு" செய்யும் விஜேவீர தனது "பல்துறைப் பாண்டியத்தால்" வாசகனை திணறடிக்கும் நோக்குடனேயே தமிழ் ஈழ போராட்டத்திற்கான தீர்வை பற்றி பேசத் தொடங்குகிருர். வாசகனை ஆரம்பத்திலிருந்தே திணடிறத்ததன் பின்னர் நூலாசிரியர் கூறுவது பற்றி கேள்வி கேட்பதற்குக் கூட வாசகன் பயப்படுவான். இவ்வளவு அறிவாற்றல் உள்ள ஒருவரின் கருத்துகளுக்கு எம்மைப் போன்ற அறிவு மட்டமானவர்கள் சவால் விட முடியுமா என்றே வாசகன் எண்ணுவான்.

உண்மையிலேயே அனேக வாசகர்களை அவ்வாருன நிலமைக்கு உள்ளாக்கிய விஜேவீரவின் இந்நூல் 'வடக்கின் போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் வழிநடாத்தப் படுகிறது. அதற்கு எதிராக போராடவேண்டும்' என்பதே பிரதானமாக முன்வைக்கப்பட்டுள்ள கருத்தாகும்.

இந்தியாவை சின்னுபின்னப் படுத்தும் ஏகாதிபத்திய அவசியத்துடன் தொடர்புகொண்டுள்ள வடக்கின் போராட்டம் அமெரிக்க ஏகாதி பத்தியத்தால் வழி நடத்தப்படுவதாகும். இந்தியா பலம் பொருந்திய நாடாக நிலவுமாயின் அமெரிக்க ஏகாதிபத்தியதிற்கு தென் ஆசியாவிலும் இந்து சமுத்திர வலயத்திலும நன்மை பயக்கமாட்டாது என்பதால் இந்தியாவை சின்னுபின்னப்படுத்த வேண்டும். வடக்கில் ஈழம் அமைப்பது, இந்தியாவின் மாநிலங்களைத் தனித்தின நாடுகளாக பிளவுபடுத்தும் திட்டத்தின் முதற்படியாகும். ஆதலால் ஏகாதிபத்திய சதியிலிருந்து இந்தியாவை காப்பாற்றவும் வலயத்தின் பாதுகாப்பைப் பேணவும் வேண்டுமாயின் வடக்கில் தனி நாடு கோரி நடைபெறும் போராட்டத்தை தோற்கடித்து நாட்டின் ஒருமைப்பாட்டை பேண வேண்டும், ஆகியவாறு கூறப்பட்டுள்ள இந்நூல் மூலம் வடக்கின் போராட்டம் ஒட்டு மொத்தமாக பயங்கரவாத போராட்டம் என வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் மூலமாக இனவாதத்தை மிருதுவான முறையில் பயன்படுத்தி அரசாங்க விரோதச் சக்திகளை தமது பக்கம் இழுத்தெடுப்பதற்கான கருத்தியல் அத்தி வாரமிடப்பட்டது. அச்சடிக்கப்பட்ட இந்நூல் ருபா 50 விலையில் இரகசியமாக விற்கப்பட்டதோடு தீவிலுள்ள அனேகமாக எல்லா பௌத்த கோவில்களுக்கும் நூலின் பிரதிகள் அனுப்பப்பட்டன. விஜேவீர எதனை எதிர்பார்த்து இந்நூலை எழுதினுரோ அவ் எதிர்பார்ப்பு பெருமளவில் ஈடேறியது என்றே கூறலாம்.

தொடரும்

# மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன? பானுவைக் கண்டேனடா தோழா

அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

என் மானசீகக் காதலி பானுப்பிரியா சென்ற வாரம் ரொறன்ரோவில் உள்ள தன் ரசிகர்களை ஆட்கொள்ள வந்திருந்தார். எனக்கோ இக்கட்டான நிலை.. என் இல்லக்கிழத்தி அபிதகுஜாம்பாளைக் கூட்டிச் சென்றால் சக்களத்திச் சண்டை வந்து விடுமே என்ற பயம். தனியே போவதென்றாலும் ஏதாவது 'பம்மாத்து' விட வேண்டும். மெதுவாக.. மிசிசாகாவில் ரெஸ்ரோறண்ட் ஒன்றில் பானை கழுவுவதற்கு ஆள் தேவை என்றிருக்கிறார்கள், போக வேண்டும் என்று 'அவிக்க'..

புறப்படும் போது 'தாயே, ஜக்கம்மா, விடை கொடு' என்று கூற.. விடயம் தெரியாமல் 'சென்று வா மகனே சென்று வா.. வென்று வா மகனே வென்று வா' என்று குங்குமம் வைத்து அனுப்ப பானுப்பிரியாவைப் பார்க்க... புறப்பட்டேன்.

நண்பர் வரும்வரை ஆட்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது....கனடாவில் பொருளாதார மந்த நிலை பற்றி சொல்பவர்கள் தமிழர்களைக் கண்டால் நம்ப மாட்டார்கள். இப்படியான நிகழ்ச்சிக்கு குடும்பமாக வந்திருந்தார்கள் பலர். பேத்தி முதல் பேரன் வரையான மூன்று தலைமுறையினர்.. இவ்வளவு பணம் எங்கே கி(ை)டக்கிறது?

இளவட்டங்கள் பானுப் பிரியாவையும் (எனது வில்லர்கள்?) மோகினியையும் (அட.. பேய், பசாசுகளை எல்லாம் காசு கொடுத்துப்



பார்க்கிறார்களே என்று முதலில் யோசித்தால் இந்தப் பெண் ஒரு நடிகையாம்) பார்க்க ட்ரிம்மாக கோட், சூட், கமரா, சங்கிலி (காட்டவும் வீசவும்?) சகிதம் வர.. Prince of Love பிரசாந்தைப் பார்க்க இளம் பெண் கூட்டம் சல்வார் காமிஸ் எனப்படுகின்ற தமிழ்ப் பண்பாட்டு உடை சகிதம் வந்திருந்தார்கள். ஒரு பெண் திருமணப் பெண் போல தலைநாகம் சகிதம் வந்திருந்தார். ஒருவேளை இடுப்பில் தாலியைச் சொருகி வந்து பிரசாந்திடம் நீட்டுவாரோ என்று பயந்து கொண்டிருந்தேன்.

நிகழ்ச்சி வழமை போல.. தாமதமாய் தொடங்க.. அந்த நம்பிக்கையில் நண்பர் தாமதமாய் வர. . நான் வாயிலில் காத்திருந்தேன். நான் அறு(சு)வையில் முன்பு பானுப்பிரியா பற்றி எழுதியது நிச்சயமாய் பானுப்பிரியாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நண்பர் வரும்வரை வாசலில் நின்று நண்பரையும் நிகழ்ச்சியையும் பார்த்துக் கொண்டிருக்க.. உள்ளே மேடையில் தோன்றிய பானுப்பிரியா 'மறைந்திருந்தே பார்க்கும் மௌனமென்ன.. எங்கிருந்தாலும் உன்னை நான் அறிவேன்.. உன்னை என்னையல்லால் வேறு யார் அறிவார்' என்று பாட... உடம்பு ஜில்லிட்டது.

உள்ளே போக காதல் இளவரசன் பிரசாந்தும் மோகினியும் சினிமாப் பாட்டொன்றுக்கு ஆடிக் கொண்டிருந்தார்கள். பாவம் சின்னப் பையன்! தியாகராஜன் தன் மகனை ஏதோ வேள்விக்கு கடா வளர்த்த மாதிரி வளர்த்திருக்கிறாரோ என்று நினைக்கத் தோன்றியது. சிம்புவை ராஜேந்தர் வளர்ப்பது மாதிரி...

வீரகேசரியைப் பார்த்தால தமிழகத்தில் பிரசாந்தைத்தவிர வேறு யாரும் ஹீரோக்கள் இல்லை என்ற மாதிரி ஒரே விளம்பரம்.. முன்னைய காதல் மன்னன் ஜெமினி காதல் தாத்தாவாக.. இளவரசனாக இருந்த கமலஹாசன் ஏதோ மன்னராக முடிசூட்டப்பட்டு விட்டார் என்ற மாதிரி. .. இளவரசன். கமல் காதல் இளவரசனாக இருந்தாலும் கமல் விசயமே வேறு.. சினிமாவில் கொஞ்சமாவது 'புத்திஜீவித் தனத்தைக் காட்டுகின்றவர்' என்ற அளவில் திறமையைக் காட்டி முன்னேறியிருக்கிறார். இப்போது இந்த காதல் இளவரசனிடம் அப்படி ஏதும் ஸ்டொக் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வெறும் கவர்ச்சியை மட்டும் நம்பினால் சுரேஷ் மாதிரி இவரும் மறக்கப்பட்டு விடுவார். (சுரேஷ் என்ற இளம் நடிகரை ஞாபகமுண்டா? அசப்பில் பிரசாந்த் மாதிரியே இருப்பார்)

இதற்குள் பிரசாந்துக்கு 'ரசிகர்' கடிதம் எழுதி இங்கு வரும் போது சந்திப்பதாகக் கூறிய 'ரசிகைகளும்' உண்டாம்.

இந்த நடிகர்கள் உணவு உண்ணச் சென்ற இடத்தில் ரசிகை வெள்ளம் நின்றதாகவும் கதை..

மோகினி என்ற பெண்ணும் இதே நிலைமை தான். நடனத்தின் போது ரசிகர்களுக்கு முத்தங்களை காற்றில் வீசுவதும் மேசை பூராவும் ஓடித் திரிவதுமாக இந்தப் பெண் இருந்தார். பரிதாபமாய் இருந்தது. காற்றில் பறந்து வந்த முத்தங்களை ஏந்தி ஜொள் வடித்தவர்களையும் பார்க்க பரிதாபமாய் இருந்தது.

மண்வெட்டியான் தியாகராஜன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.. இவர் ஒரு நடிகர் என்பதை விட ஒரு promoter என்றால் பொருந்தும். கொழும்பில் பிரசாந்த் நைட் வைத்தது இவர் தானாம். அடிக்கடி மேடையில் உடை மாற்றிய இவரை இரண்டாம் தடவை சுமார் குங்கும நிறத்தில் கோட் சூட்டுடன் பார்க்க சிரிப்பு வந்தது.

பானுப்பிரியாவின் பாடல்கள்

எல்லாமே எனக்காகத் தான் தெரிவு செய்யப்பட்டனவோ.... கோழி கூவும் நேரமாச்சு.. தள்ளிப் போ மாமா என்றார். பின்னர் வந்து 'மாலையில் யாரோ மனதோடு பேச' என்றார். 'என்னோடு தான்' என்று கூச்சலிடலாம் என்றால் சூழ இருந்த வில்லர் குழாம் என்னைத் துவம்சம் செய்து விடுமோ என்ற பயமாக இருந்தது.

நடிகைகளில் கவர்ச்சியையும் இளமையையும் நம்பி மூலதனம் செய்தவர்கள் பலர் திரையோடு போய் விட்டார்கள். ஸ்ரீபிரியா முதல் குஷ்பு வரை இதுதான் நடந்தது. அந்தந்தக் காலத்தில் ஓகோ என்று ஜொள்ளு வடிக்கப்பட்டவர்கள் இவர்கள். ஜெயமாலினியும் சிலுக்குவும் இதுதான். கடைசியில் தேடுவாரற்ற நிலையில் இருக்கிறார்கள்.

நடிகைகளில் கொஞ்சமாவது திறமையைக் காட்டியதால் தான் கே. ஆர்.விஜயா முதல் லட்சுமி வரை, சுகாசினி முதல் ரேவதி வரை நல்ல பெயரைத் தக்க வைத்துக் கொள்ள முடிகிறது. இந்த வரிசையில் பானுப்பிரியாவுக்கும் ஒரு 'பொட்டன்ஷியல்' இருப்பதாக அழகனைப் பார்த்து நினைத்துக் கொண்டேன். ஆனால் அதன் பின்னர் பெயர் சொல்லும் அளவுக்கு எதுவும் வந்ததாக கேள்விப்பட்டதில்லை.

லண்டன் நிகழ்ச்சியில் ஒன்றில் பானுப்பிரியா ஹிந்திப்பாடலுக்கு ஆடிய ஆட்டத்தைப் பார்த்ததும் வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது.

ஆனால் நிகழ்ச்சியில் கொஞ்சமாவது 'கிரியேட்டிவாக' செய்தவர்கள் இடிகரை முருகேசுவும் சின்னி ஜெயந்தும் தான். இடிகரை முருகேசு எந்தப் பொருளையும் இசைக்கருவியாக்கும் திறமை அற்புதமானது. இரும்புத் துண்டு, மரத்துண்டு என்று எதையுமே விட்டு வைக்காமல் அற்புதமான ஒலிகளை எழுப்புகிறார் மனிதர்.

மற்றவர் சின்னி... மிமிக்ரி கலையில் வெளுத்து வாங்குகிறார். வாத்யார் குரல், வாரியார் குரல், சிவாஜி குரல், நம்பியார் குரல், கமல் குரல், ரஜனி குரல் என்று பல்வேறு குரல்களில் பேசினார். நகைச்சுவை கலந்த கிண்டல் தனம் ரசிக்கக் கூடியதாகவே இருந்தது. அடிக்கடி கைதட்டலும், சிரிப்பொலியும் சின்னிக்குத் தான் அதிகமாகக் கிடைத்தது.

ஏற்கனவே எக்கச்சக்கமான கலைஞர்கள் வருவதாக அறிவித்திருந்து எண்ணி எண்ணி ஆறு பேரே வந்திருந்தார்கள். இசைக்குழு என்று எதுவுமே வரவில்லை. இறுதியாக ஆபந்பாந்தனாக வந்தவர் சரா லோகநாதன். இமேஜ் இசைக்குழுவின் தாபகர்.

இதற்கு முதல் நாள் நிகழ்ச்சியிலும் இவரை இசையமைக்கும்படி கேட்ட போதும், மலையன்பன் உடனான நட்புக் காரணமாக அவரது புன்னகை மலர் வெளியீட்டில் கலந்து கொண்டார். (ஒரு விசயம்: புன்னகை மலரின் கௌரவ விருதை சரா லோகநாதனுக்கு கொடுத்தவர் தாயகம் ஆசிரியர். இது எப்படி இருக்கு?) கம்பியூட்டர் உதவியுடன் பல சாதனைகள் புரியும் சரா ஏற்கனவே வைரமுத்து போன்றோரின் பாடல்களுக்கு இசையமைத்து இசைநாடா வெளியிட்டிருக்கிறார். அவரது இசையமைப்பில் ஹரிபாஸ்கர், நிர்மலா, யூட்சன் போன்றவர்கள் பாடினார்கள்.

வழமையில் பெரிய பாடகர்களின் நிகழ்ச்சிகள் நடைபெறும் போது நிகழ்ச்சியை நேரத்துக்கு தொடங்குவதற்காக சிறிய இசைக்குழுக்களை கொண்டு நிகழ்ச்சியை ஆரம்பிப்பார்கள். இந்த தருணங்களில் கிடைக்கும் கொஞ்ச நேரத்தையும் உச்ச அளவுக்கு பயன்படுத்த வேண்டுமாயின், நல்ல பெயரைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் பாடல்கள் அனைத்துமே.. அனைத்துமே கிக்கான பாடல்களாக இருக்க வேண்டும். அத்துடன் நடிகைகளைப் பார்க்க வந்த கூட்டம்.. சில கட்டங்களில் பொறுமையையும் இழக்கும். இதில் நிச்சயமான கவனம் தேவை. ஓரிரு பாடல்களைத் தவிர மற்ற சில பாடல்கள் பொருத்தமற்றவையாக இருந்தன. குறிப்பாக யூட்சன் பாடிய பாடல்.. ஏற்கனவே மனதில் நிற்காத பாடல்.. யூட்சன் அற்புதமாகப் பாடக் கூடியவர். சிறிநிவாஸின் குரல் இவருக்கு கை வந்தது. சே 'தொண்டை' வந்தது. அது பயன்படுத்தப்படவில்லை. குரல் வளம் எல்லாப் பாடகர்களுக்கும் இருந்தாலும் (சில இடங்களில் எகிறியதுதான்) ரசிகர்கள் மெய்மறந்து கரகோஷம் போடும் அளவில் இருக்கவில்லை.

இவ்வளவையும் சொல்லி விட்டு, அதை விட 'கலை' நிகழ்ச்சிகளை வாரி வழங்கிய நம் ரசிகர்கள் பற்றி சொல்லாமல் விட முடியுமா? பாடல்களின் போது சிலர் உண்மையில் 'கலை'யில் தான் ஆடினார்கள். சிலர் 'கலை' வந்த மாதிரி ஆடினார்கள். சென்ற வாரம் தான் தாயகத்தில் பிரகிருதிகள் என்ற கவிதை வந்தது. நேரில் அப்படித் தான். தேவையில்லாமல் கூச்சல் போடும் கூட்டம்.. விலாசம் காட்ட..! ஜோக் என்று நினைத்து எதையாவது உளறும் கூட்டம்... பிரசாந்துக்கு சங்கிலி எறிந்து ஜென்மசாபல்யம் நீங்கப் பெற்ற ரசிகர் ஒருவர்... இடிகரை முருகேசுவுக்கு கூட 'ஜோக்' என்று நினைத்து எதையோ அலட்டிய கூட்டம்.. மற்றவர்களின் கவனத்தை தங்கள் மீது திருப்ப நினைக்கும் இந்தக் கும்பல்.. இதை விட புத்திசாலித் தனமாய் எதையாவது செய்வது நல்லது.

★ ★ ★

'ஏங்க, வந்தாலும் வந்தாங்க... ஒரு பேட்டி எடுக்கலீங்களா' என்று மேலிடத்தில் கேட்டேன். 'அடே, பையா.. பார்த்தியா கடைசியில்.. ஒரு நாலு வார்த்தை சொந்தமாய் அவங்களாலே சொல்ல முடிகிறதில்லை.. இவங்களைப் போய் 'தாயகத்தனமாய்' எதைக் கேட்க முடியும்? எத்தனை படம் நடிச்சிருக்கிறீங்க? இப்போ எத்தனை படத்தில நடிக்கிறீங்க? கனடாவில் உள்ள ரசிகர்கள் பற்றி என்ன நினைக்கிறீங்க? கனடா ரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? என்று கேட்க முடியும்? இதைத் தானே எல்லாரும் கேட்கப் போறாங்க.. பிறகெதுக்கு நாம்?' என்று பதில் வந்தது. கேட்டாலும் பத்து ஹிந்திப்படம், பதினைந்து தெலுங்குப் படத்தில் நடிக்கிறேன்பாங்க.. கனடா ரசிகர்கள் பண்பானவர்கள் என்பாங்க.. அடுத்த முறை நாங்கள் வரும் போது உங்கள் ஆதரவைத் தருவீங்கள் என்று நம்புகிறோம் என்பாங்க.. இதெல்லாம் கூட வேறு யாராவது எழுதிக் கொடுத்தால் தான் உண்டு.

## இருத்தலியல் விசாரணைகள்..

''இரண்டு விடைகளில் ஒன்றைத் தேர்ந்து
வெற்றிடம் நிரப்புக
ஜீவித்தல் என்பது யாதெனில்
ஒவ்வொரு அணுவின் உயிரும் துடித்து
எழுந்து நிமிர்ந்து
மண்புரட்டி, நிலம் கிழித்து வெளிக் கிளம்பி
இரண்டு துளிர்காட்டும் சிறு பயற்றம் முளையா?
அன்றேல்,
ஒவ்வொரு அணுவின் உயிரின் துடிப்பிலும்
சுருக்கு மாட்டி இறுகிச் செத்து நடக்கும் பிணமா?
அப்படியும் சொல்லலாம்
இப்படியும் சொல்லலாம்
என்றொரு விடையிருப்பின்
எவ்வளவு நன்றாக இருக்கும்.
* * *

ரஜீன்குமார் நிறைய எழுதிக் குவிப்பவர் அல்லர். ஆனால் நிறைவாகவும், கவிதை பற்றிய பிரக்ஞையோடும் எழுதுபவர். மன எழுச்சியினது ஆற்றுப்படுத்தப்பட்ட தத்ரூபமான பதிவுகளாக இவரது கவிதைகள் அமைவதால் படிமங்களில் புடமிடப்பட்ட ஒரு தன்மையைக் காண முடிகின்றது. பலவித கோணங்களில் இருத்தலை இவர் தரிசித்துள்ளார். இருத்தலிற்கு ஆதாரமான ஜனனம் பற்றிய இவரது பார்வை பெண்களின் பிள்ளைப்பேறுகால உபாதையை எமக்குத் துலாம்பரமாக இப்படிக் காட்டுகின்றது.

''வாந்தி முதலாய்
வலியால் துடித்து
முனகி...
முக்கி....
மலமும் கழிந்து
யோனி கிழிந்து
குருதி வழிந்து...
இவ்வளவு நிகழ்வும்
நடந்து முடிந்தது
தாதி ஒருத்தி
சேதி சொன்னாள்
'சுகப் பிரசவம்'

இருத்தலை வலியுறுத்தும் உரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உண்டு. இதனைக் கவிஞர்,

''நான் எனது அளவிலான
புதிய ஆடைகள் பெறும் வரை
பரிபூரண பிறந்த மேனியனாய்
ஓலமிட்டபடி,
உங்களை இடைஞ்சல் செய்வதில்
உறுதியாய் இருப்பேன்''

என்கின்றார்.

அகதி வாழ்வின் கொடூர நிலையை சித்தரிக்க இவர் எமக்குத் தரும் சில கவிதை வரிகள்.

'கணவன் இங்கே
மனைவி அங்கே
பத்து வருடமாய்
பணத்திற்காக
சிதிலமடைந்த
உறவைக் கவனி''

'அழு! அழு!
அகதித் தாகத்துடன்
தஞ்சநீருக்கு அலையும் நாயாய்
இந்து மா சமுத்திரமுமே
பொச்சம் தீர்க்காதென
அதையும் நாண்டினும்
எங்கெங்கு தாண்டினும்
நக்குத் தண்ணீரே!
இதோ, இன்னும் அழு!''
''தட்டுதல் ...தொங்கவிடல் ..
மண்டையில் போடுதல்...
'கொலை'' என்னும் சொல்லுக்கு
புது அகராதி
கை கட்டுதல்.. வாய் பொத்துதல்
...ஏங்குதல் என்பன
'உயிர்வாழுதல் என்பதன் மறு
அகராதி''
* * *

அர்த்தங்களுக்கு எதிரான மாயமான்களைக் காட்டும் அரசியல் கோஷங்களுக்குள் படைப்பிலக்கிய வாதிகள் சிக்கவேண்டும் என்ற எந்த விதியும் இல்லை. சிதையும் மனிதத்திற்காக இரங்குதலும், வாழ்வியல் சுமைகளை மறக்கக் கனவு காணுதலும் படைப்பாளிக்குத் தடுக்கப்பட்டதல்ல. புகலிடத்தில் வளரத் துடிக்கும் இருத்தல் தொடர்பான விசாரணைகளுக்கு வலிமை சேர்க்கும் அனைத்துத் தகைமைகளும் றஜீன்குமாரின் கவிதைகளுக்கு உள்ளன. இவரது கவிதைகள் தொடர்பான புதிய பார்வைகளும் தரிசனங்களும் அவசியம்.


**This newspaper is published by**
**Georgicka communications.**
**A member of**
**Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F",**
**Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினால்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

### தாயகம் சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**

**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ANTONY BROTHERS
516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

✪ தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்


✪ முத்திரை, சிகரெட், TTC Tickets,
Lottery Tickets
✪ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப்
பெறலாம்

✪ லேசர் இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,
பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

## SIVA'S TRADING CO LTD
321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

# சிவாஸ் ரேடிங் கோ

## 3852 FINCH AVE EAST
### KENNEDY/FINCH

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

**தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்**

**இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே**

---

# P.S.S.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

## TEL:609-0141

## 5210 FINCH AVE EAST #23
## (FINCH/MIDDLEFIELD)

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| VIDEO TRANSFER (ANY SYSTEM) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

**சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்**